# வவுனியாப் பல்கலைக்கழகம்

# ஆண்டறிக்கை

*2022*

*வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை 2022, மேற்படி ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயற்றிறன் பற்றிய நிறுவனக் கண்ணோட்டத்தை வழங்குகின்றது. இவ்வறிக்கை கல்வி அமைச்சு (உயர்கல்வி), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, வவுனியாப் பல்கலைக்கழகம் என்பவற்றால் குறிப்பிடப்படும் நியம வடிவங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்று-கின்றது.*

# தூரநோக்கு

*“நிலையான மாற்றத்துக்கான அறிவு முன்னேற்றத்திலும் அதன் பரவலிலும் சிறந்து விளங்கும் முன்னணி நிலையமாதல்”*

# பணிக்கூற்று

*“பிராந்தியத்தினதும் தேசத்தினதும் நிலையான அபிவிருத்திக்கும் பட்டதாரிகளை வலுவூட்டுவதற்குமான முழுமையான கூட்டுழைப்பு, கல்வித்தரம், புத்தாக்கத்துக்கான ஆராய்ச்சி என்பவற்றில் சிறந்து விளங்குதல்”*

# இலக்குகள்

- *உயர்கல்வியில் சருவதேச அங்கீகாரத்தை அடைய அனைத்துக் கற்கை நெறிகளினதும் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்தல்*
- *உலகளவில் வேலைவாய்ப்புப் பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்*
- *வளங்களினதும் முறைமைகளினதும் பயனுள்ள, பயனுறுதியான முகாமைத்துவம் மூலம் நல்ல நிருவாகத்தை ஏற்படுத்தல்*
- *கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் உகந்த சூழலை உருவாக்குவதற்காகப் பௌதிக, மனித வளங்களை உறுதிப்படுத்தல்*
- *பிராந்திய, தேசிய வளர்ச்சிக்காக அறிவைப் பரப்புதல்*
- *பாலினம், இனம், சமயம் போன்ற வேறுபாடுகளுடன் தொடர்புபட்ட விடயங்களில் நீதியையும் சமவுரிமையையும் நிலைநாட்டல்*


# நோக்கங்கள்

- கற்கைநெறிகளின் தரத்தையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தல்
- பட்டப்படிப்புகளுக்கு தேசிய / சருவதேச அங்கீகாரம் பெறல்
- ஆங்கிலமொழி, உளப்பாங்குத்திறன்கள், தகவல் தொழினுட்பம், முகாமைத்-துவத்திறன்கள் ஆகியவற்றில் மாணவர்களின் திறமையை மேம்படுத்தல்
- எல்லாப் பட்டப்படிப்புகளிலும் மாணவர்களை மையப்படுத்திய, கலப்புக் கற்றலையும் விளைவு அடிப்படையிலான கல்வி முறைகளையும் மேம்படுத்தல்
- முகாமைத்துவத் தகவல் முறைமையின் செயற்படுத்துகையை உறுதிப்படுத்தல்
- ஊழியர்களின் திறமையை அதிகரித்தல்
- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் மனித வளங்களையும் ஒழுங்கு-படுத்தலை உறுதிப்படுத்தல்
- அனைத்து ஊழியர்களும் மாணவர்களும் எண்மான, இலத்திரனியல் வளங்களைப் பயன்படுத்தும் தன்மையை உருவாக்கல்
- தரமான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி மனப்பான்மையையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தல்
- தேசிய மற்றும் சருவதேச மாநாடுகளை ஏற்பாடு செய்தல்
- பாலினம், மொழி, இனம், சமயம் ஆகியவேறுபாடின்றி சம வாய்ப்புகளை உறுதிப்-படுத்தல்
- மாணவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்

# விழுமியங்கள்

- மேன்மை : நாம் எமது ஊழியர்களினதும் மாணவர்களினதும் முழுவாற்றலையும் பயன்படுத்தி உயர்ந்த நிலையை அடைய ஆர்வமாகவுள்ளோம்.
- நேர்மை : நாம் செய்யும் எல்லாவற்றிலும் தொழில்முறையான, ஒழுக்கரீதியான தரங்களைப் பேணுகிறோம்.
- சமவுரிமையும் சமத்துவமும் : நாம் எல்லாநிலைமைகளிலும் சமவுரிமையையும் சமத்துவத்தையும் நிலைநாட்டிப் பன்முகத்தன்மையைப் பேணுகிறோம்.
- பொறுப்புணர்வு : நாம் புத்தாக்க மனநிலையுடனும் ஆக்கத்திறனுடனும் செயற்பட உறுதியளிப்பதுடன் பிராந்திய, தேசிய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கிறோம்.
- பரப்புதல் : நாம் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மூலம் அறிவைப் பரப்புகிறோம்.

# துணைவேந்தரின் பார்வையில்



வவுனியாப் பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பல்கலைக்கழகத்தின் சாதனைகள், அவற்றுக்கான பிரதிபலிப்புகள், முன்னோக்கிய சிந்தனைகள் ஆகியவை நிறைந்த ஆண்டாக 2022 ஆம் ஆண்டு அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் 2021 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாந்தேதி முதல் இலங்கையின் பதினேழாவது அரச பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டது. கடந்த ஆண்டில், கோவிட் 19 சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றுக்கு மத்தியில் எமது பல்கலைக்கழகப்பேரவை, ஊழியர்கள், மாணவர்கள், சமூகம் ஆகியவற்றின் ஆதரவுடன் பல விடயங்களை நாம் சாதித்துள்ளோம்.

பல்கலைக்கழகம் அதன் கல்விசார் நடவடிக்கைகளைத் தற்போதுள்ள பிரயோக விஞ்ஞானம், வியாபாரக் கற்கைகள், தொழில் நுட்பக் கற்கைகள் ஆகிய மூன்று பீடங்களுடன் முன்னெடுத்துச்செல்கின்றது. பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதன்மூலம், பிராந்தியத்தினதும் நாட்டினதும் அபிவிருத்தித் தேவைகளின் அடிப்படையில் எதிர்காலத்துக்காகப் பின்வரும் பீடங்களை முன்மொழிந்துள்ளோம்: மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம்; மருத்துவம்; சுகாதார விஞ்ஞானம்; சுற்றுலா, விருந்தோம்பல் முகாமைத்துவம்; நீருயிரின வளர்ப்பு, மீன்வளம் மற்றும் கடல்சார் கற்கைகள்; சுற்றாடல் விஞ்ஞானம்; கால்நடை; பட்டப்பின்படிப்புகள். இவற்றில் முன்னுரிமை அடிப்படையில், மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானபீடத்தையும் மருத்துவபீடத்தையும் தற்போது நிறுவ விரும்புகிறோம்.


குறிப்பிடத்தக்க தரமான ஆராய்ச்சிகள், மிகவுயர்தரமான கற்பித்தல், சக்திவாய்ந்த கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றுக்கூடாக உள்நாட்டிலும் உலகளாவியரீதியிலும் நம்மை எதிர்கொள்ளும் சவால்களை நாங்கள் எவ்வாறு அணுகுகின்றோம் அவற்றை எவ்வாறு எதிர்கொண்டு முன்னேறுகின்றோம் என்பதைக்கொண்டு எமது நற்பெயரைப் பேணிவருகிறோம். கடந்த ஆண்டு, பல்கலைக்கழகம் உள்ளூர் மற்றும் தேசிய தொழிற்றுறைகளுடன் இருபது புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இது கல்வித்துறைக்கும் தொழிற்றுறைக்குமிடையே ஒரு வலையமைப்பையும் ஒத்துழைப்பையும் உருவாக்கியுள்ளது. வாய்வழிச் சுகாதாரப் பிரிவை உருவாக்கியதன்மூலமும் தற்போதுள்ள சுகாதார நிலையத்தை மேம்படுத்தியதன்மூலமும் எங்கள் நிறுவனச் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம். மேலும், பல்கலைக்கழகமானது நல்லிணக்க நிலையம், மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு நிலையம், சருவதேசப் பிரிவு, சருவதேச ஆராய்ச்சி நிலையம், மக்கள் தொடர்புப் பிரிவு, கலாச்சார நிலையம், நல்வாழ்வு நிலையம், தொலை, தொடர் கல்வி நிலையம் போன்றனவற்றை நிறுவியுள்ளது.

எங்கள் பல்கலைக்கழகம் தொழில்முனைவோர், தொழிலதிபர்கள், விவசாயிகள் போன்றவர்களுக்கு வியாபார ஆலோசனை நிலையம், தொழிற்றுறைச்சமூக ஆதரவு நிலையம் ஆகியவற்றுக்கூடாக ஆதரவுக்கரம் நீட்டுகிறது. எமது கல்வியாளர்கள் இலங்கை மதிப்பீட்டுச் சங்கத்தினூடாகப் பாராளுமன்றத்தில் கொள்கை அபிவிருத்தியை மேற்கொள்வதற்குப் பங்களிக்கின்றனர்.

கற்பித்தல் எமது வாழ்க்கையை மாற்றுகிறது. எங்கள் மாணவர்களும் எங்கள் கற்பித்தலின் தரத்தைச் சிறந்ததாக அங்கீகரித்துள்ளனர். எமது பல்கலைக்கழகப் பட்டதாரிகள் உயர்ந்த ஆற்றல் தேவைப்படும் வேலைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு உயர்கல்வி வாய்ப்புகளையும் நாடிச்செல்கின்றனர். எங்கள் பட்டதாரிகள் தங்கள் வாழ்க்கையில் புதிய முயற்சிகளையும் புதிய திறமைகளையும் வெளிப்படுத்துகின்றனர். அனைத்துப் பட்டப்படிப்புகளிலுமுள்ள உள்ளக / கைத்தொழில் பயிற்சியானது தொழிற்றுறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பல்கலைக்கழகம் இந்திய, ரஷ்யப் பல்கலைக்கழகங்களுடன் புதிய கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன் சிறு நடுத்தர நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒரு புத்தாக்கமான கூட்டு ஒப்பந்தங்களுடன் கைச்சாத்திட்டுள்ளது. அத்துடன் பல்கலைக்கழகத்துக்குள்ளேயும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலும் பல விளையாட்டு நிகழ்வுகளை குறிப்பாக, எல்லே வெற்றிக்கிண்ணச் சுற்றுத்தொடரை நடாத்தியுள்ளது.

இவ்வாண்டின் நிறைவைக் குறிக்கும் இவ்வேளையில், எமது பேரவையின் பங்களிப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் நன்றிகூற விரும்புகின்றேன். எதிர்காலத்தில் எமது பல்கலைக்கழகத்தைக் கல்விசார் சிறப்பு நிலையமாகப் பிரகாசிக்கச் செய்வோம்.



பேராசிரியர் த. மங்களேஸ்வரன்
துணைவேந்தர்

## முக்கிய செயற்பாடுகளும் நிகழ்வுகளும் - 2022

- வவுனியாப் பல்கலைக்கழகத்தின் திறப்பு விழா பெப்ரவரி 11 இல் இடம்பெற்றது. இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் மேன்மை தங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள், இக்கல்வி நிறுவனத்தைச் சுயாதீன பல்கலைக்கழகமாக அங்கீகரிப்பதற்காக இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.
- மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தகவல் தொழினுட்ப நிலையக் கட்டடத்தையும் நல்லிணக்க நிலையத்தையும் மேற்படி திறப்பு விழா நாளில் திறந்து வைத்தார்.
- வவுனியாப் பல்கலைக்கழகம் தனது முதலாம் ஆண்டு நிறைவு விழாவை ஆகஸ்ட் 01 இல் கொண்டாடியது.
- அவுஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளையின் உதவியுடன் வாய்வழிச் சுகாதாரப் பிரிவு ஜூலை 18 இல் நிறுவப்பட்டது.
- யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் அதிகாரிகள் செப்டம்பர் 13 ஆம் திகதி வவுனியாப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்து பல்கலைக்கழக அபிவிருத்தி விடயங்கள், இருதரப்பு ஒத்துழைப்பு ஆகியன பற்றிக் கலந்துரையாடினர்.
- பிரித்தானியத் தூதுவர் மேதகு சாரா ஹல்டன் அவர்கள் ஒக்டோபர் 04 ஆம் திகதி வவுனியாப் பல்கலைக்கழக அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்தார்.
- பிரயோக விஞ்ஞானபீடம் நவம்பர் 2 இல் அதன் மூன்றாவது ஆய்வமர்வை (FARS 2022) நடாத்தியதுடன் அதன் வெள்ளி விழாவையும் அன்றைய தினம் கொண்டாடியது.
- வியாபாரக் கற்கைகள் பீடம் தனது நான்காவது ஆய்வு மாநாட்டை (RCBS 2022) நடாத்தியதுடன் அதன் வெள்ளி விழாவை ஜூலை 4 – 6 இல் கொண்டாடியது.
- தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் (RCAICT 2022) பற்றிய முதல் ஆய்வு மாநாட்டை அக்டோபர் 4 இல் நடாத்தியது.
- வவுனியா விஞ்ஞான இதழ் (ஆகஸ்ட், 2022), வவுனியா வியாபார முகாமைத்துவ இதழ் (நவம்பர், 2022) ஆகிய இரு ஆய்வு இதழ்கள் வெளியிடப்பட்டன.
- SLASSCOM நவம்பர் 17 இல் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்காகத் தகவல் தொழில்நுட்பத்துக்கும் வியாபாரச்செயன்முறை முகாமைத்துவத்துக்குமான தொழிற்கண்காட்சியை ஏற்பாடு செய்தது.
- நுண்-சிறிய நடுத்தர நிறுவனங்கள் வசதி மையம் டிசம்பர் 20 இல் திறக்கப்பட்டது.
- மக்கள் வங்கியின் சுயவங்கிப்பிரிவு நவம்பர் 17 இல் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- இலங்கை அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்தோரும் ஜெர்மன் தேசிய அளவியல் நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவும் சுற்றாடல் விஞ்ஞானப் பட்டப்படிப்பில் அளவியல் கற்கை அலகை அறிமுகப்படுத்துவதற்காக நவம்பர் 22 இல் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்தனர்.
- நாங்கு சருவதேச நிறுவனங்கள், ஆறு தொழில்முறை நிறுவனங்கள், பதினெட்டுப் பன்னாட்டுப் பெருநிறுவனங்கள் எங்கள் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

# பொருளடக்கம்


துணைவேந்தரின் பார்வையில் ........ v
முக்கிய செயற்பாடுகளும் நிகழ்வுகளும் - 2022 ........ vi
வவுனியாப் பல்கலைக்கழகம்: ஒரு சுருக்கமான பார்வை ........ x
1 அறிமுகம் ........ 1
1.1 பின்னணி ........ 1
1.2 நிறுவனக் கட்டமைப்பு ........ 2
1.3 ஆளும் அதிகாரசபைகள் ........ 3
1.3.1 பேரவை ........ 3
1.3.2 மூதவை ........ 4
1.3.3 ஆளும் அதிகாரசபைக் கூட்டங்கள் ........ 5
1.4 மாணவர் சமுதாயம் ........ 5
1.5 மனித வளங்கள் ........ 10
1.5.1 அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைகளும் தற்போதுள்ள ஊழியர்களும் ........ 11
1.5.2 கல்விசார் ஊழியர்களும் கல்விசார் உதவி ஊழியர்களும் ........ 13
1.5.3 நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ........ 15
1.5.4 கல்வி சாரா ஊழியர்கள் ........ 16
1.6 ஏனைய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு ........ 16
1.7 சமுதாயப் பங்களிப்பு ........ 17
2 மூலோபாய ஆய்வு ........ 19
2.1 பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் - சம்பந்தமான பகுப்பாய்வு (SWOT Analysis) ........ 19
2.2 எதிர்காலச் செயற்றிட்டம் ........ 20
3 பீடங்கள், நிலையங்கள், அலகுகள் ........ 25
3.1 பிரயோக விஞ்ஞானபீடம் ........ 25
3.2 வியாபாரக் கற்கைகள் பீடம் ........ 28
3.3 தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ........ 31
3.4 நூலகம் ........ 34
3.5 தர உத்தரவாத நிலையம் ........ 35
3.6 பல்கலைக்கழக ஆய்வு மற்றும் நெறிமுறைக்குழு ........ 36
3.7 சுகாதார நிலையம் ........ 37
3.8 பணியாளர் மேம்பாட்டு நிலையம் ........ 38
3.9 சருவதேசப் பிரிவு ........ 38
3.10 சகவாழ்வு நிலையம் ........ 40
3.11 விசேடதேவையுடையோருக்கான ஆதரவு நிலையம் ........ 41
3.12 கலாசார நிலையம் ........ 41
3.13 பல்கலைக்கழக வணிக இணைப்பு ........ 42
3.14 உடற்கல்வி அலகு ........ 43
3.15 தொழில் வழிகாட்டல் அலகு ........ 44
3.16 பாலினச் சமவுரிமைக்கும் சமத்துவத்துக்குமான நிலையம் ........ 45
3.17 சருவதேச ஆய்வு நிலையம் ........ 45
3.18 மக்கள் தொடர்புப்பிரிவு ........ 46
4 ஆய்வு, புத்தாக்கம், வெளியீடு ........ 47
4.1 அறிமுகம் ........ 47
4.2 இதழ்கள் / வெளியீடுகள் ........ 48
4.2.1 பிரயோக விஞ்ஞான பீடம் ........ 48
4.2.2 வியாபாரக்கற்கைகள் பீடம் ........ 51

*4.2.3* தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் .......... 54
*5* மூலதனவேலைகளும் திட்டமிடலும் .......... *56*
*5.1* அறிமுகம் .......... *56*
*5.2* பாரிய புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப்பணிகள் .......... *57*
*6* மாணவர் நலனோம்பல் .......... *58*
*6.1* அறிமுகம் .......... *58*
*6.1.1* பீடங்களின் மாணவர் அமைப்புகள் .......... 58
*6.2* நிதி உதவி .......... *58*
*6.2.1* மஹாபொல புலமைப்பரிசில் .......... 58
*6.2.2* உதவித்தொகை .......... 59
*6.2.3* மாணவர்களுக்கான விடுதி வசதிகள் .......... 59
*7* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை .......... *60*
*8* நிலையான வளர்ச்சி இலக்குகள் .......... *62*
*9* நிதி அறிக்கைகள் .......... *65*
*9.1* கண்ணோட்டம் .......... *65*
*9.2* நிதிக்கூற்றுகள் .......... *67*
*10* கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை .......... *86*
*10.1* அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆளும் அதிகார சபையின் அவதானிப்பு .......... *92*

## அட்டவணைகள் பட்டியல்


*அட்டவணை 1.1 அதிகாரசபைகளின் கூட்டங்கள்........ 5*
*அட்டவணை 1.2 பட்டப் படிப்பை நிறைவு செய்த மாணவர்களின் விபரங்கள்........ 6*
*அட்டவணை 1.3: பீடங்களால் நடத்தப்படும் பட்டப்படிப்புக்கள் ........ 6*
*அட்டவணை 1.4: பட்டப்படிப்புக்களில் புதிதாக நுழைபவர்கள் - உள்ளூர் அனுமதி........ 7*
*அட்டவணை 1.5: வெவ்வேறு கற்கை மட்டங்களின் அடிப்படையில் மொத்தப்பதிவு........ 8*
*அட்டவணை 1.6: பட்டம் பெற்றோர் - உள்ளகப்பட்டதாரிகள் 2022 ........ 9*
*அட்டவணை 1.7: அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைகளும் தற்போதுள்ள ஊழியர்களும்........ 11*
*அட்டவணை 1.8: பீடங்களிலும் நூலகத்திலும் உள்ள கல்விப் பணியாளர்கள்........ 14*
*அட்டவணை 1.9: நிறைவேற்று உத்தியோகத்தர்கள்........ 15*
*அட்டவணை 1.10: கல்விசாரா ஊழியர்கள்........ 16*
*அட்டவணை 4.1 வெளியீடுகளின் எண்ணிக்கை தேசிய/சர்வதேசம், 2022........ 50*
*அட்டவணை 7.1 கணக்காய்வுக்கு முந்திய செயற்பாடுகள்........ 64*


## படங்களின் பட்டியல்


*படம் 1.1 நிறுவனக் கட்டமைப்பு........ 2*
*படம் 1.2 பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள்-2022 ........ 5*
*படம் 1.3 மாணவர் சேர்க்கை........ 7*
*படம் 1.4 மனித வளங்கள் ........ 10*
*படம் 1.5 பல்கலைக்கழகத்தில் மொத்தமாகவுள்ள நிரந்தர ஊழியர்கள் 177 பேரினதும் வகைகள். 13*
*படம் 1.6: கல்விசார் ஊழியர்களும் கல்விசாரா உதவி ஊழியர்களும்........ 13*
*படம் 2.1 SWOT பகுப்பாய்வு........ 20*
*படம் 3.1: சுகாதார மையத்தில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை (நோய் மூலம்) ........ 39*

## வவுனியாப் பல்கலைக்கழகம்: ஒரு சுருக்கமான பார்வை

*அதிகரித்துவரும் உயர்கல்வித்தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, 1990-களில் அனைத்து மாகாணங்களிலும் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்-கழகக் கல்லூரி 1991 இல் வவுனியாவில் நிறுவப்பட்டது.*

*இக்கல்லூரி 1997 ஏப்ரல் 01 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இவ்வளாகத்தில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றின் மூலம் பிரயோக விஞ்ஞானபீடம், வியாபாரக் கற்கைகள் பீடம் ஆகிய இரு பீடங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் 2020 இல் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் உருவாக்கப்பட்டது.*




*இவ்வுயர்கல்வி நிறுவனம் மூன்று தசாப்தங்களாகப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மோதல்கள், மோதல்கள் அல்லாத சவால்கள் என்பவற்றை எதிர்கொண்டு வெற்றிகரமாக நாட்டிற்குச் சேவை வழங்கியது. இவ்-வளாகம் 2021 ஆகஸ்ட் 01 முதல் வவுனியாப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டுக்குரிய இந்நிறுவனம் பற்றிய விபரங்கள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை 2021 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கையாக ஆண்டறிக்கை 2022 அமைந்துள்ளது.*

# 1 அறிமுகம்

## 1.1 பின்னணி

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தொடக்கவிழா 2022 பெப்ரவரி 11 இல் நடைபெற்றது. இக்கல்வி நிறுவனத்தின் அந்தஸ்தை வளாகத்திலிருந்து பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தி அங்கீகரிப்பதற்கான இந்நிகழ்வில் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி உயர்திரு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.



தொடக்கவிழா

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர அமைவிடம் வவுனியாவிலிருந்து சுமார் பத்து (10) கிலோமீற்றர் தொலைவில், வவுனியா - மன்னார் வீதியில் சோபாலபுளியங்குளம், பம்பைமடு என்ற இடத்தில் கையகப்படுத்தப்பட்ட நூற்றறுபது (160) ஏக்கர் அரச நிலத்தில் காணப்படுகின்றது.

இருப்பினும், வவுனியா வளாகமானது பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படுவதற்கு முன்னர் வவுனியா நகரில் 2010 ஆம் ஆண்டுவரை செயற்பட்டுவந்தது. பின்னர் 2011 ஆகஸ்ட் 01 முதல் வியாபாரக் கற்கைகள் பீடம் அடிப்படை வசதிகளுடன் பம்பைமடுவுக்கு இடமாற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து பிரயோக விஞ்ஞானபீடமும் ஏனைய கல்வி, நிருவாகக் கிளைகளும் பம்பைமடுவுக்கு இடமாற்றப்பட்டன. தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் 2020 இல் உருவாக்கப்பட்டது.


வவுனியாப் பல்கலைக்கழகம் இலங்கையின் தலைநகரத்திலிருந்து தூரத்திலுள்ளவொரு தேசியப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைவதில் தொடர்ந்தும் சவால்களைச் சந்தித்துவருகின்றது. எவ்வாறாயினும் படிப்படியாக அது தன்னுடைய நவீன, சர்வதேசப் பண்பினைக் கட்டியெழுப்பிக்கொண்டுவருகிறது. இலங்கையின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் வரும் மாணவர்கள், பணியாளர்கள் அணுகக்கூடியதாகப் பல்கலைக்கழகத்தின் அமைவிடம் அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில் நுட்பச் சூழலானது சருவதேசத் தகவல்கள், வள நிலையங்கள், நூலகம் என்பவற்றை எளிதாக அணுக உதவுகிறது. அத்துடன் பல்கலைக்கழகத்தின் வனச்சூழல் இயற்கையோடிணைந்த கல்வி வாழ்க்கையை வாழ வழிகோல்கிறது. சமுதாயத்துக்குக் கற்பித்தல், ஆராய்ச்சி, சேவை ஆகியவற்றை வழங்குவதற்காகப் பொருளாதாரரீதியாக உயிர்ப்பான புதுமையான அணுகுமுறைகளைக் கைக்கொள்வதன்மூலம் இஃது அதன் இலக்குகளை நோக்கி மெதுவாக முன்னேறி வருகிறது. மேலும் இது சமூக நல்லிணக்கம், பண்பாட்டுப் பல்வகைமை, சமவாய்ப்பு, ஐக்கியம் என்பவற்றை வளர்க்க ஏதுவான பல்கலாச்சார, பல்லின, பல்சமய மாணவர்களையும் பணியாளர்களையும் கொண்டுள்ளது. இங்கு கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி என்பவற்றுக்கு இடையூறின்றி, உகந்த சூழலில் பீடங்களும் ஏனைய நிலையங்களும் சீராக இயங்கிவருகின்றன.

2022 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகமானது கல்வி, ஆராய்ச்சி, கலாச்சாரம், நலன், வணிகமயமாக்கல் என்பவற்றை எளிதாக்குவதற்காக நல்லிணக்க நிலையம், மாற்றுத்திறனுடையோர் ஆதரவு நிலையம், கலாச்சார நிலையம், சருவதேச ஆராய்ச்சி நிலையம், மக்கள் தொடர்பு அலகு, சருவதேசப் பிரிவு, பல்கலைக்கழக வியாபார இணைப்பு ஆகியவற்றை நிறுவியது.

பல்கலைக்கழகச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன், மருத்துவபீடம், நீருயிரின வளர்ப்பு, மீன்வளம் மற்றும் கடல்சார் கற்கைகள் பீடம், சுகாதார விஞ்ஞானபீடம், சுற்றுலா, விருந்தோம்பல் முகாமைத்துவப்பீடம், மனிதப்பண்பியல் மற்றும் சமூகவிஞ்ஞானபீடம், சுற்றாடல் விஞ்ஞானபீடம், கால்நடைப்பீடம், பட்டப்பின்படிப்புகள் பீடம் ஆகியவற்றை எதிர்காலத்தில் நிறுவுவதற்கு இப்பல்கலைக்கழகம் முன்மொழிவுகளை மேற்கொண்டுள்ளது.

விரும்பினால் மூன்றாம் ஆண்டுடன் வெளியேறும் வசதிகொண்ட நான்காண்டு காலப்பகுதிகொண்ட எட்டுச் சிறப்புப் பட்டப்படிப்புகளை இப்பல்கலைக்கழகம் தனது பத்துத்துறைகளுக்கூடாக வழங்குகின்றது. மேலும் இஃது இந்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மாணவர் சமுதாயத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்வதுடன் அச்சமுதாயம் பண்பாட்டுப்பல்வகைமையைப் புரிந்துகொண்டு செயலாற்றவும் வழிகாட்டுகிறது.

## 1.2 நிறுவனக் கட்டமைப்பு




உருவபடம் 1.1 நிறுவனக் கட்டமைப்பு

## *1.3 ஆளும் அதிகாரசபைகள்*

### *1.3.1 பேரவை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 44வது பிரிவின் மூலமும் அதன் திருத்தமான 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 24வது பிரிவின் மூலமும் பல்கலைக்கழகப் பேரவை உருவாக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் பின்வருவோர் அதன் உறுப்பினர்களாகத் திகழ்ந்தார்கள்.*

| | | |
|---|---|---|
| தலைவர் | பேராசிரியர் த. மங்களேஸ்வரன் | துணைவேந்தர் |
| செயலாளர் | திரு. ந. இராஜவிசாகன் | பதிவாளர் |
| பீடங்களின் பீடாதிபதிகள் | பேராசிரியை (திருமதி) அ. நந்தகுமாரன் (ஜூன் 16 வரை)<br>கலாநிதி (திருமதி) ஜெ. நிமலன் (ஜூன் 17 இலிருந்து) | பீடாதிபதி, பிரயோக விஞ்ஞானப் பீடம் |
| | கலாநிதி யோ. நந்தகோபன் | பீடாதிபதி, வியாபாரக் கற்கைகள் பீடம் |
| | திரு. ச. ஷெ. ச. சுதாகரன் | பீடாதிபதி, தொழில்நுட்பக்கற்கைகள் பீடம் |
| மூதவையின் பிரதிநிதிகள் | கலாநிதி ச. விஜயமோகன் | சிரேஷ்ட விரிவுரையாளர் தர. II, உயிரியல் விஞ்ஞானத்துறை |
| | பேராசிரியர் அ. புஷ்பநாதன் | முகாமைத்துவப் பேராசிரியர், முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மைத்துறை |
| ப.மா.ஆ. ஆல் நியமிக்கப்-பட்ட உறுப்பினர்கள் | திரு. ஞானசேன கோனாபினுவல | முன்னாள் மாவட்ட ஆளுநர், சருவதேச லயன்ஸ் கழகம் |
| | திருமதி எச். எம். தமயந்தி ஹேரத் (செப். 29 வரை) | சட்டத்தரணி |
| | கலாநிதி ச. நாகமுத்து தணிகாசலம்பிள்ளை (செப். 30 இலிருந்து) | ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம் |
| | திரு. கே. ஜி. ப்ரிட்டோ | முன்னாள் பதிவாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் |
| | பேராசிரியர் காமினி சேனாநாயக்க | தகைசார் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர், உருகுணைப் பல்கலைக்கழகம் |
| | மருத்துவர் மு. மலரவன் | விழிப்புலன் வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை |
| | திரு. பி. எம். ஹிஷாம் | சட்டத்தரணி / சத்தியப் பிரமாண நொத்தாரிசு / பொது ஆணையாளர் |
| | பொறியியலாளர் திரு. ந. ஸ்ரீஸ்கந்தராசா | முன்னாள் நீர்ப்பாசனப் பணிப்பாளர் |

### *1.3.2 மூதவை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 46 (2) வது பிரிவின் மூலமும் அதன் திருத்தமான 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலமும் பல்கலைக்கழகப் பேரவை உருவாக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் பின்வருவோர் அதன் உறுப்பினர்களாகத் திகழ்ந்தார்கள்.*

| | |
|---|---|
| துணைவேந்தர் | பேராசிரியர் த. மங்களேஸ்வரன் |
| பீடங்களின் பீடாதிபதிகள் | |
| பிரயோக விஞ்ஞானம் | பேராசிரியை (திருமதி) அ. நந்தகுமாரன் (ஜூன் 16 வரை) |
| | கலாநிதி (திருமதி) ஜெ. நிமலன் (ஜூன் 17 இலிருந்து) |
| வணிகக் கற்கைகள் | கலாநிதி யோ. நந்தகோபன் |
| தொழில்நுட்பக் கற்கைகள் | திரு. ச. ஷெ. ச. சுதாகரன் |
| நூலகர் | திரு. ச. சண்முகதாசன் (பதிற்கடமை) |
| துறைத்தலைவர்கள் | |
| உயிரியல் விஞ்ஞானத்துறை | கலாநிதி (திருமதி) ஜெ. நிமலன் (ஜூன் 16 வரை) |
| | கலாநிதி ச. விஜயமோகன் (ஜூன் 17 இலிருந்து) |
| பௌதிக விஞ்ஞானத்துறை | கலாநிதி சி. கிருஷாந்த் |
| வியாபாரப்பொருளியல் துறை | திருமதி பௌ. மே. கொட்வின் பிலிப் |
| ஆங்கிலமொழி கற்பித்தல் துறை | கலாநிதி ஞா. ஜெயசீலன் |
| நிதி மற்றும் கணக்கியல் துறை | கலாநிதி (திருமதி) கோ. கலைநாதன் |
| மனிதவள முகாமைத்துவத்துறை | திரு. சி. ஹரிகரன் |
| முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மைத் துறை | கலாநிதி அ. ருக்ஷான் |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை | திரு. சூ. அ. ஜூட் லியோன் |
| செயற்றிட்ட முகாமைத்துவத்துறை | திரு. சி. திருஞானசம்பந்தர் |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை | திரு. வி. செந்தூரன் |
| பேராசிரியர்கள் | |
| பிரயோக விஞ்ஞானம் | பேராசிரியை (திருமதி) அ. நந்தகுமாரன் (செப். 5 இலிருந்து) |
| தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் | |
| பிரயோக விஞ்ஞானம் | கலாநிதி இ. நகுலன் |
| | கலாநிதி ச. விஜயமோகன் (ஜூன் 16 வரை) |
| | பேராசிரியை (திருமதி) அ. நந்தகுமாரன் (ஓக. 1 - செப். 4) |
| | திரு. பா. யோகராஜா (செப். 5 இலிருந்து) |
| வியாபாரக் கற்கைகள் | பேராசிரியர் அ. புஷ்பநாதன் |
| | திருமதி ஜா. சா. தேவரூபன் |
| தொழில்நுட்பக் கற்கைகள் | செல்வி பு. ருக்ஷானி |
| | திரு. வீ. வினோகரன் (மார்ச் 15 இலிருந்து) |
| பதிவாளர் – மூதவையின் செயலாளர் | திரு. ந. இராஜவிசாகன் |

### 1.3.3 ஆளும் அதிகாரசபைக் கூட்டங்கள்


*2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அதிகாரசபைகளினதும் ஏனைய அமைப்புகளினதும் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்றன. அவற்றின் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கீழே காட்டடப்பட்டுள்ளன.*

*அட்டவணை 1.1 அதிகாரசபைகளின் கூட்டங்கள்*

| கூட்டங்கள் | வழமை | விசேடம் |
|---|---|---|
| பேரவை | 11 | 1 |
| மூதவை | 12 | 1 |
| நிதிக்குழு | 12 | - |
| விடுப்பு மற்றும் விருதுக்குழு | 12 | - |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு | 3 | - |
| பீடச்சபைகள் | | |
| • பிரயோக விஞ்ஞான பீடம் | 12 | 9 |
| • வியாபாரக் கற்கைகள் பீடம் | 9 | 1 |
| • தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் | 12 | 1 |

## 1.4 மாணவர் சமுதாயம்

*2022 ஆம் ஆண்டில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2326 ஆக இருந்ததுடன் அவ்வாண்டில் மூன்று பீடங்களிலுமாக மொத்தமாக 708 மாணவர்கள், ஆங்கிலமொழி மூலத்திலான 14 பட்டப் படிப்புகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 307 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.*





*படம் 1.2 பட்டப்படிப்பை நிறைவுசெய்த மாணவர்கள்-2022*

*அட்டவணை 1.2 பட்டப்படிப்பை நிறைவுசெய்த மாணவர்களின் விபரங்கள்*

| பீடங்கள் | துறைகள் | 2021 | 2022 |
|---|---|---|---|
| பிரயோக விஞ்ஞான பீடம் | பௌதிக விஞ்ஞானம் | 97 | 90 |
| | உயிரியல் விஞ்ஞானம் | 19 | 31 |
| வியாபாரக்கற்கைகள் பீடம் | கணக்கியல் | 42 | 48 |
| | மனிதவள முகாமைத்துவம் | 12 | 10 |
| | வியாபாரப் பொருளியல் | 24 | 03 |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 02 | 17 |
| | செயற்றிட்ட முகாமைத்துவம் | 34 | 38 |
| | முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை | 25 | 18 |
| தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | -- | 52 |
| மொத்தம் | | 255 | 307 |

*அட்டவணை 1.3 பீடங்களால் நடத்தப்படும் பட்டப்படிப்புகள்*

| பீடம் | பட்டக்கற்கைநெறி | SLQF மட்டம் | மொழி மூலம் |
|---|---|---|---|
| பட்டப்படிப்புகள் | | | |
| பிரயோக விஞ்ஞானம் | தகவல் தொழினுட்பத்தில் விஞ்ஞானமாணி | 5 | ஆங்கிலம் |
| | தகவல் தொழினுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | 6 | ஆங்கிலம் |
| | விஞ்ஞானமாணி (பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடல்) | 5 | ஆங்கிலம் |
| | கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | 6 | ஆங்கிலம் |
| | விஞ்ஞானமாணி (சூழல் விஞ்ஞானம்) | 5 | ஆங்கிலம் |
| | சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | 6 | ஆங்கிலம் |
| வியாபாரக் கற்கைகள் | வியாபார முகாமைத்துவமாணி | 5 | ஆங்கிலம் |
| | கணக்கியலிலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | 6 | ஆங்கிலம் |
| | வியாபாரப்பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | 6 | ஆங்கிலம் |
| | மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | 6 | ஆங்கிலம் |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | 6 | ஆங்கிலம் |
| | செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி | 5 | ஆங்கிலம் |
| | செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | 6 | ஆங்கிலம் |
| தொழில் நுட்பக் கற்கைகள் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சிறப்புமாணி | 6 | ஆங்கிலம் |




*படம் 1.3 மாணவர் சேர்க்கை*

*அட்டவணை 1.4 பட்டப்படிப்புகளில் புதிதாக நுழைபவர்கள் - உள்ளூர் அனுமதி*

| பீடங்கள் | பட்டப்படிப்பு கற்கைநெறி | ஆட்சேர்ப்புச் செய்யக்கூடிய எண்ணிக்கை | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|
| பிரயோக விஞ்ஞான பீடம் | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்) | 117 | 76 |
| | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | 121 | 67 |
| | தகவல் தொழில்நுட்பம் | 143 | 112 |
| வியாபாரக் கற்கைகள் பீடம் | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 216 | 194 |
| | செயற்றிட்ட முகாமைத்துவம் | 101 | 108 |
| தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 175 | 151 |
| மொத்த புதிய உட்சேர்க்கை - பட்டப்படிப்பு மாணவர்கள் - உள்ளூர் நுழைவு | | 873 | 708 |

*அட்டவணை 1.5 வெவ்வேறு கற்கை மட்டங்களின் அடிப்படையில் மொத்தப் பதிவு.*

| பீடம் | கற்கைநெறி | 1 (2020/2021) | | 2 (2019/2020) | | 3 (2018/2019) | | 4 (2017/2018) | | மொத்தம் | | முழு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | |
| பிரயோக விஞ்ஞான பீடம் | பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) | 42 | 34 | 45 | 54 | 26 | 26 | 03 | 12 | 116 | 126 | 242 |
| | பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) | 06 | 61 | 21 | 66 | 14 | 36 | 12 | 18 | 53 | 181 | 234 |
| | தகவல் தொழில்நுட்பம் | 53 | 59 | 46 | 77 | 38 | 52 | -- | 17 | 137 | 205 | 342 |
| வியாபாரக் கற்கைகள் பீடம் | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 57 | 137 | 54 | 159 | 55 | 79 | 40 | 82 | 206 | 457 | 663 |
| | செயற்றிட்ட முகாமைத்துவம் | 23 | 85 | 20 | 76 | 16 | 55 | 34 | 18 | 93 | 234 | 327 |
| தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 98 | 53 | 125 | 59 | 63 | 29 | 61 | 30 | 347 | 171 | 518 |
| ஒட்டுமொத்தம் | | 279 | 429 | 311 | 491 | 212 | 277 | 150 | 177 | 952 | 1374 | 2326 |


*பாலின அடிப்படையில், தேர்ச்சி பெற்ற 307 மாணவர்களில் 58% ஆனோர் பெண்கள். தேர்ச்சி பெற்ற மொத்த மாணவர்களில் 48% ஆனோர் சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.*

*அட்டவணை 1.6 பட்டம் பெற்றோர் - உள்ளகப் பட்டதாரிகள் 2022*

| பீடம் | கற்கைநெறி | பட்டம்பெற்ற மாணவர்களின் முழு எண்ணிக்கை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதற்றரச் சித்தி | | இரண்டாம் மேற்பிரிவுச் சித்தி | | இரண்டாம் கீழ்ப்பிரிவுச் சித்தி | | சாதாரண சித்தி | | மொத்தம் | |
| | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| பிரயோக விஞ்ஞானம் | தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி | -- | 02 | 02 | 04 | -- | 07 | 04 | 05 | 06 | 18 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி | | | | | | | 03 | 01 | 03 | 01 |
| | தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | -- | 01 | 01 | 08 | 02 | 08 | 01 | -- | 04 | 17 |
| | விஞ்ஞானமாணி (பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடல்) | -- | 01 | -- | 06 | 01 | 01 | 16 | 03 | 17 | 11 |
| | கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | -- | 03 | 02 | 04 | 02 | -- | 02 | -- | 06 | 07 |
| | விஞ்ஞானமாணி (சூழல் விஞ்ஞானம்) | -- | -- | -- | 04 | 01 | 02 | 07 | 10 | 08 | 16 |
| | சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | 01 | 04 | 01 | -- | -- | 01 | -- | -- | 02 | 05 |
| வியாபாரக் கற்கைகள் | செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி | 01 | 01 | 03 | 07 | 02 | 10 | 03 | 11 | 09 | 29 |
| | வணிக முகாமைத்துவமாணி | -- | -- | -- | -- | 02 | 02 | 12 | 02 | 14 | 04 |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவ-மாணி | -- | 02 | 03 | 02 | -- | 02 | 05 | 03 | 08 | 09 |
| | கணக்கியலிலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | -- | -- | 02 | 11 | 02 | 08 | 14 | 11 | 18 | 30 |
| | மனிதவளமுகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | -- | -- | 01 | 01 | -- | 05 | 02 | 01 | 03 | 07 |
| | வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி | -- | -- | -- | 02 | -- | -- | -- | 01 | -- | 03 |
| தொழில்நுட்பக் கற்கைகள் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச்சிறப்புமாணி | -- | 01 | 01 | 02 | 04 | 03 | 27 | 14 | 32 | 20 |
| ஒட்டுமொத்தம் | | 02 | 15 | 16 | 51 | 16 | 49 | 96 | 62 | 130 | 177 |

## *1.5 மனித வளங்கள்*

*2022 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகம் தனது கல்வி நடவடிக்கைகளைப் பத்துத்துறைகளைக் கொண்ட மூன்று பீடங்களுக்கூடாக மேற்கொண்டது. வவுனியாப் பல்கலைக்கழகம் 70 கல்விசார், 14 நிருவாக, 9 கல்விசார் உதவி, 83 கல்விசாரா ஊழியர்களைக் கொண்ட அணிமூலம் தனது இலக்குகளை நோக்கிப் பயணித்தது. வவுனியா வளாகம், வவுனியாப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டபோது, 240 ஊழியர்களுக்கான புதிய பணிநிலைகள் கோரப்பட்டபோதிலும் 23 பேருக்கான புதிய பணிநிலைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.*




உருப்படம் 1.4 மனித வளங்கள்


### *1.5.1* அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைகளும் தற்போதுள்ள ஊழியர்களும்

*அங்கீகரிக்கப்பட்ட 342 பணிநிலைகளில், 177 நிரந்தரமாக நிரப்பப்பட்டுள்ளன; 54 தற்காலிகமாக நிரப்பப்பட்டு 111 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. பல்கலைக்கழகம் தனது முழுமையான செயற்பாட்டையும் மேற்படி அறுபத்தெட்டுச் சதவீதமான (68%) ஊழியர்களைக்கொண்டே முன்னெடுத்துச் செல்கின்றது. இது புதிதாக நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகத்துக்குப் பெருஞ்சவாலாக உள்ளது.*

*அட்டவணை 1.7: அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைகளும் தற்போதுள்ள ஊழியர்களும்*

| சேவைவகை | பணியாளர்வகை | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை | தற்போதுள்ள ஊழியர்கள் | | | | | | | | | | | | நிரந்தரப் பணிநிலை வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தரம் | | | தற்காலிகம் | | | ஒப்பந்தம் | | | ஒப்படை | | | |
| | | | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | |
| ஆரம்ப மட்டம் | ஆரம்பத்தரம் - ஆற்றலற்ற | *U – PL 1* | *75* | *09* | *04* | *13* | *02* | *01* | *03* | - | - | - | - | - | - | *62* |
| | ஆரம்பத்தரம் – அரை ஆற்ற-லுள்ள | *U – PL 2* | *13* | *08* | - | *08* | - | - | - | - | - | - | - | - | - | *05* |
| | ஆரம்பத்தரம் – ஆற்றலுள்ள | *U – PL 3* | *09* | *08* | - | *08* | *01* | - | *01* | - | - | - | - | - | - | *01* |
| இரண்டாம் மட்டம் | முகாமைத்துவ உதவியாளர் – தொழினுட்பம் அல்லாத | *U – MN 1* | *55* | *15* | *22* | *37* | - | - | - | - | - | - | - | - | - | *18* |
| | முகாமைத்துவ உதவியாளர் – தொழினுட்பம் | *U – MT 1* | *12* | *05* | *01* | *06* | - | - | - | - | - | - | - | - | - | *06* |
| | இணை உத்தியோகத்தர்கள் – பிரிவு *2* | *U – MN 2* | *02* | *01* | *01* | *02* | - | - | - | - | - | - | - | - | - | - |
| | இணை உத்தியோகத்தர்கள் – பிரிவு *1* | *U – MN 3* | *05* | *02* | *02* | *04* | - | - | - | - | - | - | - | - | - | *01* |
| | பதவிநிலை உதவியாளர் / உயர் மற்றும் முதுநிலை உதவியாளர் | *U – MN 4* | *05* | *03* | *02* | *05* | - | - | - | - | - | - | - | - | - | - |


| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூன்றாம் மட்டம் | கல்விசார் உதவி - பிரிவு 2 | U – AS 1 | 08 | 02 | 02 | 04 | 01 | 02 | 03 | - | - | - | - | - | - | 04 |
| | இளநிலை நிறைவேற்று உத்தியோகத்தர்கள் / முகாமையாளர்கள் | U – EX 1 | 13 | 05 | 03 | 08 | - | - | - | - | - | - | - | - | - | 05 |
| | கல்விசார் உதவி - பிரிவு 1 | U – AS 2 | 09 | 05 | - | 05 | 02 | - | 02 | - | - | - | - | - | - | 04 |
| முதுநிலை மட்டம் | மருத்துவ அலுவலர் | U – MO 1 | 01 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - |
| | தலைமை மருத்துவ அலுவலர் | U – MO 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | மத்தியநிலை நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | U – EX 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | மத்தியநிலை நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | U – EX 2(a) | 06 | 03 | - | 03 | - | - | - | - | - | - | 01 | - | 01 | 03 |
| | முதுநிலை நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | U – EX 3 | 02 | 02 | - | 02 | - | - | - | - | - | - | - | - | - | - |
| | விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் / முதுநிலை விரிவுரையாளர் | U – AC 3 | 86 | 36 | 33 | 69 | | | | | | | 03 | - | 03 | 17 |
| | இணைப்பேராசிரியர்கள் | U – AC 4 | | | | | | | | | | | | | | |
| | பேராசிரியர்கள் / முதுநிலைப் பேராசிரியர்கள் | U – AC 5 | | | | | | | | | | | | | | |
| | பேராசிரியர்கள் | U – AC 5 | 05 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 05 |
| | துணைவேந்தர் | U – AC 5 | 01 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - |
| | முதுநிலை உதவி நூலகர் / உதவி நூலகர் | U – AC 3 | 02 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| | நூலகர் | U – AC 5 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| மொத்தம் | | | 310 | 107 | 70 | 177 | 06 | 03 | 09 | - | - | - | 04 | - | 04 | 133 |




*படம் 1.5 பல்கலைக்கழகத்தில் மொத்தமாகவுள்ள நிரந்தர ஊழியர்கள் 177 பேரினதும் வகைகள்*

### *1.5.2 கல்விசார் ஊழியர்களும் கல்விசார் உதவி ஊழியர்களும்*

*பல்கலைக்கழகத்தின் 95 அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணிநிலைகளில் 70 நிரந்தர ஊழியர்களாலும் ஏனையவை தற்காலிக ஊழியர்களாலும் பூர்த்தி செய்யப்பட்டன. 70 நிரந்தர ஊழியர்களில் 54% ஆனோர் முதுநிலைமட்டத்தைச் சேர்ந்த கல்வி ஊழியர்கள். அங்கீகரிக்கப்பட்ட தற்காலிகப் பணிநிலைகள் 32 ஐயும் பல்கலைக்கழகம் முழுமையாகப் பயன்படுத்துகிறது.*




*படம் 1.6: கல்விசார் ஊழியர்களும் கல்விசார் உதவி ஊழியர்களும்*

*அட்டவணை 1.8: பீடங்களிலும் நூலகத்திலும் கல்விப் பணியாளர்கள்*

| வகை | சம்பள அளவு | அங்கீகரிக்கப்பட்டுள்ள பணிநிலை | நிலவும் வெற்றிடங்கள் | | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | பெண் | ஆண் | முழு எண்ணிக்கை | |
| முதுநிலைப் பேராசிரியர் (தலைவர்) | U AC 5 (I) | 5 | - | - | - | 5 |
| பேராசிரியர் (தலைவர்) | U AC 5 (II) | | - | - | - | |
| முதுநிலைப் பேராசிரியர் | U AC 5 (I) | | - | - | - | |
| பேராசிரியர் | U AC 5 (II) | 86 | 1 | 2 | 3 | 17 |
| இணைப்பேராசிரியர் | U AC 4 | | - | - | - | |
| முதுநிலை விரிவுரையாளர் (தரம் 1) | U AC 3 (I) | | 6 | 6 | 12 | |
| முதுநிலை விரிவுரையாளர் (தரம் 11) | U AC 3 (II) | | 4 | 19 | 23 | |
| முதுநிலை விரிவுரையாளர் (மாறுநிலை) / விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத) | U AC 3 (III) | | - | 2 | 2 | |
| விரிவுரையாளர் | U AC 3 (IV) | | 3 | 2 | 5 | |
| விரிவுரையாளர் (தகுதிகாண்) | U AC 3 (IV) | | 19 | 5 | 24 | |
| நூலகர் | U AC 5 (I) | 1 | - | - | - | 1 |
| முதுநிலை உதவி நூலகர் (தரம் 1) | U AC 3 (I) | 1 | - | 1 | 1 | - |
| உதவி நூலகர் | U AC 3 (IV) | 1 | - | - | - | 1 |
| மொத்தத் தொகை | | 94 | 33 | 37 | 70 | 24 |
| கல்விசார் உதவி ஊழியர்கள் | U AS 2 | 9 | - | 5 | 5 | 4 |
| | U AS 1 | 8 | 2 | 2 | 4 | 4 |
| மொத்தம் | | 17 | 2 | 7 | 9 | 8 |
| தற்காலிக உதவி விரிவுரையாளர் | U AC 2 (நிலையான) | 7 | 18 | 3 | 21 | - |
| தற்காலிக பரிசோதனை செய்துகாட்டுநர் | U AC 1 (நிலையான) | 24 | 13 | 6 | 19 | - |
| தற்காலிக போதகர் | U AC 1 (நிலையான) | 1 | - | - | - | 1 |
| மொத்தம் | | 32 | 31 | 9 | 40 | 1 |

### *1.5.3 நிறைவேற்று உத்தியோகத்தர்கள்*

*22 பணிநிலைகளில், 14 நிரந்தரமாகவும் 04 ஒப்பந்த அடிப்படையிலும் நிரப்பப்பட்டுள்ளது. 08 நிரந்தரப் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன.*

*அட்டவணை 1.9: நிறைவேற்று உத்தியோகத்தர்கள்*

| ஊழியர்கள் | சம்பள அளவு | பணிநிலை | தற்போதுள்ள ஊழியர்கள் | | | | | | நிரந்தரப் பணிநிலை வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரமான | | | தற்காலிக (பகுதி நேரம் / ஓய்வு விடுமுறையில்) | | | |
| | | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | |
| பதிவாளர் | U-EX 3 (I) | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| நிதியாளர் | U-EX 3 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| பிரதிப் பதிவாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | U-EX 2 | 4 | 3 | - | 3 | 1 | - | 1 | 1 |
| பிரதி நிதியாளர் / சிரேஷ்ட உதவி நிதியாளர் | U-EX 2 | 1 | - | - | - | - | - | - | 1 |
| பணிப்பாளர் / உடற்கல்வி அலகு | U-EX 2 | 1 | - | - | - | 1 | - | 1 | 1 |
| உதவிப் பதிவாளர் | U-EX 1 | 6 | 1 | 3 | 4 | - | - | - | 2 |
| உதவிப் பதிவாளர் (சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்) | | 1 | - | - | - | - | 1 | 1 | 1 |
| உதவி நிதியாளர் | U-EX1 | 2 | 2 | - | 2 | - | - | - | - |
| உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | U-EX 1 | 1 | - | - | - | - | 1 | 1 | 1 |
| வேலைகள் பொறியியலாளர் | U-EX 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| தலைமைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | U-EX 1 | 1 | - | - | - | - | - | - | 1 |
| காப்பாளர் | U-EX 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | U-MO 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| மொத்தம் | | 22 | 11 | 3 | 14 | 2 | 2 | 4 | 8 |

### *1.5.4 கல்வி சாரா ஊழியர்கள்*

*அங்கீகரிக்கப்பட்ட 176 பணிநிலைகளில் 83 பணிநிலைகள் மாத்திரமே நிரப்பப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 876 மற்றும் தற்போதைய நிதி அமைச்சுச் சுற்றறிக்கை போன்றவற்றால் ஏனைய பணிநிலைகளை நிரப்ப முடியாதுள்ளது. இதனால் அன்றாடச் செயற்பாடுகளைச் சீராக முன்னெடுத்துச் செல்வதில் பல்கலைக்கழகம் பெருஞ்சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.*

*அட்டவணை 1.10: கல்விசாரா ஊழியர்கள்*

| பீடம்/கிளை/பிரிவு/அலகு/நிலையம் | எழுதுநர் மற்றும் அதனோடிணைந்த ஊழியர்கள் | தொழினுட்ப ஊழியர்கள் | ஆரம்ப மட்ட ஊழியர்கள் |
|---|---|---|---|
| பொது நிருவாகம் | 23 | - | 16 |
| நிதி நிருவாகம் | 8 | - | 1 |
| உள்ளகக் கணக்காய்வு அலகு | 1 | - | - |
| வியாபாரக் கற்கைகள் பீடம் | 5 | 1 | 2 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 4 | 4 | 4 |
| தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் | - | 1 | 1 |
| நூலகம் | 4 | - | 3 |
| உடற்கல்வி அலகு | - | - | 1 |
| தொழில் வழிகாட்டல் அலகு | - | - | - |
| பணியாளர் மேம்பாட்டு நிலையம் | 1 | - | - |
| சுகாதார நிலையம் | 1 | 1 | - |
| தகவல் தொழினுட்ப நிலையம் | - | - | 1 |
| மொத்தம் | 47 | 7 | 29 |

## 1.6 ஏனைய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு

*பல்கலைக்கழகம் சருவதேச நிறுவனங்கள், தொழில்முறை நிறுவனங்கள், பெருநிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது. இதன்மூலம் மாணவர்களையும் ஊழியர்களையும் பரிமாற்றிக்கொள்ளல், ஆய்வு ஒத்துழைப்பு, வேலை வாய்ப்புகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது.*

| | |
|---|---|
| சருவதேச நிறுவனங்கள் | • சத்ரபதி ஷாஹு வணிகம் மற்றும் ஆய்வு நிறுவனம்<br>• ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்<br>• க்ரோட்னோவின் யாங்கா குபாலா மாநிலப் பல்கலைக்கழகம் (பெலாரஸ் குடியரசு)<br>• யாக்கோவ்லேவ் சுவாஷ் மாநிலக் கற்பித்தல் பல்கலைக்கழகம் |
| தொழில்முறை நிறுவனங்கள் | • ஆளணி முகாமைத்துவப் பட்டய நிறுவனம் (CIPM)<br>• செயற்றிட்ட முகாமைத்துவ நிறுவனம் (PMI)<br>• இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் (CMA)<br>• இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM)<br>• இலங்கை வங்கியாளர் நிறுவனம் (IBSL)<br>• இலங்கை மென்பொருள் சேவைகள் நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM) |
| பெருநிறுவனங்கள் | • எச்செனிட் பிஸ்னஸ் சொலூஷன்ஸ்<br>• சமுதாய மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள்<br>• ப்ளூ லோட்டஸ் 360 (ப்ரைவேற்) லிமிடெட் |

## *1.7 சமுதாயப் பங்களிப்பு*

*பல்கலைக்கழகச் சமூகம் பல்கலைக்கழகத்துக்கு வெளியே சமுதாய மட்டத்தில் பொதுமக்களும் சங்கங்களும் பயன்பெறும்வகையில் பல்வேறு வழிகளில் பங்களிப்பை நல்கியது.*

- *"கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வணிக மற்றும் திட்ட முகாமைத்துவச் சவால்கள்" என்ற செயலமர்வு ஒக்டோபர் 23 ஆம் திகதி வட மாகாண கூட்டுறவுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.*
- *மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அறிவாற்றலை வெளிக்கொணரும் திட்டம் (குரு சிசு நென பவுரு மாநாட்டு நிகழ்ச்சி) கல்வி அமைச்சின் வர்த்தகம் மற்றும் வணிகக் கற்கைகள் கிளை ஒக்டோபர் முதல் நவம்பர் வரை ஏற்பாடு செய்திருந்தது.*
- *2D/3D மெய்நிகர் திசைகாட்டல் (Virtual Navigation) மற்றும் விளையாட்டுச் செயலி (Gamification) மூலம் சுற்றுலா மேம்பாடு குறித்த பயிலரங்கம் மே 11 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெற்றது. இது சுற்றுலா மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள், தொழிற்றுறை மற்றும் சமூக அமைப்புகளால் நடாத்தப்பட்டது.*
- *வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மார்ச் 11 ஆம் திகதி கூட்டுறவு மண்டபத்தில் மகளிர் தினத்துக்கான "நிலைத்திருத்தலுக்கான பாலினச் சமத்துவம் இன்றே" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில் "பல்கலைக்கழக அனுமதி பற்றிய கருத்தரங்கு" மற்றும் க.பொ.த. (உ/த) வணிகப்பிரிவு மாணவர்களுக்கான இலாபம் ஈட்டாத நிறுவனத்திற்கான கணக்கியல் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் பற்றிய கருத்தரங்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஒக்டோபர் 07 ஆம் திகதி இடம்பெற்றது.*
- *வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்குத் தற்போதைய வரிகள் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சியை, வவுனியாப் பல்கலைக்கழகம் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.*
- *வவுனியா மாவட்ட க.பொ.த. (உ/த) - 2021 தொகுதி மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதிப் படிவத்தைப் பூர்த்தி செய்தல், இணையவழிப்பதிவு, பல்கலைக்கழகக் கற்கைகள் மற்றும் வேலைவாய்ப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு செப்டம்பர் 13 இல் இடம்பெற்றது.*
- *"ஆங்கிலத்தில் மின்னஞ்சல் தொடர்பு மற்றும் கடிதம் எழுதும் திறன்", இதற்கான இரண்டுநாள் பட்டறை, உள்ளூர் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல் திட்டம் – மேலாண்மைக்-கான இரண்டாம் கட்டம், மாந்தை மேற்குப்பிரிவிலுள்ள பிரதேசச் செயலக ஊழியர்கள், ADRA (புத்தூக்க விருத்தி, சமாதான முகவராண்மை) ஆல் நவம்பர் 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *மடு வலயக் கல்விப் பகுதியின் ஆங்கில ஆசிரியர்களுக்கான "சா/த மற்றும் உ/த கல்வியில் ஆங்கில இலக்கியம் கற்பித்தல்" ஒரு நாள் செயலமர்வு நவம்பர் 19 ஆம் திகதி இடம்பெற்றது.*
- *வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயப் பாடசாலைக்கான "எதிர்கால வாழ்க்கைக்கான இலக்குகளை நிருணயித்தல்" வவுனியா வடக்குப் பிரிவு வலயக் கல்வித் திணைக்களத்தினால் நவம்பர் 11ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*
- *மாற்றுத்திறனாளிகளுக்கான வன்னிப் புனர்வாழ்வு அமைப்பினால் (VAROD) ஏற்பாடு செய்யப்பட்ட "ஊனமுற்ற நபர்களுக்கான அபிவிருத்தி உத்திகள் மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்கள்" என்ற தலைப்பில் சருவதேச மாற்றுத்திறனாளிகள் தினத்திற்கான விருந்தினர் கருத்தரங்கு டிசம்பர் 3 இல் இடம்பெற்றது.*
- *வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகாவித்தியாலயத்தின் க.பொ. த, (உ/த) வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி) கணக்கியல் தரநிலைகள் (SLFRS 15 மற்றும் 16) தொடர்பான கருத்தரங்கு ஒக்டோபர் 7 ஆம் திகதி இடம்பெற்றது.*
- *சமூகத் தன்னார்வத் தொண்டர்களுக்கான "சந்தைப் பகுப்பாய்வு" மற்றும் "சந்தைப்படுத்தல் திட்டம்" பற்றிய பயிற்சி ஏப்ரல் 6*


*ஆம் திகதி முல்லைத்தீவு அமைதித் தென்றலினால் ஏற்பாடு செய்யப்பட்டது.*

- *செப்டெம்பர் 30 இல் அனுராதபுரத்தில் உலகச் சுற்றுலா தினக் கொண்டாட்டத்தில் "வவுனியா மற்றும் மன்னாரில் சுற்றுலாச் சாத்தியப்பாடு" எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.*
- *"பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகள் - 2021/2022" என்ற தலைப்பில் செப்டெம்பர் 13 இல் உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்காகக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.*
- *வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டற்பிரிவின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 14 ஆம் திகதி "ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனைத் திறன்கள்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*
- *"டிஜிட்டல் சுற்றுச்சூழல் மற்றும் மனித மூலதனம்" ஆகஸ்ட் 22 இல் தேசிய தொழிலாளர் ஆய்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *வலயக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 30 இல் வலய மட்ட ஆங்கில நாடகப் போட்டி நடைபெற்றது.*
- *வடமராட்சிக் கல்வி வலயத்தின் உயர்தரத் தொழில்நுட்பப் பிரிவில் மாணவர்களை இலக்காகக் கொண்ட செயலமர்வுகள் ஒக்டோபர் 14, 15 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.*
- *கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உயர்தர உயிரியல் மாணவர்களுக்கான ஆய்வக நடைமுறைகள் தொடர்பான சமூகச் செயலமர்வு பிரயோக விஞ்ஞானபீடத்தின் எஹெட் (AHEAD) செயற்பாட்டின் கீழ் ஜூன் 4 ஆம் திகதி வவுனியாப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் இரசாயன / உயிரியல் ஆய்வகங்களில் நடைபெற்றது.*
- *வ/அல் அக்ஸா மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி செப்டெம்பர் 01 இல் இடம்பெற்றது.*
- *கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் 11 ஆம் வகுப்பு க.பொ.த. (சா/த) மாணவர்களுக்குச் சுற்றாடல் விஞ்ஞானம் பட்டப் படிப்புப் பற்றிய கருத்தரங்கு செப்டம்பர் 3 இல் நடாத்தப்பட்டது.*
- *வவுனியா மாவட்டத்தில் சமூகக் கல்வித் திட்டமாகப் பொதுமக்களுக்கான மின்கழிவுகளைத் தடுத்தல் மற்றும் மின்கழிவுகளைச் சேகரிப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்காகப் பல்கலைக்கழக வளாகத்தில் காடுகளுக்குள் கல்விச் சுற்றுப்பயணத்துடன் சுற்றுச்சூழல் சமநிலை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியும் வ/காமினி தேசிய பாடசாலையில் ஒக்டோபர் 3 இல் நடைபெற்றது. (சிங்கள மற்றும் தமிழ் மொழி)*
- *வ/காமினி தேசிய பாடசாலை மற்றும் அல்/அக்ஸா மகா வித்தியாலயத்தின் தரம் 6 பாடசாலை மாணவர்களுக்கான "சுற்றுச்சூழல்" என்ற தொனிப்பொருளில் ஒக்டோபர் 3 மற்றும் 7 ஆம் திகதிகளில் கலைப் போட்டி நடாத்தப்பட்டது.*
- *தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை வடமராட்சி கல்விவலயத்தின் உயர்தரத் தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களை இலக்காகக் கொண்டு 2021 டிசம்பர் மற்றும் 2022 ஒக்டோபரில் தொடர்ச்சியாக இரண்டு முறை வழிகாட்டல் பட்டறைகளை நடாத்தியது.*

## *2 மூலோபாய ஆய்வு*

*பல்கலைக்கழகம் 2022 – 2026க்கான ஐந்தாண்டு மூலோபாய முகாமைத்துவத் திட்டத்தையும் 2022-க்கான செயற்றிட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இருப்பினும் கொரோனாத் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 2022 செயற்றிட்டத்தைச் செயற்படுத்துவதில் பல்கலைக்கழகம் கடுமையான, பாதகமான சவால்களை எதிர்கொண்டது.*

### *2.1 பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் - சம்பந்தமான பகுப்பாய்வு* **(SWOT Analysis)**




*படம் 2.1 SWOT பகுப்பாய்வு*

## *2.2 எதிர்காலச் செயற்றிட்டம்*

*இலக்கு - 01: உயர்கல்வியில் சருவதேச அங்கீகாரத்தை அடைய அனைத்துக் கல்வித் திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினை மேம்படுத்துதல்*

*பல்கலைக்கழகமானது அனைத்துக் கல்வித் திட்டங்களின் தரங்களை உறுதிசெய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் தர உத்தரவாத நிலையத்தை (CQA) நிறுவியது. கல்விசார் ஊழியர்களின் தரம் இறுதியில் கல்வித் திட்டங்களின் தரத்தைத் தீர்மானிக்கிறது. இதன்விளைவாகப் பல்கலைக்கழகம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டப்படிப்புகளைத் தொடரவும், அவர்களின் பட்டப்படிப்புத்திட்டங்களுக்கு சருவதேச அங்கீகாரத்தைப் பெறவும் ஊழியர்களை ஊக்குவித்தது. எனவே, உயர்தரக்கல்வி வாய்ப்புகளைப் பெறுவதற்கும் சருவதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உதவுவதற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் வவுனியாப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.*

*தொழினுட்ப முன்னேற்றங்களும் புதிய இயல்பான சூழ்நிலையும் எண்மானத்தளத்துக்குச் செல்ல அழுத்தங்கொடுக்கிறது. இதன் விளைவாக, அனைத்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் எண்மான மற்றும் இலத்திரனியல் வளங்கள் கிடைப்பதைப் பல்கலைக்கழகம் உறுதிசெய்தது. கூடுதலாக, மாணவர்களின் அறிவை மேம்படுத்துவதற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் இலத்திரனியல் வளங்களை வாங்குவதற்கு நூலக அதிகாரிகளை ஊக்குவித்தது. மாணவர்களின் மென்றிறன் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் சீர்செய்யப்பட்டன.*

*நாட்டின் சமூக மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையே சமூகச் செறிவூட்டல் மற்றும் உயர்தர ஆய்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகம் வலுவாக வலியுறுத்தியது. இவ்விலக்கை அடையப் பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சருவதேசத் தொழில்முறை நிறுவனங்களுடன் கூட்டு ஆய்வு மாநாடுகளை நடாத்தியது. அத்துடன், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஆய்வு விருதுகளை வழங்கி அவர்களைச் சிறந்த ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தியது.*

நோக்கங்கள்

- *2026-க்குள் கலாநிதிப்பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமையுடைய கல்விப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்*
- *பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்புகளுக்குத் தேசிய, சருவதேச அங்கீகாரம் பெறல்*
- *அனைத்து ஊழியர்களும் மாணவர்களும் எண்மான மற்றும் இலத்திரனியல் வளங்களை அணுகக்கூடிய- தாக அவர்களை மாற்றுதல்*
- *நூல்கள் சேகரிப்பு மற்றும் நூலகப் பயன்பாட்டை அதிகரித்தல்*
- *அனைத்து மாணவர்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வசதி-களை வழங்குதல்*
- *ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே LMS மற்றும் VLE பயன்பாட்டை மேம்படுத்துதல்*
- *மென்றிறன் மேம்பாடு மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்த அவற்றைப் பாட அலகுகளா-கப் பாடத்திட்டத்தினுள் சேர்த்தல்*
- *பாடநெறிக்கு அப்பால் பல்வேறு திறன்களை விருத்திசெய்வதற்கான வசதிகளை மேம்படுத்துதல்*
- *பிராந்திய, தேசியத்தேவைகளுக்கும் விவகாரங்களுக்குமான ஆய்வுகளை மேற்கொள்வதற்குக் கல்விசார் ஊழியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்தல்*
- *தேசிய மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து கூட்டுத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்*
- *அதிகளவான வெளிநாட்டு மாணவர்களை உள்வாங்கல்*
- *திட்டங்களின் தரத்தையும் மேம்பாட்டையும் உறுதி செய்தல்*

இலக்கு - 02: உலக அளவில் வேலைவாய்ப்புப் பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு பல்கலைக்கழகத்தின் வெற்றியை அளவிடப் பயன்படுத்தப்படுகின்றது. கணிசமான பட்டதாரிகள் தேசிய அளவிலும் சருவதேச அளவிலும் வேலைகளைப் பெற்றிருந்தாலும் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு இன்னும் சவாலானதாகவே இருந்துவருகிறது. தேசிய மற்றும் சருவதேசத் தொழிற்சந்தை தொடர்பான தேவைகளைப் பூர்த்திசெய்யப் பல்கலைக்கழகம் புதிய பட்டப்படிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. மேலும், பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை உறுதிசெய்வதற்காக நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

தற்போதுள்ள பாடத்திட்டங்கள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு ஒட்டுமொத்த வேலைவாய்ப்புக்கும் ஏற்றவகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன, மேலதிகமாக, உலகளாவிய தொழிற்சந்தையின் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில், பல்கலைக்கழகம் புதிய பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, தொலைக்கல்வி ஆகியவற்றுக்கான செயற்றிட்டங்களையும் உருவாக்கியது.

தற்போது கல்வித்தகைமைகளைக் காட்டிலும் பெரும்பாலான நிறுவனங்கள் மனப்பாங்கு, நடைமுறை அனுபவம், மென்றிறன் ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. இதன்விளைவாக, மொழியாற்றல், மென்றிறன்கள், மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெரும்பாலான பட்டக்கல்விப் பாடத்திட்டத்தில் தொழிற்பயிற்சியும் நிறுவனக் கள ஆய்வும் உள்ளடங்கியுள்ளன. மேலும், தர உத்தரவாதம் மூலம் பல்கலைக்கழகத்தின் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது, இது பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகளைப் பெற உதவியது.

நோக்கங்கள்

- வளர்ந்துவரும் அறிவுத்தேவை களைப் பூர்த்திசெய்வதற்காகப் பல்கலைக்கழகத்தில் புதிய பீடங்களை உருவாக்குதல்
- பீடங்களில் புதிய பட்டப்படிப்பு-களை அறிமுகப்படுத்துதல்
- பீடங்களில் புதிய துறைகளை நிறு-வுதல்
- தேசிய மற்றும் சருவதேசத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கும் ஏற்ற வகையில் அனைத்து உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்புத் திட்டங்களைச் சீரமைத்தல்
- பட்டப்பின்படிப்பு / தொழில்முறை நிலையங்களை நிறுவுதல்
- பட்டப்பின்படிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்
- தொலைதூரக்கல்வி மற்றும் தொடர்ச்சியான கற்றல் திட்டங்களை அறிமுகப்படுத்தல்
- மாணவர்களின் மென்றிறனை மேம்படுத்துதல்
- அனைத்துப் பட்டப்படிப்புத் திட்டங்களிலும் மாணவர்களை மையப்படுத்திய கலந்துகற்கும் கல்விமுறைகளை (விளைவு அடிப்படையிலான கல்வி OBE) மேம்படுத்துதல்
- உள்ளகப்பயிற்சியைப் பெறும் பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 85% ஆக அதிகரித்தல்
- நிறுவன, பட்டக்கற்கை மதிப்பாய்வு-கள் மூலம் கல்வித்தரத்தை மேம்-படுத்த வழங்கப்பட்ட பரிந்துரை-களை ஏற்றுக்கொள்ளல்
- பட்டப்படிப்பு மாணவர்களின் அனுமதியை ஆண்டுக்கு 20% ஆல் அதிகரித்தல்

இலக்கு - 03: வளங்களையும் முறைமைகளையும் விளைதிறனாக, வினைத்திறனாக முகாமை செய்வதனூடாக நல்லாட்சியை மேம்படுத்துதல்

நல்லாட்சியின்மூலம் பங்குதாரர்கள் வெளிப்படைத்தன்மை, சட்டங்களுக்கு இணங்குதல், பங்கேற்பு, பொறுப்புணர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கின்றனர். பல்கலைக்-

கழகம் இவ்விலக்கை அடைய ஒரு முகாமைத்துவத் தகவல் அமைப்பை முன்மொழிந்தது. உருவாக்கப்படும் இவ்வமைப்பானது பல்கலைக்கழகத்தில் முடிவெடுத்தல், ஒருங்கிணைப்பு, மதிப்பீடு, கட்டுப்பாடு, நல்ல நிருவாகத்தை உறுதி செய்வதற்காகத் தகவல்களைக் காட்சிப்படுத்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும்.

மேலும், வளங்களையும் முறைமைகளையும் நிருவகிப்பதில் நிருவாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதன் விளைவாகப் பல்கலைக்கழகம் நிருவாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில்முறை மேம்பாட்டில் கவனம் செலுத்தியது. பட்டப்பின்படிப்பு மற்றும் தொழில்முறைப்பயிற்சிகளில் பங்கேற்க அவர்களை ஊக்குவித்தது. மேலதிகமாகப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின்மூலம் பொருத்தமான பயிற்சி மற்றும் பட்டறைகளை வழங்கியது. மேலும், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே நல்ல நிருவாகத்தை மேம்படுத்துவதற்காக நிறுவனத்தின் வளத்திறனை முன்னேற்றுவதில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியது.

- அனைத்துப் பீடங்களிலும் நூலகம், மற்றும் நிருவாகத்திலும் முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS) செயற்படுத்தப்படுவதை உறுதி செய்தல்
- 90% ஆன நிருவாக ஊழியர்களுக்குப் பட்டப்பின்படிப்பு, தொழில்முறைத் தகுதிகள் இருப்பதை உறுதிசெய்தல்
- பணியாளர் மேம்பாட்டு நிலையத்துக்கூடாகப் பயிற்சிகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் பயிற்றப்பட்ட நிருவாக ஊழியர்களின் எண்ணிக்-கையை அதிகரித்தல்
- பணியாளர் மேம்பாட்டு நிலையத்துக்கூடாகப் பயிற்சிகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்குபடுத்துதன்மூலம் பயிற்றப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- போதுமான பௌதிக வளங்களை வழங்குவதன் மூலம் நிருவாக நடவடிக்கைகளின் செயற்றிறனை மேம்படுத்துதல்.

இலக்கு - 4: பௌதிக மற்றும் மனித வளங்களை வழங்குவதன்மூலம் உகந்த கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை உறுதி செய்தல்

வினைத்திறனான கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளை நடாத்துவதற்குப் போதுமான பௌதிக மற்றும் மனித வளங்கள் அவசியமானவை. பல்கலைக்கழகம் வரவிருக்கும் ஆண்டுகளில் நிருவாக, கல்விசார், கல்விசாரா ஊழியர் பதவிகளை அதிகரித்தது. கொரோனாத் தொற்றுநோய் காரணமாக, மாணவர்கள், விடுதியல்லாத பிறவிடங்களில் தங்குவதற்குச் சிரமப்பட்டனர். இதன் விளைவாகப் பல்கலைக்கழகத்தின் விடுதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது.

மேலும், மாணவர்கள் நிகழ்நிலை விரிவுரைகளில் கலந்துகொள்வதற்கும் ஊழியர்கள் அவற்றை நடாத்துவதற்கும் சிரமப்பட்டனர். இதன் விளைவாகப் பல்கலைக்கழகம் பீடங்களில் நவீன வசதிகளுடன் கூடிய வினைத்திறன்மிக்க விரிவுரை அரங்குகளை அமைத்தது; போக்குவரத்து மற்றும் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தியது; மேலும், பல்கலைக்கழக வளாகத்தில் பசுமையான சூழலை உருவாக்குவதற்காக மாணவர் சங்கங்கள்மூலம் பல முயற்சிகளை மேற்கொண்டது.

நோக்கங்கள்

- 2026க்குள் தேவைகளின் அடிப்படை-யில் கல்விசார், நிருவாக, கல்விசாராப் பணிநிலைகளை அதிகரித்தல்
- அனைத்து மாணவர்களுக்கும் 2026-க்குள் விடுதி வசதிகளை வழங்குதல்
- ஒவ்வொரு பீடத்துக்கும் நவீன வசதிகளுடன்கூடிய புதிய விரிவுரை அரங்குகளை நிறுவுதல்
- 2026க்குள் அனைத்து விரிவுரை அரங்குகளையும் நவீன கற்பித்தல் வசதிகளுடன் புதுப்பித்தல்
- பல்கலைக்கழகத்திற்கு கேட்போர் கூடம் அமைத்தல்
- 2026க்குள் புதிய ஆய்வுகூடங்களை அமைத்தலும் தற்போதுள்ள ஆய்வு கூடங்களை மேம்படுத்துதலும்

- அனைத்து வசதிகளுடன் கூடிய பட்டப்பின்படிப்பு மற்றும் ஆய்வு நிலையங்களை நிருமாணித்தல்
- ஒவ்வோராண்டும் கூடுதல் கட்டடங்- கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்-புகளை அமைத்தல்
- போதுமான போக்குவரத்து மற்றும் பொது இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல்
- பல்கலைக்கழக வளாகத்தில் பசுமை-யான சூழலை ஏற்படுத்துதல்
- 2026க்குள் தற்போதுள்ள 80% ஆன கட்டடங்களில் மாற்றுத்திறனாளி-களுக்கான அடிப்படைக் கட்ட-மைப்பு வசதிகள் வழங்குவதை உறுதிசெய்தல்

இலக்கு - 5: பிராந்திய மற்றும் தேசிய வளர்ச்சிக்கான அறிவைப் பரப்புதல்

பிராந்தியங்கள் மற்றும் நாடுகளின் வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகங்கள் பொறுப்பாகவுள்ளன. அதற்கமைய வவுனி-யாப் பல்கலைக்கழகம் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், சமூக மேம்பாட்டு ஆய்வுகள், சருவதேச மாநாடுகள் ஆகியவற்றில் பங்கேற்க மாணவர்களையும் ஊழியர்களை-யும் ஊக்குவித்தது. மேலும், பல்கலைக்கழக ஊழியர்களும் மாணவர்களும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை-களையும் கருத்தரங்குகளையும் நடாத்தி அவர்களின் வாழ்க்கைப் பாதையை மேம்படுத்த உதவினார்கள்.

மேலும், பல்கலைக்கழகம் சமூகம் சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து சமூக நலனுக்-கான நிகழ்வுகளை நடாத்தியது. மேலும், மாணவர் கழகங்கள் மற்றும் மாணவர் சங்கங்கள் பிராந்திய மற்றும் தேசிய வளர்ச்சிக்காகப் பல்வேறு சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளை முன்மொழிந்தன.

குறிக்கோள்கள்

• பிராந்திய மற்றும் தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சுட்டியிடப்பட்ட மற்றும் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட வெளியீடுகளை அதிகரித்தல்

• நிறுவனங்கள் மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டங்களுக்குப் பங்களித்தல்

• பயிற்சித் திட்டங்கள் மூலம் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்

• சமூகத்தொடர்பு அலகு மூலம் சமூகஞ்-சார்ந்த செயற்பாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

இலக்கு - 6: பாலினம், இனம், சமயம் தொடர்பான நீதி மற்றும் சமவுரிமையை உறுதிசெய்தல்

சமவுரிமை மற்றும் சமத்துவம் காரணமாகப் பல்வேறு இன, சமய, பாலினக் குழுக்களைச் சேர்ந்த பணியாளர்களும் மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் மகிழ்ச்சியுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். மாணவர்-கள் மற்றும் ஊழியர்களுக்கிடையே நீதி மற்றும் சமவுரிமையை உறுதிசெய்வதற்-காகப் பல்கலைக்கழக அளவில் பாலினச் சமவுரிமை மற்றும் சமத்துவ நிலையம், நல்லிணக்க நிலையம் என்பன நிறுவப்-பட்டன. மேலும், அனைத்துச் சமய மற்றும் கலாசார நிகழ்வுகளும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுடன் கொண்டாடப்பட்டது, இது மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையே சமவுரிமையும் சமத்துவமும் நிலவுவதற்குச் சான்றாகும்.

மேலும், தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்-களுக்கிடையில் மொழித் தடைகள் உள்ளன. இது தொடர்பு மற்றும் ஒத்துழைப்புக்கான குறிப்பிடத்தக்க தடைகளில் ஒன்றாக அடை-யாளம் காணப்பட்டது. இதன் விளைவாக, ஒருங்கிணைப்புக்கான மொழிப்பாடம் கற்பிக்கப்பட்டு, சிங்கள மாணவர்கள் தமி-ழையும் தமிழ் மாணவர்கள் சிங்களத்தையும் கற்றனர். இதன்மூலம் மாணவர்களுக்-கிடையே தகவல் தொடர்பு இடைவெளி குறைந்தது.

நோக்கங்கள்

- 2026க்குள் பொருளாதார / சமூகத் தேவைகளைக் கொண்ட மாணவர்-களுக்கு உதவியினை வழங்குதல்
- அனைத்து இனமத சமூகங்களும் கல்வி கற்பதற்கும் இணக்கமாக வாழ்வதற்கும் உகந்த சூழலை உறுதி செய்தல்
- பாலினம், இனம் மற்றும் மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல்

அனைத்து நடவடிக்கைகளிலும் சம வாய்ப்புகளை உறுதிசெய்தல்

- பீடங்களில் மாணவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்
- தமிழ் மாணவர்களுக்குச் சிங்கள மொழியையும் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மொழியையும் கற்பித்தலும் சான்றிதழ் பாடநெறிகளை வழங்குதலும்
- பாலினச் சமவுரிமையையும் சமத்துவத்தையும் பெற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

# 3 பீடங்கள், நிலையங்கள், அலகுகள்

## 3.1 பிரயோக விஞ்ஞானபீடம்

அறிமுகம்

பிரயோக விஞ்ஞானபீடம் 1997 இல் உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய இருதுறைகளுடன் நிறுவப்பட்டது.

இது வவுனியாவிலுள்ள பம்பைமடுவில் காடு, குளம், நெற்கழனிகளென இயற்கை-யோடியைந்த சூழலில் அமைந்துள்ளது. இஃதொரு நெகிழ்வான, நட்பான, சாதகமான உட்புறச்சூழலைக் கொண்டிருக்கின்றமை கற்பித்தல், கற்றல், ஆய்வு நடவடிக்கை-களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளதுடன் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்-பட்டுள்ள ஏனைய நிலையங்கள், அலகுகள் ஆகியவற்றின் உதவியுடன் விளையாட்டு, பொழுதுபோக்கு, சமயம், கலாசாரம், இன ஒருமைப்பாடு ஆகியன சார்ந்த செயற்பாடு-களில் இப்பீடம் மாணவர்களை ஈடுபடுத்து-கின்றது. மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்-பைப் பயில்வதன்மூலம் அறிவையும் திற-மையையும் மட்டுமன்றி, தங்களுக்குத் தேவையான மென், தொடர்பாடல், தகவல் தொழினுட்பத் திறன்களையும் வளர்த்துக் கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு-மிடையில் ஆரோக்கியமான தொடர்புகள் காணப்படுவதனால் மாணவர்கள் ஒவ்வொரு-வரும் ஆசிரியர்களால் அக்கறையுடன் தனித்-தனியாகக் கவனிக்கப்படுகின்றனர். மேலும் இப்பீடம் பிரதேசத்து மக்களுடன் இணைந்து பிரதேசரீதியாக நிகழுஞ் செயற்பாடுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றது.

இப்பீடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணிநிலைகளின் மொத்த எண்ணிக்கை 39 ஆகும், அவற்றில் 31 பணிநிலைகள் ஏற்-கனவே நிரப்பப்பட்டுள்ளன. மேலும், கல்வி-சாரா ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட 18 பணிநிலைகளில் 10 உம் நிருவாகப் பணி-நிலைகளில் 01 உம் நிரப்பப்பட்டுள்ளன. பீடத்தில் சுமார் 34,000 சதுர அடியில் மூன்று முக்கிய கட்டடங்கள் உள்ளன. இக்கட்டடங்-கள் கல்விசார்ந்த, நிருவாக நோக்கங்களுக்-காகப் பயன்படுத்தப்படுகின்றன.



கலாநிதி (திருமதி) ஜெயகௌரி நிமலன்
பீடாதிபதி

பீடத்தின் தூரநோக்கையும் பணிக்கூற்றி-னையும் அடைவதற்காகப் பீடத்தின் முக்கிய பங்காளர்களான கல்விசார், கல்விசாரா, நிரு-வாக ஊழியர்களும் மாணவர்களும் அர்ப்-பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர். அந்த-வகையில் இப்பீடம் இதுவரை 20 தொகுதிப் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதென்பது பெருமைக்குரியது.

2022 இல் இப்பீடத்தின் வெள்ளி விழாவினை முன்னிட்டு, ஊழியர்களுக்கும் மாணவர்-களுக்குமிடையே நட்புரீதியான துடுப்பாட்-டப்போட்டி, பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாண-வர்களுக்கான கலைப்போட்டிகள், கண்காட்-சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடாத்தப்பட்டதுடன் நினை-வுச்சின்னமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்-டது.

அடைவுகள்

2022 இல் எஹெட் (AHEAD) நிதியுதவியின் மூலம் பின்வருஞ்செயற்பாடுகள் மேற்கொள்-ளப்பட்டன.

- விளைவு அடிப்படையிலான கல்வி மற்றும் கற்றலை மையமாகக் கொண்ட கற்பித்தல் ஆகியவற்றை எளிதாக்கும் வகையில் மேம்பட்ட தொழினுட்பங்களுடன் கூடிய வினைத்திறன்மிக்க ஸ்மார்ட் (SMART) விரிவுரை அரங்கம் நிறுவப்பட்டது.
- சூழல் உயிரியல் ஆய்வுகூடத்தில் மூலக்கூற்று உயிரியல் ஆய்வுகூடம் நிறுவப்பட்டது.

- *மாட்டுத்தீவனம் மற்றும் காளான் உற்பத்தி அலகு, தேனீ வளர்ப்பு அலகு என்பன மாணவர்களுக்கான சுயதொழில், வணிக முனைவு, முயற்சியாண்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக நிறுவப்பட்டன.*
- *ஒரு புதிய 250 கிலோவோற்று அம்பியர் (kVA) மின்பிறப்பாக்கி நிறுவப்பட்டு அதன்மூலம் பிரயோக விஞ்ஞானப் பீடத்தின் அனைத்துக் கட்டடங்களும் ஒரே மின்னிணைப்புக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டன.*

*கல்வித் திட்டங்கள்*

- *சுற்றுச்சூழல் விஞ்ஞானப் பட்டப்படிப்பில், இலங்கையின் அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்துடன் (MUSSD) இணைந்து அளவியல் பற்றிய புதிய பாட அலகு அறிமுகப்படுத்தப்பட்டது.*
- *சூழல் சுற்றுலா, பைத்தோன் அடிப்படைகள் ஆகிய குறுங்கற்கைநெறிகளுக்கான முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டன.*

*கல்வி அடைவுகள்*

- *கலாநிதி (திருமதி) அ. நந்தகுமாரன் சூழல் விஞ்ஞானத்தில் பேராசிரியையாகப் பதவியுயர்வு பெற்றார்.*
- *திரு. கி. அர்ஜுனன் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்துக்கான படிப்பை நிறைவுசெய்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.*
- *சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனீவாப் பல்கலைக்கழகம் குழுத்திட்டங்களுக்காக திருமதி வி. ஷரணியாவுக்கு "மோஸ்ற் நொவல் சொலூஷன்" (Most Novel Solution) விருது வழங்கியது.*

*பயிற்சிகளுக்கும் பட்டறைகளுக்குமான வளவாளர்கள்*

*பிரயோக விஞ்ஞானபீடத்தின் பணியாளர்கள் இணையவழிக் கருத்தரங்குகள் மற்றும் நிகழ்நிலை அமர்வுகள் (04), பயிற்சிப்பட்டறைகள் (01), விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / கருத்தரங்குகள் (02), செய்முறை அமர்வுகள் (01) ஆய்வு அமர்வுகளுக்கான மதிப்பீடுகள் (05) என்பனவற்றை நடாத்துவதற்கு வளவாளர்களாகப் பணியாற்றினார்கள்.*




*பீட ஆண்டு ஆய்வமர்வு 2022*

*பயிற்சி நிகழ்ச்சிகள் / பயிற்சிப் பட்டறைகள் / மாநாடுகள்*

*இப்பீடம் மாட்டுத்தீவன உற்பத்தி, தேனீ வளர்ப்புத் தொழினுட்பம், காளான் வளர்ப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய 03 பயிற்சி நிகழ்ச்சிகளையும் ஊழியர்கள், மாணவர்களுடன் தொடர்புடைய 08 பயிற்சிப் பட்டறைகளையும் ஏற்பாடு செய்தது; தனது மூன்றாவது ஆண்டு ஆய்வமர்வை (FARS 2022) நடாத்தியது; வெள்ளி விழாவைக் கொண்டாடியது.*

*பிராந்திய, தேசிய, சருவதேச நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு*

- *வவுனியாப் பல்கலைக்கழகத்துக்கும் ப்ளூ லோட்டஸ் 360க்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.*
- *வேர்துசா (ப்ரைவேற்) லிமிடெட், அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதற்குப் பேரவையின் அனுமதி கிடைத்தது.*

*மாணவர்களின் சாதனைகள்*

- *பீடத்தின் வெள்ளி விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் மாணவர்கள் பரிசுகளை வென்றனர்.*
- *பீட விருதுகள் பிரமாணங்களுக்கமைய மூன்று மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.*
- *சிஸ்கோ குறியீட்டுப் போட்டி 2022 இல் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு எண்மானச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*

- *பீட மாணவர்கள் பாடசாலை மாணவர்களுக்கான சூழல் சுற்றுலா சமுதாய விழிப்புணர்வு நிகழ்ச்சியையும் ஆய்வுகூடச் செய்முறைகளுக்கான பயிற்சிப்பட்டறையையும் நடாத்தினர்.*

*கற்கைநெறி மீளாய்வுக்கான தளவருகை – 2020*
*சூழல் விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பிரயோக கணிதமும் கணிப்பிடலும் ஆகிய கற்கைநெறிகளை மீளாய்வு செய்வதற்காக மீளாய்வுக்குழு பீடத்துக்கு வருகைதந்தது.*

*தோல்விகள் மற்றும் நியாயப்படுத்துதல்*

- *நிதி கிடைக்காத காரணத்தால் அரை நிரந்தரமான இரண்டு மாடி விரிவுரை மண்டபக் கட்டடத்தின் கட்டுமானப் பணியைத் தொடங்க முடியவில்லை.*
- *பௌதிக விஞ்ஞானத்துறைக் கட்டடத்தின் முதற்றளத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவது தொடர்-பில் இந்திய அரசின் நிதியுதவியைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.*

*எதிர்காலத் திட்டங்கள்*

- *சூழல் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டப்படிப்பைத் தொடங்குதல்*
- *புதிய பட்டப்படிப்புகளைத் தொடங்குதல்*
- *ஏற்கனவேயுள்ள பட்டப்படிப்புகளில் சிறப்புத்துறைகளை அறிமுகப்படுத்தல்*
- *டிப்ளோமா / சான்றிதழ் / குறும் படிப்புகளைத் தொடங்குவதற்குப் பாடத்திட்டங்களை உருவாக்கல்*
- *உள்ளூர் மற்றும் சருவதேச நிறுவனங்களுடனும் தொழிற்சாலைகளுடனும் இணைந்து பணியாற்றுதல்*
- *சுற்றுச்சூழலுக்குகந்த விரிவுரை மண்டபத்தை நிறுவுவதற்கான முன்மொழிவை உருவாக்குதல்*

## *3.2 வியாபாரக் கற்கைகள் பீடம்*

*அறிமுகம்*



கலாநிதி யோ. நந்தகோபன்

பீடாதிபதி

*வியாபாரக் கற்கைகள் பீடம் 1997 இல் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத் துறை, கணக்கியல் மற்றும் நிதித்துறை ஆகியவற்றை நிறுவுவதன்மூலம் அதன் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கியது. பின்னர், 2021 மார்ச் 21 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு, மேலும் பல துறைகளை உருவாக்க அனுமதி அளித்தது.*

*தற்போது இப்பீடம் ஏழு துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன: வியாபாரப் பொருளியல், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், செயற்றிட்ட முகாமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை, மனிதவள முகாமைத்துவம், நிதி மற்றும் கணக்கியல், ஆங்கிலமொழி கற்பித்தல்.*

*பீடமானது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 1000 மாணவர்களை இலக்காகக்கொண்டு பல்வேறு பட்டப்படிப்புகளை வழங்குகிறது. வியாபார முகாமைத்துவச் சிறப்புப்பட்டமாணிப் (பிபிஎம்) படிப்பு க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.*

*இந்தப் பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 216 மாணவர்கள் அடங்கிய தொகுதி பின்வரும் நான்கு சிறப்புப்பிரிவுகளுக்காக அனுமதிக்கப்படுகிறது: கணக்கியல் மற்றும் நிதியியல், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், வியாபாரப்பொருளியல், மனிதவள முகாமைத்துவம்.*

*மேலும், இப்பீடம் 2014/15 ஆம் கல்வியாண்டில் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் புதிய பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தியதுடன் அதனை 2017/18 ஆம் கல்வியாண்டில் சிறப்புப்பிரிவாகத் தரமுயர்த்தியது. தற்போது, அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் 101 மாணவர்கள் இந்த பட்டப்படிப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*எங்கள் பட்டப்படிப்புகள் பட்டதாரிகளுக்குத் தொழில்முறைத்தேர்வுகளில் போட்டியிடவும் தகுதிபெறவும் மட்டுமன்றி நேர்த்தன்மையான மனப்பான்மை, புத்திக்கூர்மை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்ப்பதற்கும் நல்ல அடித்தளத்தை வழங்குகின்றன.*

*இப்பீடம் முப்பத்திரண்டு திறமைவாய்ந்த கல்வியாளர்களைக்கொண்ட அணியுடன் கல்விசாரா, நிருவாக ஊழியர்களையும் கொண்டுள்ளது. இங்கு தகவல் தொழினுட்ப ஆய்வகம் ஒன்றை உள்ளடக்கிய நான்கு கட்டடங்கள் உள்ளன. இக்கட்டடங்கள் கல்வி மற்றும் நிருவாக நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.*

*அடைவுகள்*

- *விளைவு அடிப்படையிலான கல்வி மற்றும் கற்றலை மையமாகக் கொண்ட கற்பித்தல் ஆகியவற்றை எளிதாக்கும் வகையில் சிறந்த கற்பித்-தல் பலகைகள், மேடைகள் என்ப-வற்றுக்கூடாக வகுப்பறைகள் நவீன-மயமாக்கப்பட்டன.*
- *மாணவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சியையும் வேலைவாய்ப்பு ஆதரவையும் வழங்குவதற்கும் புகழ்-பெற்ற நிறுவனங்களினதும் தொழில் நிறுவனங்களினதும் வலையமைப்பு மூலம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்குமாக, அனைத்துத் துறைகளுக்குமான பயிற்சிக்கும் வேலைவாய்ப்புக்குமான பிரிவுகள் நிறுவப்பட்டன.*
- *ஆளணி முகாமைத்துவப் பட்டய நிறுவனம் (CIPM), எச்செனிட் பிஸ்-னஸ் சொலூஷன்ஸ் (hSenid Business Solutions), செயற்றிட்ட முகாமைத்துவ நிறுவனம் (PMI), இலங்கை சந்தைப்-படுத்தல் நிறுவனம் (SLIM), பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்-களின் நிறுவனம் (ACCA), இலங்கை வங்கியாளர் நிறுவனம் (IBSL), இலங்கை சான்றளிக்கப்பட்ட முகா-மைத்துவக் கணக்காளர் நிறுவனம் (CMA) உட்பட 30-க்கும் மேற்பட்ட தொழில்முறை மற்றும்*

*தொழில் சார்ந்த நிறுவனங்களுடன் புரிந்து- ணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்- பட்டன.*

- *வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்-களில் எதிர்காலச் சந்ததியினரைச் சமூக உணர்வுள்ளவர்களாகவும் ஜன- நாயகரீதியாகப் பிராந்திய அபிவிருத்- தியில் ஈடுபாடு கொண்டவர்களாக- வும் ஆக்க, ஐக்கிய நாடுகளின் அபி- விருத்தித்திட்டத்துடன் (UNDP) உடன்- படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்- டது.*
- *2022 ஜூலை 4, 5, 6 ஆம் திகதிகளில், 1997 முதல் 2022 வரையிலான 25 ஆண்டுகாலத்தைக் குறிக்கும்வகை- யில் வெள்ளி விழாக் கொண்டாட்-டங்கள் சிறப்பாகக் கொண்டாடப்-பட்டன.* PRANA *நிதியுதவி, மாணவர் கழகங்களுக்கான சஞ்சிகைகள் வெளியீடு, வெள்ளி விழா நினைவு நூல் வெளியீடு, கலாசார நிகழ்வுகள் என்பனவும் நடாத்தப்பட்டன.*
- *மருத்துவரீதியாகவும் கலாசாரரீதியா- கவும் முக்கியத்துவம் வாய்ந்த பல்-வேறு அல்பைன் இனங்களைப் பாது- காப்பதற்காக மூலிகைப் பூங்கா திறக்- கப்பட்டது. இப்பூங்கா இவ்வினங்- களின் இனப்பெருக்கம், அவற்றின் சூழலியல் ஆகியன பற்றிய ஆய்வுக்கு உதவுகிறது.*

*கல்வித் திட்டங்கள்*

- *வங்கி மற்றும் காப்புறுதி, முயற்சி- யாண்மை ஆகிய இரு புதிய சிறப்புப்- பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்- பட்டன. இவ்விரு படிப்புகளும் 2021/2022 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் அனுமதியிலிருந்து தொடங்கவுள்ளன.*
- *பௌதிக மற்றும் மெய்நிகர் கலப்-பின முறைகள் மூலம் வியாபாரக்-கற்கைகள் (RCBS) மீதான நான்காவது ஆய்வு மாநாடு நடாத்தப்பட்டது. இதில் 43 ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய ஐந்து தொழினுட்ப அமர்வுகள் ஐந்து தடங்களில் ஒரே-நேரத்தில் நடாத்தப்பட்டன. மேலும் ஒவ்வொரு துறையிலும் சிறந்த வழங்குநர்களுக்கு விருதுகள் வழங்-கப்பட்டன.*
- *வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பு உருவாக்கப்பட்டது. இதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்தது.*

*கல்வி அடைவுகள்*

*பின்வரும் கல்விப் பணியாளர்கள் உள்ளூர், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் முது- மாணிப் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். திருமதி கஜந்தி வேணுஜன் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகத்- தில் முதுமாணிப் பட்டம் .*

*கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், பயிற்சி நிகழ்ச்சிகள்*

*விரிவுரையாளர்களால் மாணவர்கள் (உதா- ரணம்: ஆய்வு, பயிற்சி, பாடப்பிரிவுகள்), ஊழியர்கள், வெளிச்சமூக மக்கள் (உதாரணம்: கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பிர- தேச செயலக ஊழியர்கள்) ஆகியோரை இலக்கு வைத்து இருபது பட்டறைகள் நடாத்- தப்பட்டன.*

*வெளிநாட்டு ஒத்துழைப்பு*

*பொறுப்பான செயற்றிட்ட முகாமைத்துவத்- துடன் (ஐக்கிய இராச்சியம்) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்தியாவின் அயோத்தி ஆய்வு நிறுவனத்துடன் புரிந்து- ணர்வு ஒப்பந்தம் தொடங்கப்பட்டது.*



*ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.*

*மாணவர்களின் அடைவுகள்*

- *பீடத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களின்போது நடாத்தப்பட்ட போட்டிகளில் மாணவர் கழகங்கள் பரிசுகளை வென்றன.*
- *வியாபாரக் கற்கைகள் மீதான நான்-காவது ஆய்வு மாநாட்டில் (RCBS) இறுதியாண்டு மாணவர்கள் தங்கள் ஆய்வுப் பணிகளுக்காக விருதுகள் பெற்றனர்.*

*தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்கள்*

- *நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பீடக்கட்டட வளாகத்தைக் கட்டுவதில் பீடம் தோல்வியடைந்-தது.*
- *திறைசேரிநிதியின் மோசமான ஒதுக்கீட்டின் காரணமாக, போதிய மாணவர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் வசதிகளை வழங்குவதில் பீடம் தோல்வியடைந்தது.*

*எதிர்காலத் திட்டங்கள்*

- *வியாபாரத் தகவல் முறைமைகள், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் ஆகியவற்றில் இரு பட்டப்படிப்புகளை உருவாக்குதல்.*
- *புதுப்பிக்கப்பட்ட அறிவு மற்றும் திறன்களுடன் பாடத்திட்டத்தை மறு-பரிசீலனை செய்தபின் ஏற்கனவே உள்ள பட்டப்படிப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறுதல்.*
- *ஆங்கிலத்தில் உயர் டிப்ளோமா தொடங்குதல். இது ஒரு நீடிப்புத் திட்டமாகும்.*
- *ஆய்வுக் கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக துறை அளவிலான மாநாடுகள் மற்றும் பத்திரிகைகளை அறிமுகப்படுத்துதல்.*

## 3.3 தொழில்நுட்பக் கற்கைகள் பீடம்

அறிமுகம்

க.பொ.த. (உ/த) வகுப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கு, பட்டப்படிப்பு வாய்ப்பை வழங்கும் நோக்கத்துக்காகத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட பட்டப்படிப்பு, 2016 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகப் பிரயோக விஞ்ஞான பீடத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் பெப்ரவரி 2020 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலின்பேரில் இலங்கையின் உயர்கல்வி, தொழில் நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி (1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழான கட்டளை இலக்கம் 2160/43) அறிவித்தலுக்கமைய தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் நிறுவப்பட்டது. இது வடமாகாணத்திலுள்ள வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ளது.

இப்பீடம் ஒரு துறையைக் கொண்டுள்ளதுடன், 530 மாணவர்களுக்குத் தரப்பட்ட காலத்துக்குள், பரந்த அளவில் கணினி விஞ்ஞானத்தையும் தகவல் தொழினுட்பத்தையும் உள்ளடக்கிய உயர்கோட்பாடு மற்றும் செய்முறை சார்ந்த, தேசியத் தரங்களுக்கு இணையாகத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் கௌரவப் பட்டப்படிப்பை வழங்குகிறது. க.பொ.த. (உ/த) தொழினுட்பப்பிரிவில் தேர்ச்சிபெற்று நேரடியாகத் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்திற்குள் நுழையும் மாணவர்களுக்கு இக்கற்கைநெறி வழங்கப்படுவதுடன் ஆண்டுதோறும் சுமார் 175 மாணவர்கள் இக்கற்கைநெறிக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஏனைய பட்டக்கற்கைநெறிகளில் மாணவர்களைச் சேர்க்கப் பீடம் திட்டமிட்டுள்ளது. அவையாவன: உயிரியல் முறைமைகள் தொழினுட்பத்துறையில் பசுமை ஆற்றல் தொழினுட்பம், பொறியியல் தொழினுட்பத்துறையில் புவிசார் தொழினுட்பம்.

பீடமானது அதன் மனித வளங்களையும் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளையும்



திரு ச. ஜெ. ச. சுதாகரன்

பீடாதிபதி

அபிவிருத்தி செய்யும்போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறைக்குள் விசேட பட்டக்கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த ஆண்டு பல பணிநிலைகள் நிரப்பப்பட்டன. ஏழு கல்விசார் பணிநிலைகள் நிரப்பப்பட்டதுடன் இரு கல்விசாராப் பணிநிலைகளும் நிரப்பப்பட்டன. பீடமானது கல்வி மற்றும் நிருவாக நோக்கங்களுக்காக 2734 சதுரமீற்றர் பரப்பளவுடைய இரு கட்டடங்களைக் கொண்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள் மற்றும் மேம்பட்ட ஆய்வுகூடவசதிகளுடன் பீடம் முன்பைவிட அதிகமாக வளர்ந்து வருகின்றது. நாம் ஒவ்வொருவரும் தொழினுட்ப அறிவின் சிறந்த பயணத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

அடைவுகள்

- தகவல் தொடர்பாடல் தொழினுட்-பத்தில் முன்னேற்றங்கள் பற்றிய ஓர் ஆராய்ச்சி மாநாடு நடாத்தப்பட்டது. இது மூன்று தடங்களையும் வெவ்-வேறு களங்களிலிருந்தான முக்கிய பேச்சாளர்களையும் உள்ளடக்கி-யிருந்தது.
- வவுனியாப் பல்கலைக்கழகத்தின் மொஸில்லா வளாகக் கழகம் திறந்து வைக்கப்பட்டது.
- செல்வி ந. லோஜனா மற்றும் செல்வி டபிள்யூ. ஏ. எஸ். சீ. பெரேரா ஆகிய இருவரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்த கல்விசார் ஊழியர்கள், இவர்கள் விரிவுரையாளர் பதவிக்குத் தேவையான கல்வித்தகைமை-களைப் பூர்த்திசெய்து அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டனர்.

- *திரு செ. சைரஜன், தகவல் தொடர்-பாடல் தொழில்நுட்பத்துறையுடன் இணைக்கப் பட்ட கல்விசாரா ஊழியர், தொழினுட்ப அலுவலராக (தரம் II, பிரிவு B) உறுதிப்படுத்தப்-பட்டார்.*

*கல்வித் திட்டங்கள்*

*தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை பின்வரும் ஆறு புதிய சிறப்புப் பட்டப்-படிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்-முயற்சிகளை மேற்கொண்டுள்ளது: மென்-பொருள் வடிவமைப்பும் மேம்பாடும், கணினி வலையமைப்பு நிருவாகமும் முகா-மைத்துவமும், இணையப் பாதுகாப்பு, பல்லூடகமும் விளையாட்டுத் தொழினுட்-பங்களும், எண்மான மற்றும் உட்பதிக்கப்-பட்ட முறைமைத் தொழினுட்பங்கள், தரவுத் தொழினுட்பங்கள்.*

*கல்வி அடைவுகள்*

- *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சிறப்புக்கற்கை-நெறியின் முதல் தொகுதியைச் சேர்ந்த ஐம்பத்திரண்டு மாணவர்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்தனர்.*
- *பின்வரும் கல்விப் பணியாளர்கள் பட்டப்பின்படிப்பில் சேர்ந்தார்கள்:*
    - *செல்வி ந. லோஜனா – கலாநிதிப் பட்டப்படிப்பு, கொழும்புப் பல்-கலைக்கழகக் கணினிக்கல்லூரி*
    - *செல்வி டபிள்யூ. ஏ. எஸ். சீ. பெரேரா – முதுதத்துவமாணி, கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக்கல்லூரி*

*கருத்தரங்குகள் / பயிலரங்கங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்கள்*

- *தகவல் தொடர்பாடல் தொழினுட்-பத்துறை, வடமராட்சிக் கல்வி வல-யத்தில் க.பொ.த. (உ/த) இல் தொழி-னுட்பப்பிரிவில் பயிலும் மாணவர்-களுக்குக் கடந்தகால வினாத்தாள்-களுக்கான மீட்டல் பட்டறைகளை நடாத்தியது.*
- *கோட்ஜென் (CodeGen), இலங்கை, தகவல் தொடர்பாடல் தொழினுட்பச் சிறப்புக்கற்கைநெறியின் இறுதி-யாண்டு மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் அமர்வை நடாத்தியது.*

*அறிவைப் பரப்புதல்*

- *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள் பீடத்தினால் வழங்கப்படும் கல்வியியல் முது-மாணிக்கற்கைநெறிக்குப் பணியா-ளர்களையும் உட்கட்டமைப்பு வசதி-களையும் இப்பீடம் வழங்கியது.*
- *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள் பீடத்தினால் வழங்கப்படும் கல்வியியல் பட்டப்-பின்படிப்பு டிப்ளோமாக் கற்கை-நெறிக்குப் பணியாளர்களை இப்-பீடம் வழங்கியது.*

*தொழிற்றுறை ஒத்துழைப்பு*




SLASSCOM தொழிற்சந்தை

*மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான தகவல் தொழினுட்பம் மற்றும் வியாபாரச் செயன்முறை முகாமைத்துவத் தொழிற்-சந்தை SLASSCOM ஆல் ஏற்பாடு செய்யப்-பட்டது.*

*மாணவர்களின் அடைவுகள்*

- *மூன்றாம் வருட மாணவர்களின் குழு மொரட்டுவைப் பல்கலைக்கழகத்-தின் லியோக் கழகம் நடாத்திய மைண்ட் எக்ஸ்ட்றா பல்கலைக்-கழகங்களுக்கிடையிலான வெற்றிக்-கிண்ணப்போட்டியில் மைண்ட் எக்ஸ்ட்றா, சிறந்த ஐ.ஓ.டீ. (IoT) வடிவமைப்பு ஆகியவற்றுக்காக இரு விருதுகளை வென்றது.*
- *மூன்றாம் வருட மாணவரான திரு. கிருஷ்ண பிரசாந்த், இலங்கையின் AIESEC உடன் இணைந்து, இந்தியா-வின் புதுதில்லி பசுமை ஆசியக் குரல் கவுன்சிலின் "தலைமைத்துவ அபி-விருத்தியில் இளைஞர்கள் நடாத்தும் அமைப்பு" என்ற கருப்பொருளின் கீழ் திட்டமொன்றின் முதல் தன்-னார்வத் தொண்டராக தேர்ந்தெடுக்- கப்பட்டார்.*

*தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்கள்*

- *இப்பீடத்துக்காக முன்மொழியப்-பட்ட 7614 சதுர மீற்றர் பரப்பளவு- டைய கட்டுமானத்தின் கட்டம் II ஐப்பூர்த்தி செய்வதில் ஏற்படும் தாமதம், மாணவர்களின் சேர்க்-கையை அதிகரிப்பதற்கும் சிறப்பு மற்றும் புதிய பட்டப்படிப்புகளை வழங்குவதற்கும் தடையாக உள்ளது.*
- *அரசின் கொள்கைகளால் அங்கீகரிக்-கப்பட்ட பணிநிலைகளுக்குப் பணி-யாளர்களை நியமிக்கமுடியாது போயிற்று. இது சிறப்பு மற்றும் புதிய பட்டப்படிப்புகளை வழங்குவதற்- குத் தடையாக உள்ளது.*

*எதிர்காலத் திட்டங்கள்*

- *பாடசாலை மாணவர்களுக்கும் அதனை விட்டு வெளியேறுபவர்-களுக்கும் தகவல் தொழினுட்பத்-திலும் கணினி நிரலாக்கத்திலும் திறன்களை மேம்படுத்துவதற்காகத் தகவல் தொடர்பாடல் தொழினுட் பம் சார்ந்த குறுகிய பல கற்கை-நெறிகளை அறிமுகப்படுத்துதல்*
- *பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிலரங்குகளை நடாத்துதல்*
- *தகவல் தொழினுட்ப நிறுவனங்-களுடனும் தொழிற்றுறையுடனும் ஒத்துழைத்தல்*
- *புதிய மாணவர் கழகங்களையும் சங்கங்களையும் தொடங்குதல்*

## 3.4 நூலகம்

அறிமுகம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நூலகம் மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் கற்பித்தல், கற்றல், ஆய்வு அனுபவத்தை மேம்படுத்துவதுடன், அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தத் தேவையான அனைத்துத் தகவல்களையும் அவர்களுக்கு வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. 1992 ஆம் ஆண்டு வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் திறப்பு விழாவுடன் இந்த நூலகம் நிறுவப்பட்டது. நூலகம் ஒரு கல்விசார் சிரேஷ்ட உதவி நூலகருடனும் நான்கு கல்விசாரா முகாமைத்துவ உதவியாளர்களுடனும் இயங்கிவருகின்றது.

சேவை

2022 ஆம் ஆண்டில், நூலகம் தொடர்புடைய, புதுப்பித்த, தரமான தகவல் வளங்களை விரைவாகவும் சரியான நேரத்தில் அணுகுவதன் மூலமும் அதன் நோக்கத்தை அடைந்து, பல்கலைக்கழகச் சமூகத்தை மேம்படுத்துவதில் உறுதிபூண்டுள்ளது. நூலகம் தனது சேவைகளைச் சுமார் 3,600 புத்தகங்களுடன் தொடங்கியது.

நூலகச் சேகரிப்பானது 16,248 புத்தகங்கள், அறிவார்ந்த பருவ இதழ்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், துண்டுப்பிரசுரங்கள், இலத்திரனியல் வளங்கள் (மின் புத்தகங்கள், மின்னிதழ்கள்), ஒலி, ஒளி உபகரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. ரூபா 268,705.00 மதிப்புள்ள 122 புத்தகங்கள் நலன்விரும்பிகளிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. ஒத்த தன்மையை சரிபார்ப்பதற்கான ஐதென்டிகேற் (Ithenticate) மென்பொருள், கல்விச்சமூகத்துக்கு நன்மையளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சாதாரண கட்டணத்தில் ஒளிப்படப்பிரதிச்சேவை வழங்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வளர்ச்சி

மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் தேவையை ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யக்கூடிய புதிய மூன்றடுக்குமாடி நூலகக்கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்துடன், ஒரே நேரத்தில் 150 மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் இலத்திரனியல் வளப்பிரிவுக்கான வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இங்கு 200 மாணவர்களை உள்ளடக்கும் வகையில் கருத்தரங்கு மண்டபம், காணொளி மாநாட்டு மண்டபம், அரிய சேகரிப்புகளுக்கான பகுதி, அருங்காட்சியகம் போன்றவற்றுக்கான வேலைகளும் நடைபெற்றுவருகின்றன.

இலத்திரனியல் வளங்கள்

எமறல்ட் இன்சைற் (Emerald Insight), ஒக்ஸ்ஃபோட் யூனிவசிற்றி ப்ரஸ் (Oxford University Press), டெய்லர் அன்ட் ஃப்ரான்சிஸ் (Taylor & Francis) ஆகிய தரவுத்தளங்கள் காணப்படுகின்றன.

நிறுவன எண்மான ஆய்வுக் களஞ்சியங்கள்

நிறுவனத்தின் தெரிவுநிலையை மேம்படுத்துவதற்காகப் பீட உறுப்பினர்களின் பின்வரும் எண்ணிக்கையிலான அறிவார்ந்த வெளியீடுகளை உள்ளடக்கிய நிறுவன எண்மான ஆய்வுக்களஞ்சியங்களை உருவாக்குவதில் கவனஞ்செலுத்தப்பட்டு வருகின்றது.

பிரயோக விஞ்ஞான பீடம் [268]; வியாபாரக் கற்கைகள் பீடம் [239]; தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் [39]; நூலகம் [30]; பல்கலைக்கழக வெளியீடுகள் [342]

மாணவர்களின் தகவல் கையாளும் திறன்களை மேம்படுத்துவதற்காகத் தகவல் அறிவு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுவருகின்றன.

சமூக நலத்திட்டம்

பிராந்தியமட்டத்தில் இரு விழிப்புணர்வு மற்றும் நூலக முகாமைத்துவ நிகழ்ச்சிகள் கிளிநொச்சிப் பொதுநூலகத்திலும் வவுனியாப் பொதுநூலகத்திலும் நடாத்தப்பட்டன.

கூட்டங்கள்

இவ்வாண்டில் ஐந்து நூலகக்குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

## *3.5 தர உத்தரவாத நிலையம்*

*அறிமுகம்*

*ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 09/2019-க்கு இணங்க வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத நிலையம் 2021 ஒக்டோபர் 01 ஆம் திகதி நிறுவப்பட்டது. இந்நிலையத்தின் கல்வி, நிருவாக, நிதிக் கட்டுப்பாடுகள் வவுனியாப் பல்கலைக்கழக மூதவை மூலம் நிருவகிக்கப்படுகின்றன. பீடமட்டத் தர உத்தரவாதச் செயற்பாடுகள், தர உத்தரவாதச் சட்டங்களின்படி பீடத் தர உத்தரவாதப்பிரிவினால் நிருவகிக்கப்படுகின்றன.*

*தர உத்தரவாத நிலையம் பட்டப்படிப்புகளிலும் பட்டப்பின்படிப்புகளிலும் விசேட திறமையினையும் உயர்கல்வி முறையில் காணப்படுகின்ற அனைத்துப் பிரிவுகளிலும் ஸ்திரமான தர உத்தரவாத முறையினைச் செயற்படுத்துவதுடனும் அனைத்துக் கற்றல், கற்பித்தலுக்காகத் தொடர்ச்சியான முன்னேற்றச் செயன்முறையினை நிலைநிறுத்துவதுடனும் உள்ளூர் மற்றும் சருவதேசத்தரங்களின் அடிப்படையிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துகிறது.*

*பயிற்சிப் பட்டறைகள் / பயிற்சித் திட்டங்கள் / செயற்பாடுகள்*

- *PLO மற்றும் ILO விவரணையாக்கம் குறித்த பட்டறை ஜூன் 22 இல் பீடங்களின் பாடவிதான மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கும் தகுதிகாண் விரிவுரையாளர்களுக்குமாக நடாத்தப்பட்டது.*
- *உயர்கல்வியில் தர உத்தரவாதம் - இலங்கைக் கண்ணோட்டம் பற்றிய செயலமர்வு செப்டம்பர் 22 இல் நடாத்தப்பட்டது.*
- *தர உத்தரவாதப் பேரவையின் பணிப்பாளர் பேராசிரியர் திலக் பீ. டீ. கமகே செப்டம்பர் 22 இல் வவுனியாப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்து தர உத்தரவாத நிலையத்தினதும் பீடத் தர உத்தரவாத நிலையங்களினதும் வசதி-கள் குறித்துக் கலந்துரையாடினார்.*
- *வவுனியாப் பல்கலைக்கழகப் பேரவையின் 12வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்ட மதிப்பீட்டுக்குழுவுடன் இணைந்து பாடத்-திட்ட மேம்பாட்டுக்கான கொள்கை மற்றும் நடைமுறைக் குறியீட்டைத் தர உத்தரவாத நிலையம் தயாரித்தது.*
- *மூன்று பீடங்களின் கல்விசார் ஊழியர்களுக்கான கல்விப் பொறுப்புக் கூறலுக்கும் வேலைச்சுமையைக் கணக்கிடுதலுக்கும் நவம்பர் 26 இல் நடைபெற்ற வவுனியாப் பல்கலைக்கழகப் பேரவையின் 14ஆவது கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*வெளிப்புற மதிப்பாய்வுக்கான வருகைகள்*

| *மதிப்பாய்வு* | *பட்டப்படிப்பின் பெயர்* | *வருகைத் திகதிகள்* |
|---|---|---|
| *கற்கை நெறிகளுக்கான மதிப்பாய்வு* | *சுற்றாடல் விஞ்ஞானம் சிறப்புமாணி* | *செப்டம்பர் 16* |
| *கற்கை நெறிகளுக்கான மதிப்பாய்வு* | *தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி* | *நவம்பர் 24 - 25* |
| *கற்கை நெறிகளுக்கான மதிப்பாய்வு* | *பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடல் விஞ்ஞானமாணி* | *டிசம்பர் 20 - 21* |

## 3.6 பல்கலைக்கழக ஆய்வு மற்றும் நெறிமுறைக்குழு

அறிமுகம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மற்றும் நெறிமுறைக்குழு (UREC) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 46 (6) (vii) இன் படி செப்டம்பர் 2021 இல் நிறுவப்பட்டது. இக்குழுவின் நோக்கம் பல்வேறு துறைகளில் ஆய்வுகளையும் புலமைப்பரிசில்களையும் புத்தாக்கங்களையும் ஊக்குவிப்பதாகும். இக்குழு வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களுக்கு நெறிமுறைத் தரநிலைகளை உறுதிசெய்து தேசியரீதியிலும் சருவதேசரீதியிலும் ஆய்வு முடிவுகளைப் பரப்புவதற்கு உதவுகின்றது. நிலையான வளர்ச்சியை நோக்கிய சிறந்த புரிதல் கொண்ட அறிவு சார்ந்த சமூகத்தை வளர்ப்பதன் மூலம் பிராந்திய, தேசிய வளர்ச்சிக்கான தனது பங்களிப்பை நல்கிறது.

நோக்கங்கள்

- பிரச்சினை அடிப்படையிலான ஆய்வு நடவடிக்கைகள் மூலம் பிராந்திய, தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- தரமான புத்தாக்க ஆய்வுகளை மேற்கொள்ள ஆய்வாளர்களை ஊக்குவித்தல்.
- ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் அல்லது ஆய்வு நிறுவனங்களுடன் கூட்டாக ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதை ஊக்குவித்தல்.
- தேசிய, சருவதேச ஆய்வு மன்றங்களில் அல்லது மாநாடுகளில் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வு முடிவுகளைப் பரப்ப உதவுதல்.
- திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் ஊழியர்களின் ஆய்வுத் திறன்களை மேம்படுத்துதல்.
- பயனுள்ள விளைவுகளைத் தரவல்ல ஆய்வு-களில் நெறிமுறைத் தரங்களை உறுதி செய்தல்.

செயற்பாடுகள்

- ஆய்வுக்கொடுப்பனவு நிபந்தனைகள் திருத்தப்பட்டுப் பரிந்துரைக்கப்பட்டன.
- எதிர்கால ஆய்வு மாநாடுகளைப் பற்றிய தகவல்கள் பரப்பப்பட்டன.
- ஆய்வுகளுக்கும் ஆய்வு அடிப்படையிலான முதுமாணிப்படிப்புகளுக்குமான நிதி வாய்ப்புகள் ஊக்குவிக்கப்பட்டன.
- பீட மாநாடுகளுக்கும் இதழ்களைத் தொடங்குவதற்கும் நிதியுதவிகள் பரிந்துரைக்கப்பட்டன.
- ஆய்வு நிதிக்கொள்கையும் விண்ணப்பப்படிவமும் சீர்செய்யப்பட்டன.
- விஞ்ஞானங்கள், தொழினுட்பம், பொறியியல், கணிதம் (STEM) மற்றும் மனிதப்பண்பியல், கல்வி, முகாமைத்துவம், சமூக விஞ்ஞானங்கள் (HEMS) போன்ற துறைகளுக்கான ஆய்வு நிதியுதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.
- கல்வியாளர்களிடமிருந்து ஏழு ஆய்வு முன்மொழிவுகளைப்பெற்று இரட்டைக் குருட்டு மதிப்பாய்வு நடாத்தப்பட்டது.
- ஐந்து ஆய்வு முன்மொழிவுகள் நிதியுதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு வழிகளில் ஆராய்ச்சி செய்வதில் விருது பெற்றவர்களை உருவாக்குதல்.
- சருவதேச ஆய்வு நிலையம் நிறுவுவதற்கான கருத்தியல் உருவாக்கப்பட்டது.
- நியமச் செயற்பாட்டு நடைமுறை, விண்ணப்பப் படிவம் ஆகிய நெறிமுறை அனுமதி ஆவணங்கள் உருவாக்கப்பட்டன.

பயிற்சிப் பட்டறைகள்

கொள்கை வகுப்புக்கான ஆய்வையும் மதிப்பீட்டையும் பயன்படுத்துவதில் பாராளுமன்றத்துக்கும் கல்வியாளர்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பு என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை ஒக்டோபர் 20 இல் நடாத்தப்பட்டது.

## 3.7 சுகாதார நிலையம்

அறிமுகம்

பல்கலைக்கழக எல்லா மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் சுகாதார நிலையத்தில் இலவச ஆலோசனையும் சிகிச்சையும் பெறுவதற்கு உரிமையுண்டு.

சுகாதார நிலையமானது மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் வவுனியாப் பொது வைத்தியசாலைக்கு அவர்களை மேலதிக சிகிச்சைக்காக அனுப்புவதற்கும் வைத்திய அதிகாரிகளையும் பகுதிநேரச் சுகாதார சேவை ஊழியர்களையும் கொண்டு இயங்கிவருகிறது. மேலும், இது மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கு பொறுப்புடையதுமாகிறது.

சுகாதார நிலையம் என்பது பல்கலைக்கழகத்தில் சுகாதார சேவைகளை வழங்குவதற்கான சேவை நிலையமாவதோடு அங்கு நோய்த்தடுப்பு மற்றும் பிணிதீர்க்கும் சேவைகளும் வழங்கப்படுகின்றன.


சுகாதார நிலையம் 3481 பேருக்கு மருத்துவ, சுகாதார, ஆலோசனைச் சேவைகளை வழங்கியுள்ளது.

வழங்கப்பட்ட சேவைகள்

- மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான நோய் தீர்க்கும் சுகாதார சேவைகள்
- நோய்த்தடுப்புச் சுகாதார சேவைகள்: சுகாதாரக்கல்வி, தடுப்பூசிகள் போன்றவை
- வைத்திய ஆலோசனை
- மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ்களை வழங்குதல்
- தேவைப்படின் நோயாளர்களை வைத்தியசாலைகளுக்குப் பரிந்துரைத்தல்
- சுகாதார நிலையத்தின் கண்காணிப்புத் தேவைப்படும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஏனைய இடங்களில் தரமான உணவு மற்றும் தூய்மைத்தன்மையைக் கண்காணித்து மேற்பார்வையிடல்
- பற்சுகாதாரச் சேவைகள்
- கண் மருத்துவம், பார்வைக்குறைபாடு தொடர்பான சேவைகள்

எதிர்காலத் திட்டங்கள்

- பல்மருத்துவம், வாய்ச்சுகாதாரச் சேவைகள்
- ஆய்வுகூட வசதிகள்
- சுகாதார மேம்பாட்டுச் சேவைகள்




படம் 3.1: சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை

(நோய் அடிப்படையில்)

## *3.8 பணியாளர் மேம்பாட்டு நிலையம்*

*அறிமுகம்*

*பணியாளர் மேம்பாட்டு நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் பலதரப்பட்ட ஊழியர்களினதும் வளர்ச்சி, தொழில் விருத்தி போன்றவற்றுக்கான வாய்ப்புகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அத்துடன் பதவியில் உறுதிப்படுத்தல், பதவியுயர்வு ஆகிய ஆட்சேர்ப்புக்குப் பிந்திய தகுதிகள், சேவை சார்ந்த பயிற்சி, தொழிலில் நிலைபெறுதன்மையை நோக்கிய தற்போதைய உலகின் போக்குகள் போன்றவற்றை அடைவதற்கு வழிவகுப்பதுடன் நாட்டின் தரத்தையும் உயர்த்துகிறது.*

*பயிற்சிப் பட்டறைகள்*

- *ஜனவரி 19, 20 - தொற்றாத நோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி*
- *மார்ச் 11 – விடுமுறைகள் தொடர்-பான சட்ட நடைமுறைகள்*
- *மே 25 – முதுமாணிப்பட்டங்களுக்- கான முன்மொழிவுகளை எழுதுதல், வெளிநாடுகளிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களை தெரிவு செய்தல்.*
- *ஜூன் 15 - அடோப் போட்டோ-ஷொப் (Adobe Photoshop)*
- *ஜூன் 22 - PLO மற்றும் ILO விவரணையாக்கம்*
- *ஜூலை 27 - தேர்வுகளில் பங்குதாரர்களின் பொறுப்புகள்*
- *ஆகஸ்ட் 24 - கல்வி ஆலோசனை*
- *ஆகஸ்ட் 31 - உயர்கல்வி தரப்படுத்தல்*
- *செப்டம்பர் 28 - அலுவலகத் தொடர்பாடலுக்கான எழுத்துத்திறன்*
- *அக்டோபர் 19 – செயலூக்கமுடைய கல்வியியலாளர்களாக மாறுவது தொடர்பான நிகழ்வு*
- *நவம்பர் 16 - கொள்முதல் நடைமுறைகள்.*
- *நவம்பர் 30 - தகவல் அறியும் உரிமை (RTI) பற்றிய விழிப்புணர்வு அமர்வு*
- *டிசம்பர் 03 - தொழில் ஆலோசனை, ஆளுமை மேம்பாடு குறித்த பயிற்சி நிகழ்வு*

## *3.9 சருவதேசப் பிரிவு*

*அறிமுகம்*

*தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் சருவதேச ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழகத்தின் கல்வி, பொருளாதார, கலாசாரப் பரிமாணங்களை வளப்படுத்த வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சருவதேசப் பிரிவு 2021 ஒக்டோபர் மாதம் தாபிக்கப்பட்டது. இது பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் நீண்டகால மற்றும் நிலைபேறான கூட்டு நடவடிக்கைகளை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், துணைத்தூதரகங்கள், தூதரகங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், பிற அமைப்புகள் ஆகியவற்றின் வலைப்பின்னல்களுடன் சருவதேச உறவுகளைத் திட்டமிடுதல், நிருவகித்தல், மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு இது பொறுப்பாகும். மேலும், இந்தப்பிரிவு சருவதேச மாணவர்கள், பிரதிநிதிகள், விருந்தினர்களை வரவேற்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது.*

*இது ஆராய்ச்சி, கற்பித்தல், மாணவர் செயற்பாடுகளில் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆராய்ச்சிகளைப் பொறுத்தவரை, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் உலகளாவிய மாணவர் குழுத்திட்டங்களை உருவாக்க இந்தப்பிரிவு எதிர்பார்க்கின்றது. கற்பித்தலைப் பொறுத்தவரை, சருவதேச கூட்டுப் பயிற்சித்திட்டங்கள், பட்டறைகள், மாணவர் பரிமாற்றத்திட்டங்கள் மூலம் மாணவர்களை உலகப் பொருளாதாரத்தில் தொழில் புரிய சருவதேசப்பிரிவு தயார்ப்படுத்துகிறது. மாணவர்களைப் பொறுத்தவரை, இப்பிரிவு பிற*

பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதுடன் அவர்களது ஆலோசனைகளுக்கும் ஊக்கமளிக்கிறது. இதற்கு மேலதிகமாக, வவுனியாப் பல்கலைக்கழகத்தில் சருவதேச மாணவர்களின் செயற்பாடுகளுக்கும் இப்பிரிவு உதவுகிறது. எதிர்காலத்தில், சருவதேசப்பிரிவு, இணைந்த மற்றும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பட்டமாணி, முதுமாணிப் படிப்புகளைச் செயற்படுத்தும்.

சருவதேசப் பல்கலைக்கழகங்களுடனும் நிறுவனங்களுடனுமான ஒத்துழைப்பு

- இந்தியாவிலுள்ள சத்ரபதி ஷாஹூ வணிகக்கல்வி மற்றும் ஆய்வு நிறுவனம் (CSIBER) வவுனியாப் பல்கலைக்கழகத்துடன் ஒக்டோபர் 12 இல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



சத்ரபதி ஷாஹூ வணிகக்கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- துருக்கியின் அங்காரா யில்டிரிம் பெயாசிட் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் அரிசோனாப் பல்கலைக்கழகம், பெலாரஸின் க்ரோட்னோவின் யாங்கா குபாலா மாநில பல்கலைக்கழகம், ரஷ்யாவின் சுவாஷ் மாநில கல்வியியல் பல்கலைக்கழகம் ஆகியவை வவுனியாப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான நடைமுறைகளைச் செயற்படுத்தி வருகின்றன.
- மேலும், வவுனியாப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக பின்வரும் பல்கலைக்கழகங்களுடன் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளது.
  - பாரதியார் பல்கலைக்கழகம், இந்தியா,
  - மனிடோபா பல்கலைக்கழகம், கனடா,
  - மெக்கில் பல்கலைக்கழகம், கனடா,
  - பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம், இந்தியா,
  - தெகெஸ்தான் மாநிலப் பல்கலைக்கழகம், ரஷ்யா,
  - ரஷ்யாவின் நட்புப் பல்கலைக்கழகம், ரஷ்யா,
  - தேசிய ஆய்வுப் பல்கலைக்கழகம், ரஷ்யா,
  - வடமேற்கு முகாமைத்துவ நிறுவனம், ரஷ்யா,
  - யூரல் மாநிலப் பொருளாதாரப் பல்கலைக்கழகம், ரஷ்யா,
  - ரஷ்ய ஜனாதிபதி அகாடமியின் விளாடிமிர் கிளை, ரஷ்யா,
  - கீல் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்,
  - மலேசியாவின் இன்ரி சருவதேசப் பல்கலைக்கழகம்.

வருகைகள்

- பேராசிரியர் ஆனந்தராஜா கேப்ரியல் (பல்கலைக்கழகக் கல்லூரி, லண்டன் சக்தி நிறுவனம்) ஆகஸ்ட் 09 இல் வவு-னியாப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தார்.

## *3.10 சகவாழ்வு நிலையம்*

*அறிமுகம்*

*பல்கலைக்கழகத்தின் சகவாழ்வு நிலையம் மாணவர்கள், ஊழியர்கள் மத்தியில் இனங்கள், கலாசாரங்கள், மதங்கள் ஆகியவை பற்றிய புரிதல், பரிமாற்றங்கள் என்பவற்றை வளர்ப்பதற்கு ஆதரவளிக்கிறது. மேலும், இது போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கைக்கான விரிவான கல்வியை வழங்குகிறது. வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சகவாழ்வு நிலையம் 2021 செப்டெம்பர் 25 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சகவாழ்வு நிலையத்தை 2022 பெப்ரவரி 11 இல் திறந்து வைத்தார்.*

*சகவாழ்வு நிலையம் சமூக, கலாசார, கல்வி, அறிவியல், அறிவுசார் முயற்சிகள் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே அமைதியான சகவாழ்வை வளர்க்க முயல்கிறது. இது உள்ளூர், பொது மற்றும் தேசிய அளவில் நல்லிணக்கத்துக்கும் சமூக ஒற்றுமைக்குமான ஊக்கியாகவும் வள நிலையமாகவும் செயற்படுகின்றது.*

*குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் சிறந்த தொடர்புகளை உருவாக்குதல், நல்லிணக்கத்தை உருவாக்குதல், பிராந்திய மற்றும் தேசிய வளர்ச்சியை நிலைநிறுத்துதல் எனப் பலவாறான செயற்பாடுகளுக்கான இணைப்புப்பாலமாகவும் இந்நிலையம் செயற்பட்டுவருகின்றது.*

*கருத்தரங்குகள் / பயிற்சிப்பட்டறைகள் / செயற்பாடுகள்*

*கருத்தரங்குகள்*

- *உலகப் பல்கலைக்கழக நண்பர்கள் என்ற அமைப்புடன் (WUF) இணைந்து ஜனவரி 3 இல் பட்டதாரிகள் மற்றும் ஊழியர்களுக்காக "சமூக நல்லிணக்கத்தை நோக்கி இணக்கமான சமூ-கத்தை உருவாக்கப் பிரதேசங்களுக்கு அப்பால் செல்வது" என்ற தலைப்பில் கருத்தரங்கு.*
- *பெப்ரவரி 28 இல் ஊழியர்கள், பட்ட-தாரி மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் சமூக மக்களுக்காகச் 'சக-வாழ்வு நிலையம் மூலம் சமூகங்களை மீண்டும் கட்டியெழுப்புதல்' என்ற தலைப்பில் கருத்தரங்கு.*

*பயிற்சித் திட்டம்*

- *ஜனவரி 22 மற்றும் 23 ஆந்திகதிகளில் சகவாழ்வு நிலையத்தின் நிருவாகக் குழு உறுப்பினர்களுக்குத் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனத்துடன் இணைந்து இருநாள் பயிற்சிப்பட்-டறை ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *'எதிர்காலத் தயார்நிலை இளைஞர் தலைமைத்துவத் திட்டம்' என்ற தலைப்பில் ஐந்து நாட்கள் வதிவிடப் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்-பட்டு, இளைஞர் மற்றும் விளை-யாட்டு அமைச்சின் ஆதரவுடன் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்துடன் (NCLD) இணைந்து நடாத்தப்பட்டது.*

*சமய மற்றும் கலாசார நிகழ்வுகள்*

- *தைப்பொங்கல் நிகழ்வு – ஜனவரி 28*
- *புதுவருட நிகழ்வு 2022*
- *றம்ழான் கலாசார நிகழ்வு - 2022*
- *வாணி விழா / சரஸ்வதி பூசை – ஒக்டோபர் 2022*
- *நத்தார் சமய நிகழ்வு – டிசம்பர் 16*




*பயிற்சிப் பட்டறைகள்*

- *ஜூன் 8 ஆந்திகதி சமூக நல்லிணக்கத்திற்கான ஆய்வு முன்மொழிவுக்-கான ஆய்வுப் பிரச்சினையைக் கண்-டறிதல்.*
- *ஜூன் 10 ஆந்திகதி நல்லிணக்கம் மற்றும் ஒத்திசைவு குறித்த ஆய்வுத் தலைப்புகளை உருவாக்குதல்.*
- *ஜூன் 17 ஆந்திகதி ஆய்வு முன்மொழிவொன்றுக்கான ஆய்வுப் பிரச்சினையைக் கண்டறிதல்.*
- *ஒகஸ்ட் 31 ஆந்திகதி நல்லிணக்க நிலையம் / சமூக ஒத்திசைவு நிலையங்களுக்கான இணையத்தளத்தை உருவாக்கல்.*

- ஓகஸ்ட் 25 ஆந்திகதி நல்லிணக்கம் தொடர்பான சமூக ஆய்வுகளில் தரவு சேகரிப்பு.

செப்டம்பர் 26 ஆந்திகதி நல்லிணக்கத்தினம் கொண்டாடப்பட்டது, மேலும், சகவாழ்வு நிலையச் செய்திமடலும் வெளியிடப்பட்டது.

நடைமுறைப்படுத்தப்படுகின்ற கற்கைநெறிகள்

- அரசியலில் பெண்களை வலுவூட்டுவதற்காக, முன்மொழியப்பட்ட உயர் சான்றிதழ் கற்கைநெறி (ACEWP)
- ஊடகக் கல்வியறிவு மற்றும் இதழியல் பற்றிய முன்மொழியப்பட்ட உயர் சான்றிதழ் கற்கைநெறி (ACMLJ)
- ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கத்துக்காக முன்மொழியப்பட்ட முதலாவது சருவதேச மாநாடு - (ICHR 2022) ஜனவரி 2023 இல் நடாத்தப்பட்டது.

## 3.11 விசேடதேவையுடையோருக்கான ஆதரவு நிலையம்

அறிமுகம்

விசேடதேவையுடையோருக்கான ஆதரவு நிலையம் என்பது விசேட தேவையுடைய ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறப்புச்சேவைகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒரு நிலையமாகும். இந்நிலையம் பிராந்தியத்திலுள்ள ஏனைய விசேட தேவையுடைய உறுப்பினர்களுக்கும் அதன் சேவைகளை விரிவுபடுத்த விரும்புகிறது. இஃதொரு நன்கு கட்டமைக்கப்பட்ட நிலையமாகும்.

இவ்வாதரவு நிலையம் உள்ளக ஆய்வு, ஊழியர்களுக்கும் மாணவர்களுக்குமான விழிப்புணர்வுப் பட்டறை, விசேடதேவையுடையோருக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பூர்த்திசெய்துள்ளதோடு அணுகல் கணக்காய்வுக் குழுவையும் உருவாக்கியுள்ளது.

இங்கு விசேடதேவையுடையோருக்கான கையேட்டைத் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

பயிற்சிப் பட்டறைகள்

- ஓகஸ்ட் 26, நவம்பர் 25 ஆகிய திகதி-களில் விசேடதேவையுடையோர் குறித்த விழிப்புணர்வுப் பயிலரங்கம்

## 3.12 கலாசார நிலையம்

அறிமுகம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தில் கலாசார நிலையம் ஓகஸ்ற் 01, 2022 இல் நிறுவப்பட்டது. கலைநிகழ்வுகள், திருவிழாக்கள், பட்டறைகள், கலாசார நிகழ்ச்சிகள் என்பவைமூலம் கலாசாரம், கலைகள் ஆகியன பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக இந்நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் பிற சமூகங்களைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த வழியாகவும் இது இருக்கின்றது. அதனடிப்படையில் அழகியற்றிறன்களையும் சமூக ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்காக வருடந்தோறும் கலை, கலாசார நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் என்பவற்றை நடாத்த இந்நிலையம் திட்டமிட்டுள்ளது.

முக்கிய செயற்பாடுகளும் பொறுப்புகளும் அழகியற்றிறன்களையும் சமூக ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்காக வருடந்தோறும் கலை, கலாசார நடவடிக்கைகள், போட்டிகள் என்பவற்றை நடாத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

- பீடரீதியாக கலை, கலாசார நிகழ்ச்சிகளை திறம்பட ஒழுங்கமைக்க வழிவகுத்தல்.
- வெளிப்புற வளங்களின் உதவியோடு கலை, கலாசாரம் பற்றிய பயிற்சிக் கருத்தரங்குகளையும் பட்டறைகளையும் ஒழுங்கு செய்தல்,
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சமூக முகவர்களுக்கும் இடையே நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்தல்.

- பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளின் மீது பங்களிப்பை விருத்தி செய்ய ஏற்பாடு செய்தல்.
- கலாசாரம், மதிப்புகள், அடையாளங்கள் என்பவற்றை ஆவணப்படுத்த கலாசார அருங்காட்சியகமொன்றை நிறுவுதல்.

இந்தக் காலகட்டத்தில், கலாசார அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவு இந்தியத் துணைத்தூதரகத்திடம் கையளிக்கப்பட்டது. மேலும் இசைக்கருவிகள் சுவாமி விவேகானந்தா நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. மாணவர்களிடையே கலை, கலாசார உணர்வை வலுவூட்டும்விதத்தில் நடனக்கழகம், நாடகக்கழகம், வடிவமைப்புக்கழகம், இசைக்கழகம், ஊடகக்கழகம் என்பன உருவாக்கப்பட்டு, அவை சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

## 3.13 பல்கலைக்கழக வணிக இணைப்பு

அறிமுகம்

பல்கலைக்கழகங்கள் அறிவு, கண்டுபிடிப்பு, புத்தாக்கம் என்பனவற்றின் ஆதாரமாக உள்ளன. ஆராய்ச்சிகள் மதிப்புமிக்க உற்பத்திகளையும் சேவைகளையும் உருவாக்கி சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகின்றன. இதனடிப்படையில் பல்கலைக்கழக வணிக இணைப்பு, வவுனியாப் பிராந்தியத்திலுள்ள வணிக சமூகத்தினருக்கு வசதியளிப்பதற்-காகத் தாபிக்கப்பட்டது.

வவுனியா வளாகம், பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டபின், 2021 செப்டம்பர் 25 இல் நடைபெற்ற பேரவையின் முதற்கூட்டத்திலேயே இயக்குநர் ஒருவரை நியமித்து துணைவேந்தர் இவ்விணைப்பை அறிமுகப்படுத்தினார். அதன் பின்னர், பல்கலைக்கழகம் எஹெட் (AHEAD) செயற்பாட்டின் கீழ் பணிபுரிய அனுமதியையும் ஆதரவையும் பெற்றது. இதில் நான்கு கட்டங்கள் உள்ளன, வவுனி-யாப் பல்கலைக்கழகம் தற்போது மூன்றாவது கட்டத்தில் உள்ளது.

பயிற்சிப் பட்டறைகள்

- மார்ச் 02 இல் கண்டுபிடிப்புகளுக்கும் புத்தாக்கங்களுக்குமான (மாணவர்களுக்கான) பட்டறை
- ஓகஸ்ற் 10 இல் பல்கலைக்கழக வணிக இணைப்புச் செயற்பாடுகள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்-களின் பங்களிப்புகள் குறித்த பயிற்-சிப் பட்டறை.
- ஒக்டோபர் 12 இல் தற்கால வரி-களுக்கு விண்ணப்பித்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட வர்த்தகர்களுக்- கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

திட்டங்களின் விவரங்கள் (உள்ளூர் / வெளிநாட்டு நிதியுதவி)

- வணிக இணைப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய உலக வங்கி எஹெட் நிதியுதவியின் கீழ் ரூபா 4,000,000.00 ஐ உதவியாக வழங்கியது.
- ஜனவரி 2022 இன் இறுதியில் தேசிய, சருவதேச நியமங்களை ஏற்றுக்-கொண்டு, பல்கலைக்கழக வணிக இணைப்புக்குத் தேவையான யாப்பு, கொள்கைகள், சகல நியமப் படிவங்-கள் என்பவற்றைத் தயாரித்ததன் மூலம் நான்கு மாதங்களுக்குள் பல்-கலைக்கழக வணிக இணைப்புக்காக உலக வங்கி மூலம் நிதியளிக்கப்பட்ட முதலாங்கட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.
- முதலாங்கட்டத்தை முடித்த பின்னர், பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகை நிறுவு-வதற்கு நான்கு மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. எஹெட் செயற்-பாட்டுக்கூடாக நியமிக்கப்பட்ட முகாமையாளருடன் தேவையான அனைத்து வசதிகளையுங்கொண்டு பல்கலைக்கழக வணிக இணைப்புச் செயற்பட்டது. ஜூலை 2022 இறுதி-யில் பல்கலைக்கழக வணிக இணைப்பு இரண்டாம் கட்டச் செயற்-பாடுகளை நிறைவு செய்தது. இதன்-பின்னர், ஆற்றல் சார்ந்த ஆய்வாளர்-களுக்கு உதவுவதற்காக மேலும் ஐந்து மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது.

- ஒக்டோபர் 2022 இன் இறுதியில் மூன்றாம் கட்ட நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக வணிக இணைப்புத் தொடங்கியது. இந்தக் கட்டத்தில், சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகள் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவி-யது. டிசம்பர் இறுதியில் பீடங்களி-லிருந்து ஆறு திட்டங்கள் அடை-யாளம் காணப்பட்டன.

## 3.14 உடற்கல்வி அலகு

அறிமுகம்

உடற்கல்வி அலகு வவுனியாப் பல்கலைக்-கழகத்தின் மாணவர்கள், ஊழியர்கள் ஆகி-யோரின் விளையாட்டு, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்-வதற்காகவும் அவற்றை ஊக்கப்படுத்துவதற்-காகவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வல-கிலுள்ள விளையாட்டு மைதான வசதிகள் சமூகத்தின் பயன்பாட்டுக்காகவும் விடப்படு-கின்றன.

பயிற்சிப் பட்டறைகள்

- எல்லே விளையாட்டு நடுவர் பட்டறை – மார்ச் 13

ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள்

- அமரர் சி. ஞானேஸ்வரன் நினைவு விளையாட்டு நிகழ்வு - ஏப்ரல் 07
- வியாபாரக் கற்கைகள் பீடம் வெள்ளி விழா - ஏப்ரல் 28-31
- பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்கள் சந்திப்பு - ஏப்ரல் 28-31
- வீதியோட்டப்போட்டி - ஆகஸ்ட் 27
- முன்னாள் வளாகமுதல்வரான அமரர் நா. பாலகிருஷ்ணன் அவர்களின் நினைவேந்தல் - செப்டம்பர் 04
- திருகோணமலை வளாக நட்புறவுத் துடுப்பாட்டப்போட்டி - செப்டம்பர் 21
- திறந்த கெரம் போட்டி - செப்டம்பர் 23-30
- திறந்த சதுரங்கப்போட்டி – செப்டம்-பர் 23-30
- திறந்த பூப்பந்துப்போட்டி - செப்டம்-பர் 23-30.
- திறந்த கராத்தேப்போட்டி – செப்டம்-பர் 23-30
- வருடாந்தப் பெருஞ்சமர் துடுப்பாட் - டப்போட்டி - அக்டோபர் 01-02
- திறந்த வலைப்பந்துப்போட்டி – அக்-டோபர் 03
- பிரயோக விஞ்ஞான பீடம் வெள்ளி விழாத் துடுப்பாட்டப்போட்டி – அக்-டோபர் 12
- கிழக்கு ஊழியர் நட்புறவுத் துடுப்-பாட்டப் போட்டி - அக்டோபர் 14
- பீடங்களுக்கிடையிலான விளையாட்-டுப்போட்டி - அக்டோபர் 31 - நவம்பர் 10

பங்கேற்பு

- இளந்தென்றல் காற்பந்துப்போட்டி – செப்டம்பர் 17, 18
- சருவதேசப் பல்கலைக்கழக விளை-யாட்டுத் தினம் - செப்டம்பர் 20
- சப்ரா 7 ரக்பி போட்டி - அக்டோபர் 14
- யூ 23 கனிஷ்ட தேசிய கூடைப்பந்து வெற்றிக்கிண்ணப்போட்டி – அக்டோ- பர் 14
- வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி-யாலயத்துடன் சதுரங்க நட்புறவுப்-போட்டி - அக்டோபர் 19
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ரக்பி வெற்றிக்கிண்ணப்போட்டி- நவம்பர் 05
- வவுனியா மாவட்ட அணியுடனான பூப்பந்து நட்புறவுப் போட்டி -நவம்பர் 09
- வாஜ் ஜூனியர் பிரீமியர் லீக் 2022 - நவம்பர் 10-14
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பூப்பந்து வெற்றிக்கிண்ணப்போட்டி - நவம்பர் 11-13
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துட- னான கரப்பந்து நட்புறவுப் போட்டி - நவம்பர் 16
- வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்துடன் சதுரங்க நட்-புறவுப் போட்டி - நவம்பர் 16

- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகள வெற்றிக்கிண்ணப்போட்டி - நவம்பர் 26-27
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணப்-போட்டி - நவம்பர் 26-27
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கராத்தே வெற்றிக்கிண்ணப்போட்டி - டிசம்பர் 02-04
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான காற்பந்து வெற்றிக்கிண்ணப்போட்டி - டிசம்பர் 02-04
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வலைப்பந்து வெற்றிக்கிண்ணப்-போட்டி - டிசம்பர் 07-08
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கேரம் வெற்றிக்கிண்ணப்போட்டி - டிசம்பர் 07-08
- ரஜரட்டைப் பல்கலைக்கழகத்துட- னான சதுரங்கம், கரப்பந்து, மேசைப்-பந்து நட்புறவுப்போட்டி - டிசம்பர் 12
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மேசைப்பந்து வெற்றிக்கிண்ணப்-போட்டி - டிசம்பர் 17-18
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கரப்பந்து வெற்றிக்கிண்ணப்போட்டி - டிசம்பர் 17-20

## 3.15 தொழில் வழிகாட்டல் அலகு

அறிமுகம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 819 இன் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டது. குறித்த அலகானது மாணவர்களின் தொழிற்றுறை சார்ந்த தயார்ப்படுத்தலுக்கான திறன் மேம்பாட்டினை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றது. இதன் மூலம் இவ்வலகானது பல்கலைக்கழக மாணவர்களது கல்வி, தொழிற்றுறைத் தீர்மானங்களில் உயர் மட்டத்தை அடைய உதவுவதோடு, அவர்கள் அவற்றில் தேர்ச்சி பெறுவதற்கான உந்துதலையும் அளிக்கின்றது.

தொழிற்சந்தை மற்றும் கல்விமுறைகளைப் புரிந்துகொண்டு தாங்கள் அறிந்தவற்றுடன் அவற்றைத் தொடர்புகொள்ள இவ்வலகானது மாணவர்களுக்கு உதவுகின்றது. இவ்வலகு பட்டதாரி மாணவர்கள் வேலை, கற்றல் பற்றித் திட்டமிடுவதற்கும் முடிவெடுப்பதற்கும் வழிகாட்டுகின்றது. அத்துடன் மாணவர்களை வேலை உலகுக்குத் தயார்ப்படுத்தவும் உதவுகின்றது. எமது பட்டதாரிகளுக்குத் தரம் வாய்ந்த அரச, தனியார்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதன் மூலம் பட்டதாரிகள், தொழிற்றுறையினர் ஆகிய இருதரப்பினரும் பரஸ்பரம் பயன்பெறும் நிலையினை உருவாக்குகின்றது.

பயிற்சிப் பட்டறைகள்

- பெப்ரவரி 09 - உற்பத்தி நிறுவனமொன்றின் நடவடிக்கைகளை நிருவகித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை
- ஏப்ரல் 06 – கொரோனாத் தொற்றுக்குப் பின்னரான புதிய இயல்பான நிலையில் இளைஞர்களின் திறன்கள் மற்றும் வேலைவாய்ப்பின் நிலை
- ஏப்ரல் 27 - புதிய பட்டதாரியொருவர் வேலை அல்லது உயர்கல்விக்கான நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவதற்குச் சுயவிபரக்கோவையை எவ்வாறு தயாரிப்பது, அந்நேர்முகத்தேர்வில் எவ்வாறு வெற்றி பெறுவது போன்றவை தொடர்பான பயிற்சிப்பட்டறை
- மே 24 - சரியான பாதைக்கான தகவல் தொழினுட்பம்
- மே 27 - சரியான பாதைக்கான தகவல் தொழினுட்பம்
- செப்டம்பர் 13 – பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பயிற்சிப்பட்டறை
- செப்டெம்பர் 14 – தொழில் வழிகாட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை

## *3.16 பாலினச் சமவுரிமைக்கும் சமத்துவத்துக்குமான நிலையம்*

*அறிமுகம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் இந்நிலை-யம் நிறுவப்பட்டது. வவுனியாப் பல்கலைக்-கழகம் தனது ஆறாவது மூதவைக் கூட்டத்தில் மேற்படி நிலையத்தை நிறுவியது. பல்-கலைக்கழகத்தில் ஊழியர்கள், மாணவர்-களுக்கிடையே பாலினச் சமவுரிமை, பாலினச் சமத்துவத்தைக் கொண்டுவருவதில் இந்-நிலையம் கவனஞ் செலுத்துகிறது.*

*இந்நிலையத்தின் நோக்கம் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே பாலினப் பாகுபாடற்ற வாய்ப்புகளை ஏற்படுத்துவதே-யாகும்.*

*2022 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்*

- *27 உறுப்பினர்களைக்கொண்ட குழு நிறு-வப்பட்டது.*
- *ஊழியர்களிடமிருந்து புகாரொன்று பெறப்பட்டது; இப்புகார் விசாரிக்கப்-பட்டு, ஒழுக்காற்று விசாரணை அறிக்கை துணைவேந்தருக்கு அனுப்பப்பட்டது.*
- *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்-குழுவின் பகிடிவதை முறைப்பாட்டு இணைய முகப்பிலிருந்து முறைப்பாடு-களைப்பெற்று, விசாரணை மேற்-கொண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பப்-பட்டது.*

*எதிர்காலத் திட்டம்*

- *மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பயிலரங்கு - விழிப்புணர்வு நிகழ்ச்சி*
- *ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் 'பன்முகத்தன்மையுடன் வாழக்கற்றுக்-கொள்வது' என்ற தலைப்பில் பயிற்சி அளித்தல்*
- *மாணவர்களும் ஊழியர்களும் கூடுதல் பயிற்சி பெற பாலின நிபுணரை ஒழுங்கு-படுத்துதல்*

## *3.17 சருவதேச ஆய்வு நிலையம்*

*அறிமுகம்*

*'சருவதேச ஆய்வு நிலையம்' (IRC) கல்விசார் ஆய்வு, அறிவு, தொழினுட்பப் பரிமாற்றம், அறிவார்ந்தவகையில் நிறுவன நடவடிக்கை-களை முன்னேற்றுவதற்கான சிந்தனைத் தொகுதி போன்ற விடயங்களில் சிறந்து விளங்கும் முன்னணி நிலையமாகும்.*

*இது பல்வேறுபட்ட துறைகளில் ஆய்வு-களுக்கு உதவுவதுடன் அவற்றை மேம்படுத்த-வும் ஊக்குவிக்கவும் நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகப் பிராந்திய, தேசிய, சருவ-தேச சமூக முன்னேற்றத்துக்கான ஆய்வு வாய்ப்புகளை மேம்படுத்தவும் தேசிய, சருவ-தேசப் பல்கலைக்கழகங்களுக்கும் தொழிற்-றுறைகளுக்கும் இடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் பாடுபடுகின்றது. இவற்றை எய்துவதற்காக இந்நிலையம் வவுனியாப் பல்கலைக்கழகத்துக்குள் உள்ள பிற நிலை-யங்கள், பீடங்கள் ஆகியவற்றுடனும் ஏனைய பிராந்திய, தேசிய, சருவதேசப் பங்காளிகளு-டனும் இணைந்து பணியாற்றுகின்றது.*

*கூட்டாகப் பணியாற்றுவதால் ஏற்படும் நன்மைகள்*

- *சம்பந்தப்பட்ட நாடுகள், நிறுவனங்கள், சமுதாயங்கள் ஆகியவற்றின் கொள்கை-களினதும் அவற்றின் செயற்படுத்துகை-களினதும் தரங்களை அதிகரித்தல்.*
- *நாடுகடந்தும் பல விடயங்கள் சார்ந்தும் வெவ்வேறு துறைகளிலும் பங்குதாரர் சமுதாயத்திலும் பணிபுரியும்வகையில் இளைஞர்களின் ஆற்றலையும் திறனை-யும் கட்டியெழுப்புவதோடு அவர்களுக்-கான கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, புத்தாக்-கம் ஆகிய துறைகளில் பொதுவான வைகளையும் முன்னுரிமைகளையும் அடையாளங்காணல்.*
- *(தனிநபர், நிறுவன அல்லது துறைசார் மட்டத்தில்) காலநிலை மாற்றத்துக்கான தாங்குதிறனுக்கும் நிலையான மாற்றத்-துக்குமான பரிமாற்றத்தைச் செயற்படுத்-துதலும் ஒவ்வொரு நிறுவனத்தின் சூழலுக்கும் ஏற்றவாறு முன்னேற்றங்-களையும் புதிய அணுகுமுறைகளையும் முன்னெடுத்தலும்.*

## 3.18 மக்கள் தொடர்புப்பிரிவு

அறிமுகம்

மக்கள் தொடர்புப்பிரிவு பொதுமக்களின் எதிர்பார்ப்புகளையும் அணுகுமுறைகளையும் மதிப்பீடு செய்வதுடன் பல்கலைக்கழகத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே பரஸ்பர உறவுகளையும் புரிதலையும் பேணுகிறது.

நிறுவனம், அதன் பல்வேறு செயற்பாடுகள், திட்டங்கள், பங்குதாரர்கள் போன்றவற்றுக்கிடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துவதும் தேவைக்கேற்ப ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் தகவல் வழங்குவதும் இப்பிரிவின் முதன்மை நோக்கமாகும். மேலும், நிறுவனத்தின் கற்றற்சூழலின் தரம், பன்முகத்தன்மை, கல்வியின் நிலை, பொதுமக்களின் கருத்து, எதிர்பார்ப்புகளைப் பெறுவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்க இப்பிரிவு உறுதிபூண்டுள்ளது.

மக்கள் தொடர்புப்பிரிவின் செயற்பாடு

வவுனியாப் பல்கலைக்கழக மக்கள் தொடர்புப்பிரிவின் செயற்பாடுகள் நிறுவனத்தையும் வெளியுலகத்தையும் இணைப்பதாகவுள்ளது. இது ஊடக நிறுவனங்களுடன் ஈடுபடுவதன் மூலமும் சமூக ஊடகங்களில் அதை விளம்பரப்படுத்துவதன் மூலமும் தகவல் வழங்குவதில் பங்குதாரர்களுக்கு உதவுவதன் மூலமும் நிறுவனத்தின் மதிப்பை அதிகரிக்க முயல்கிறது.

- ஊடகப் பிரதிநிதித்துவம். ஒரு நிறு-வனம் அல்லது தனிநபரை ஊடகங்-களுக்குப் பிரதிநிதித்துவப்படுத்துவது பொது உறவுகளில் நன்கு அறியப்-பட்ட செயற்பாடாகும்.
- நெருக்கடித்தொடர்பு
- உள்ளடக்க மேம்பாடு
- பங்குதாரர் உறவுகள்
- சமூகவூடக முகாமைத்துவம்

மக்கள் தொடர்புப்பிரிவின் பங்கு

1. பல்கலைக்கழகத்தின் முக்கிய நிகழ்-வுகள் பற்றிய தகவல்களை ஊடகங்-களுக்குத் தெரியப்படுத்தல்.
2. வெளிநாட்டு, உண்ணாட்டு வருகையாளர்கள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்துதல் - வெளிநாட்டு, உண்ணாட்டு வருகையாளர்களுக்குப் பல்கலைக்கழகத்துக்-குள் தங்குமிடம், போக்குவரத்து, வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்.
3. பொது எதிர்பார்ப்புகள், கருத்துகள் ஆகியவற்றையறிய, பல்கலைக்கழகத்துக்கும் வெளி நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருங்-கிய உறவுகளை ஏற்படுத்துதல்.
4. சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கும் அலுவலகங்களுக்கும் வருகையாளர்களை வரவேற்றலும் வழிநடத்துதலும். விசாரணையில் பல்கலைக்கழகத்தைப் பற்றிய பொருத்தமான தகவல்களை வருகையாளர்களுக்கு வழங்குதலும்.
5. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்விகளுக்கும் தெளிவுபடுத்தல்களுக்கும் பதிலளித்தல்.

# 4 ஆய்வு, புத்தாக்கம், வெளியீடு

## 4.1 அறிமுகம்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வழக்கமான பல்கலைக் கழகக் கல்வி நிகழ்ச்சிகள் யாவும் நடாத்தப்பட்டன. பணிநிலைகளுக்கான ஆட்சேர்ப்புத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதனால் புதிதாக நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம் பணியாளர் பற்றாக்குறையால் இடருற்றபோதிலும் கல்வி, ஆய்வு, நிருவாக நடவடிக்கைகள் யாவற்றையும் இனிதாக நிறைவு செய்தது. அனைத்துக் கற்பித்தல் நடவடிக்கைகளும் நேரிலும் இணைய நிகழ்நிலையிலும் நடாத்தப்பட்டன.

பல்கலைக்கழகச் சமூகம் ஐந்து புத்தகங்களையும் எழுபத்தொன்பது ஆய்வுத்தாள்களை இதழ்க் கட்டுரைகளாகவும் வெளியிட்டதுடன் அவற்றை உள்ளூர் மற்றும் சருவதேச மாநாடுகளில் சுருக்கமாக வழங்கியது. இரண்டு புதிய இதழ்கள் தொடங்கப்பட்டன. ஆண்டு ஆய்வு மாநாடுகள் மூன்று நடாத்தப்பட்டன. மூன்று கல்விசார் ஊழியர்கள் ஆய்வு நிதியுதவி பெற்றுள்ளனர். இரு கல்விசார் ஊழியர்கள் சேர்க்கப்பட்டனர். மேலுமொருவர் பட்டப்பின்படிப்பை நிறைவு செய்தார். எஹெட் (AHEAD) நிதியுதவிமூலம் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனீவாப் பல்கலைக்கழகத்தின் 'மோஸ்ற் நொவல் சொலுஷன்' (Most Novel Solution) விருதை ஒருவர் பெற்றார். இருவர் ஆய்வு நிதியுதவி பெற்றனர். சில மாணவர்கள் தேசிய, சருவதேசரீதியில் ஆய்வு, புத்தாக்கச் செயற்பாடுகளில் அவர்களின் செயற்றிறன்களுக்காக விருதுகள் பெற்றனர்.

அறிவுசார்சொத்துத் தொடர்பான கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கத்தின்கீழ் மென்பொருள் நிகழ்ச்சித்திட்டமொன்று உருவாக்கப்பட்டது. ஒரு புத்தாக்கவுரிமை பதிவு செய்யப்பட்டது. மேலும், நான்கு சருவதேச நிறுவனங்கள், ஆறு தொழில்முறை நிறுவனங்கள், பதினெட்டுப் பெருநிறுவனங்கள் என்பனவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

காப்புரிமை

- எஹெட் நிதியுதவியின்கீழ் பல்கலைக்கழக வணிக இணைப்பால் வசதிசெய்து தரப்பட்ட, யானைகளுக்கான மின்வேலி அமைப்பதற்கான காப்புரிமை தேசிய புலமைச்சொத்துகள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. உயிரியல் விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த கலாநிதி ச.விஜயமோகன் இக்கண்டுபிடிப்பின் சொந்தக்காரராகத் திகழ்கின்றார்.

புத்தாக்கங்களும் புலமைசார் பண்புகளும்

- இணையவழிச் சான்றிதழ் சரிபார்ப்பு முறைமை, பிரயோக விஞ்ஞான பீடத்தின் பௌதிக விஞ்ஞானத்துறை மாணவர்களால் உருவாக்கப்பட்டது.

ஆய்வு நிதியுதவிகள்

- 2022 ஆம் ஆண்டுக்கான ஆய்வு நிதியுதவியினைப் பேராசிரியை திருமதி அ. நந்தகுமாரன், கலாநிதி ச. விஜயமோகன், திருமதி ஜா. சா. தேவரூபன் ஆகியோர் வென்றனர்.

தேசிய மற்றும் சருவதேச விருதுகள்

- சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனிவாப் பல்கலைக்கழகத்தால் குழுத்திட்டங்களுக்காக திருமதி வி. ஷரணியா-வுக்கு 'மோஸ்ற் நொவல் சொலுஷன்' (Most Novel Solution) விருது வழங்கப்பட்டது.

அட்டவணை 4.1 வெளியீடுகளின் எண்ணிக்கை தேசிய / சருவதேச 2022

| இல. | தேசிய / சருவதேச வெளியீடு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இதழ்த் தாள்கள் | 26 |
| 2 | மாநாட்டுத் தாள்கள் | 50 |
| 3 | புத்தகங்கள் | 5 |
| 4 | புத்தக விமர்சனங்கள் | 1 |

## *4.2 இதழ்கள் / வெளியீடுகள்*

### *4.2.1 பிரயோக விஞ்ஞான பீடம்*

இதழ்கள்

1. சுரேந்திரன், எஸ். என்., நகுலன், ஆர்., தர்சன், ஏ., சிவபாலகிருஷ்ணன், கே., ராமசாமி, ஆர்., 2022. டெங்கு பாதிப்பு மற்றும் ஏடிஸ் வெக்டார் சேகரிப்புகள், கோவிட்-19 மக்கள்தொகை நடமாட்ட கட்டுப்பாடுகள், வெப்பமண்டல மருத்துவம் மற்றும் தொற்று நோய், 7 (10), ப.287.
2. சுரேந்திரன், எஸ். என். நகுலன், ஆர்., சிவபாலகிருஷ்ணன், கே., ஆர்த்தியன், எஸ்., தர்சன், ஏ., ஜெயதாஸ், டி.டி.பி., ரவீந்திரன், எஸ்., குமணன், டி. மற்றும் ராமசாமி, ஆர்., 2022. குறைந்துள்ளது. 2021 வரை இலங்கையில் COVID-19 இயக்கக் கட்டுப்பாடுகளால், BMC பொது சுகாதாரத்தில், 22(1), ப.388. டெங்கு பாதிப்பு
3. கயானன், எம். மற்றும் விஜேகோன், பி., 2022. ஜெனரலைஸ்டு ஸ்டோகாஸ்டிக் ரெஸ்டிரிக்டட் LARS அல்காரிதம், ருஹுஉனா ஜர்னல் ஆஃப் சயின்ஸ், 13(1), பக்.14-28.
4. ஷோரூபிகா, பி. மற்றும் ஷியாம், ஆர்., 2022. Blockchain ஐப் பயன்படுத்தி IoT பயன்பாட்டில் உள்ள பாதுகாப்பு மற்றும் தனியுரிமைச் சிக்கல்களைத் தணித்தல்: ஒரு ஆய்வு, தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைப்புக்கான ஏசியன் ஜர்னல் (AJCT), 8(2), பக். 78-86.
5. டெய்சி, எஸ்., கந்தசாமி, ஜே., குயென், டி.வி., ஜோஹிர், எம்.ஏ.எச்., ரத்னவீர, எச். மற்றும் விக்னேஸ்வரன், எஸ்., 2022. மீட்டெடுக்கப்பட்ட நீரில் இருந்து நுண்ணிய மாசுபடுத்திகளை அகற்றுவதற்கான சவ்வு அடிப்படையிலான சிகிச்சை முறைகளின் ஒப்பீடு நீரில், 14(22), ப.3708.
6. குமார், எஸ்., செல்வச்சந்திரன், எம்., வூ, சி., பாஸ்கல் ஜூனியர், ஆர். ஏ., ஜாங், எக்ஸ்., க்ருசன்மேயர், டி., ஷ்மெல், ஆர். எச்., ஸ்ப்ரூல்ஸ், எஸ்., மேக், ஜே.டி. மற்றும் டோனாஹூ, ஜே.பி., 2022 1, 2, 4, 5-டெட்ராகிஸ் (டிஃபெனில்பாஸ்பினோ) பென்சீன் பாலங்கள் கொண்ட ஹெட்டோரோட்ரிமெட்டாலிக் அசெம்பிளிகள்: ரெடாக்ஸ் ஆக்டிவ் மெட்டாலோடிதியோலீன் குழுக்களின் பிரிப்பு மற்றும் இடஞ்சார்ந்த நோக்குநிலையைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுமானங்கள், கனிம வேதியியலில், 61.181.
7. விதானகே, எம்., பண்டார, பி.சி., நோவோ, எல். ஏ., குமார், ஏ., அம்படே, பி., நவீந்திரகுமார், ஜி., ரணகலகே, எம். மற்றும் மாகன-ஆராச்சி, டி. என்., 2022. வளிமண்டலத்துடன் தொடர்புடைய சுவடு உலோகங்களின் படிவு நுண் துகள்கள்: சுற்றுச்சூழல் விதி மற்றும் உடல்நல அபாய மதிப்பீடு, வேதியியல் மண்டலத்தில், 303, ப.135051.
8. ஜேக்கப், வி., சோட், பி., சர்ச்சில், ஏ.சி., ஜாங், எச்., பார்டன், சி.வி., கிருஷ்ணானந்தசெல்வன், ஏ., போஸ்ட், ஏ.கே., பவர், எஸ்.ஏ., மெட்லின், பி. இ. மற்றும் டிஷ்யூ, டி.டி., 2022. உயர் பாதுகாப்பு ஐந்து மேய்ச்சல் புற்களில் காணப்படும் வறட்சியால் தூண்டப்பட்ட ஹைட்ராலிக் தோல்விக்கான விளிம்புகள், தாவரம், செல் மற்றும் சுற்றுச்சூழல், 45(6), pp.1631-1646.
9. வெத்தசிங்க, பி., கால்டெரா, ஐ., சஞ்சீவனி, என்., சமரசிங்க, டி., ஜெயசிங்க, எச்., விஜேதுங்க, ஏ. மற்றும் டி கோஸ்டா, ஜே., 2022. ஸ்டோமாடல் உடற்கூறியல், இலை அமைப்பு மற்றும் வெப்பமண்டல மழைக்காடுகளின் ஊட்டச்சத்துக்கள் மர இனங்கள், இலை பொருளாதார ஸ்பெக்ட்ரமின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் உயரத்திற்கு பதிலளிக்கின்றன, bioRxiv, pp.2022-01.
10. விஜிதரன், எஸ்., சசாகி, என்., வெங்கடப்பா, எம்., திரிபாதி, என்.கே., அபே, ஐ. மற்றும் சுசாகா, டி. டபிள்யூ., 2022. இலங்கையின் வவுனியா மாவட்டத்தில் வனப்பகுதி மாற்றங்களின் மதிப்பீடு: துணை தேசிய வனக் குறிப்பை நிறுவுவதற்கான தாக்கங்கள் உமிழ்வு நிலை, நிலத்தில், 11(7), ப.1061.

மாநாடுகள்

1. குமாரலிங்கம், எல்., தணிகாசலம், கே., சோதீஸ்வரன், எஸ்., மகாதேவன், ஜே. மற்றும் ரத்னராஜா, என்., 2022. முழு மூளை டிராக்டோகிராஃபியின் பிரிவு: 3D மூல வளைவு புள்ளிகளின் அடிப்படையில் ஒரு ஆழமான கற்றல் அல்காரிதம், செயல்முறைகளில் மருத்துவ இமேஜ் கம்ப்யூட்டிங் மற்றும் கணினி உதவி தலையீடு–MICCAI 2022, pp.185-195.
2. சுபரம்யா, எஸ்., கோகுல், டி., நகுலன், ஆர். மற்றும் பினிடியாராச்சி, UAJ 2022. வரைபட நரம்பியல் வலையமைப்பு அடிப்படையிலான அல்சைமர் நோய் வகைப்பாடு, கட்டமைப்பு மூளை வலையமைப்பைப் பயன்படுத்தி, வளர்ந்து வரும் பகுதிகளுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தின் முன்னேற்றங்கள் குறித்த 22வது IEEE இன் சர்வதேச மாநாடு பக். 1-6.
3. சந்தானகிருஷ்ணன், கே. மற்றும் செந்தூரன், வி., 2022. இலங்கைப் பல்கலைக்கழக சேர்க்கைகளைப் பொறுத்தமட்டில் வெட்டுப்புள்ளி கணக்கீட்டிற்கான ஒரு இணையான விநியோகிக்கப்பட்ட கிளஸ்டர் கம்ப்யூட்டிங் மாடல், கம்ப்யூட்டிங்கில் மேம்பட்ட ஆய்வுக்கான 2வது சர்வதேச மாநாட்டின் (ICARC), பக்.344 -348.
4. சுபரம்யா, எஸ்., நகுலன், ஆர்., கோகுல், டி., பினிடியாராச்சி யூ. ஏ. ஜே., 2022. அல்சைமர் கட்டமைப்பு இணைப்புகள் பற்றிய ஆழமான கற்றல் அடிப்படையிலான கண்டறிதல் மற்றும் பகுப்பாய்வு, முதுகலை அறிவியல் ஆய்வு கழகத்தின் செயல்முறைகளில், ப. 98.
5. சுபரம்யா, எஸ்., கோகுல், டி., நகுலன், ஆர்., பினிடியாராச்சி, யு. ஏ. ஜே., 2022. கிராஃப் நியூரல் நெட்வொர்க் அடிப்படையிலான அல்சைமர் நோய் வகைப்பாடு, கட்டமைப்பு மூளை வலையமைப்பைப் பயன்படுத்தி, 22வது IEEE சர்வதேச மாநாட்டின் முன்னெடுப்புகளில். பக்.1-6.
6. தர்மசேனா, எம். எஸ். எஸ். மற்றும் கிருஷாந்த், எஸ்., 2022. ஆசிரிய ஆண்டு ஆய்வு அமர்வு 2022 இன் செயல்முறைகளில், யு-நெட் மாற்றும் நரம்பு வலையமைப்பை பயன்படுத்தி வனப்பகுதி முன்கணிப்பு.
7. திவஹரன், எஸ்., சுபரூபன், எஸ்., கோபி பிரசாத், எஸ்., சனோஜ், எஸ்., டினோஜென், டி., அம்ரிதா, பி., லோஜெனா, என். மற்றும் கார்த்தீஸ்வரன், டி., 2022. ஐஓடியைப் பயன்படுத்தி பொருள்களைக் கண்காணிக்க நீருக்கடியில் ரோவர் மற்றும் நீரின் கீழுள்ள உயிரினங்கள், தகவல் தொடர்பு தொழினுட்பத்தில் முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு மாநாட்டின் செயல்முறைகள் 2022 (RCAதகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப 2022), பக். 10-16.
8. மெஹேந்திரன், ஒய்., கார்த்தீஸ்வரன், டி., மற்றும் கொடிகரா, என்.டி., 2022. பிசினஸ் அண்ட் இன்டஸ்ட்ரியல் ரிசர்ச் (ICBIR) 7வது IEEE இன்டர்நேஷனல் மாநாட்டின் செயல்முறைகளில், படச்செயலாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வாழைப்பழப் புத்துணர்ச்சியை அடையாளம் காணுதல், பக். 347-352.
9. செல்வரத்தினம், டி., நாசர், ஏ., பாலசிங்கம், எஸ். மற்றும் கார்த்தீஸ்வரன், டி., 2022. வணிகம் மற்றும் தொழில்துறை ஆய்வுக்கான 7வது IEEE சர்வதேச மாநாட்டின் செயற்பாட்டில், வினைத்திறன்மிக்க தொலைபேசிகளின் உணரிகளின் முடுக்கமானி மற்றும் GPS ஐப் பயன்படுத்தி தர அடிப்படையிலான சாலை தரவரிசை அமைப்பு (ICBIR), பக். 457-460.
10. வாசல்திலகே, டபிள்யூ. வி. எஸ். கே. மற்றும் கார்த்தீஸ்வரன், டி., 2022. மாற்றியமைக்கும் நரம்பியல் வலைப்பின்னல்களின் அடிப்படையில் சிங்கள மொழிக்கான மேம்படுத்தப்பட்ட கையால் எழுதப்பட்ட எழுத்து அங்கீகாரம், தொழில் நுட்பத்தில் ஒன்றிணைவதற்கான 7வது IEEE சர்வதேச மாநாட்டின் செயல்முறைகளில் (I12CT), பக்.
11. கஜன், என்., கண்ணன், கே., மற்றும் ஸ்ரீதரன், டி., 2022. விஞ்ஞானம் ஆய்வு மாநாட்டின் செயல்முறைகளில் (VRC2022) வலுவான தெளிவற்ற மெட்ரிக் இடைவெளியில் நிலையான புள்ளி தேற்றம்
12. யசோதா, ரா., அஹமட் ரிகாஷ், எச்., பாத்திமா நுஷ்கா, எம். ஐ. பாத்திமா சானாஸ், எம். எ. பாத்திமா, சர்பானா, எ., 2022. கோவிட்-19 தொடர்பான ட்விட்டரில் போலிச் செய்திகளைக் கண்ட-

றிதல்: என்- உடன் மெஷின் என்-கிராம் மாதிரியுடன் இயந்திர கற்றல் அல்காரி-தம்களின் பகுப்பாய்வு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 2வது சர்வதேச மாநாட்டின் செயல்-முறைகளில்.

13. சிவன்பு, ஏ., பிரியதர்ஷனி, ஆர்., கோகுல், டி. மற்றும் ரமணன், ஏ., 2022, பிப்ரவரி. நீருக்கடியில் பட மேம்பாடு, ஸ்கிப் இணைப்புகளுடன் டூயல் கன்வல்-யூஷனல் நியூரல் நெட்வொர்க்கைப் பயன்படுத்தி, 2வது IEEE கணினி-மயமாக்கலில் மேம்பட்ட ஆய்வுக்கான சர்வதேச மாநாடு (ICARC) (ICARC), பக்.224-229.

14. சிவன்பு, ஏ. மற்றும் தணிகாசலம், கே., 2022, டிசம்பர். தகவல் தொழில்நுட்ப ஆய்வுக்கான 7வது IEEE சர்வதேச மாநாடு (ICITR), பக்.1-6.

15. நித்தியராஜா, கே., ஹெட்டிதந்திரி, ஓ., நந்தகுமாரன், ஏ., விதானகே, எம்., 2022. ஜீயோலைட் மாற்றியமைக்கப்பட்ட டென்ட்ரோ பயோசார் கலவையைப் பயன்படுத்தி நீரில் உள்ள புளோரைடு மற்றும் கடினத்தன்மையை அகற்றுதல், ஆசிரிய ஆண்டு ஆய்வு அமர்வின் (FARS), பீடத்தின் செயற்பாடுகளில் பயன்பாட்டு அறிவியல், வவுனியாப் பல்கலைக்-கழகம், இலங்கை, ப 19.

16. ரிஸ்வானா, ஆர். எஃப்., நந்தகுமாரன், ஏ., ரத்நாயக்க, டபிள்யூ. எம். யு.கே., 2022. டித்தோனியா டைவர்சிஃபோலியா, கிளிரிசிடியா செபியம் மற்றும் கோழி உரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி திரவ கரிம உரம் உற்பத்தி, இலங்கை, ப.49.

17. யசந்திகா, டபிள்யூ. எச்.பி., பிரதீப்குமார், எம்., மற்றும் தனிச்செல்வன், டி., 2022. லிமோனியா அசிடிசிமாவிலிருந்து தயாரிக்கப்படும் செயற்படுத்தப்பட்ட கார்பனைப் பயன்படுத்தி கழிவுநீரில் இருந்து நைட்ரேட் மற்றும் பாஸ்-பேட்டை அகற்றுதல். 2022 ஆண்டு ஆய்வு மாநாட்டின் செயல்முறைகளில், பட்ட-தாரி ஆய்வுகள் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை, ப.21.

18. அல்விஸ், டபிள்யூ. எல். என். எஸ்., பிரதீப்குமார், எம்., மற்றும் ரங்கநாதன், கே., 2022. ரசாயன நீராற்பகுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட களை இனங்களி-லிருந்து பயோஎத்தனால் உற்பத்திக்கான சாத்தியம், வருடாந்திர மாணவர் ஆய்வுக் கழகத்தின் (ASRC) பிரயோக அறிவியல் பீடத்தின் செயல்முறைகளில், வவுனியா பல்கலைக்கழகம், ஸ்ரீ இலங்கை.

19. ரசங்கா, கே. எல். டி.சி., மற்றும் டெய்சி, எஸ்., ஒருங்கிணைந்த பைட்டோரேமீடி-யேஷன் மற்றும் பயோசார்ப்ஷன் நுட்பங்கள் மூலம் மீன்வளர்ப்பு கழிவு-நீரை சுத்திகரிப்பு. 15வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு-2022 இல். ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கை, ப.40.

20. நவோகினி, என்., மற்றும் டெய்ஸி, எஸ்., 2022. ரைஸ் மில் கழிவுநீரில் இருந்து கரிமப் பொருட்களை அகற்றுவதற்கான ஒருங்கிணைந்த பைட்டோரேமீடியே-ஷன் மற்றும் பயோசார்பன்ட் நுட்பங்கள். வருடாந்த மாணவர் ஆராய்ச்சி காங்-கிரஸின் (ASRC) செயல்முறைகளில், பிரயோக விஞ்ஞான பீடம், வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை. ப.44.

21. மதுமாலி ஆர். எம்.சி., வஹலா டபிள்யூ. எம்.பி. எஸ்.பி., வெலிகண்ணா டி. ஆர்., துனேந்திரன் பி., சஞ்சீவனி எச்.கே. என்., சமரசிங்க டி.பி., டி கோஸ்டா டபிள்யூ. ஏ.ஜே. எம்., 2022. விதான இலைப் பகுதி குறியீட்டு எண் இலங்கையின் ட்ரொ-பிகல் ஃபாரெஸ்ட் இன்டெக்ஸ் இன் ஃபாரெஸ்ட் ஃபாரெஸ்ட் இன்டெக்ஸ் உடன் மதிப்பீடு ஒரு பரந்த உயர சாய்வு, இல் 26வது சர்வதேச வனவியல் மற்றும் சுற்றுச்சூழல் கருத்தரங்கின் செயல்-முறைகள், வனவியல் மற்றும் சுற்றுச்-சூழல் அறிவியல் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை, ப.13.

22. மதுமாலி, ஆர். எம். சி., சஞ்சீவனி, எச். கே. என்., மற்றும் டி கோஸ்டா, டபிள்யூ. ஏ. ஜே. எம்., 2022. இலங்கையின் வெப்ப மண்டல மழைக்காடுகளின் உயரமான சாய்வு முழுவதும் நீண்ட கால சராசரி காலநிலை மற்றும் மண் நீர் பற்றாக் குறையின் சிறப்பியல்பு, பேராதனையின் முதுகலை நிறுவனம், பேராதனைப் பல்கலைக்கழகம், ப.62.

23. சஞ்சீவனி, எச்.கே. என்., டி கோஸ்டா, டபிள்யூ.ஏ.ஜே.எம்., மற்றும் மாபா, ஆர்.பி .2022 பேராதனையின் முதுகலை நிறுவ னம், பேராதனைப் பல்கலைக்கழகம், ப.66.

24. மதுமாலி, ஆர். எம். சி., வஹலா, டபிள்யூ. எம். பி.எஸ்.பி., சஞ்சீவனி, எச்.கே.என்., சமரசிங்க, டி.பி., மற்றும் டி கோஸ்டா, டபிள்யூ.ஏ.ஜே.எம்., 2022. புவியியல் அம்சம் மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றின் தாக்கம், இலங்கையின் வெப்பமண்டல மழைக்காடுகளின் பரந்த நிலப்பரப்புகளில் விதானம் திறந்தவெளியில் - PGIA இன் நான்காவது ஆண்டு மாநாடு, பேர்தெனிய முதுகலை நிறுவனம், பேராதனைப் பல்கலைக்கழகம், பக்-71.

25. மதுஷானி கே. ஜி. எஸ் மற்றும் ரணசிங்க யு. டி. எஸ். எஸ். 2022. வவுனியா மாவட்டம் செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மண் பண்புகளின் தற்போதைய சூழ்நிலை பற்றிய ஆரம்ப ஆய்வு, இலங்கையின் 26வது சர்வதேச வனவியல் மற்றும் சுற்றுச்சூழல் பல்கலைக்கழகத்தின் 26வது சர்வதேச வனவியல் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் செயற்பாடுகளில், இலங்கை, ப.118

### 4.2.2 வியாபாரக்கற்கைகள் பீடம்

இதழ்கள்

1. கலைநாதன், கே., மற்றும் கெங்காதரன், எல்., 2022. பெக்கிங் ஆர்டர் மற்றும் மூலதனக் கட்டமைப்பின் வர்த்தக-முடக்க மாதிரிகள்: இலங்கை பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் அனுபவப் பரிசோதனையில். வளர்ந்து வரும் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் கொள்கையின் இதழ் 1(1), பக்.13-25.

2. லரோஜன், சி., 2022. இலங்கையில் வங்கித் துறையின் லாபத்தில் வங்கி-உள் காரணிகளின் தாக்கம். வணிகக் கற்கைகள் இதழில், 6(2) பக்.1-20.

3. ஜானகி, எஸ்.டி., 2022. கொழும்பு பங்குச் சந்தையில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் முதலீட்டு முடிவுகளில் நடத்தைக் காரணிகளின் தாக்கம்: வடக்கு மாகாணம் - இலங்கைக்கான சிறப்புக் குறிப்பு. சமூக அறிவியலில் ஆய்வு மற்றும் புதுமைக்கான சர்வதேச இதழ் (IJRISS) 6(12), pp.42-53.

4. ரவீந்திரகுமாரன், கே., மற்றும் ரவிந்திரகுமாரன், என்., 2022. சுற்றுலா மற்றும் CO2 உமிழ்வுகளுக்கு இடையிலான உறவை ஆய்வு செய்தல்: APEC பகுதியில் இருந்து சான்றுகள். சர்வதேச சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆய்வு இதழில்.

5. தயாபரன், ஏ., 2022. காய்கறி விவசாயிகளிடையே பயிர் பல்வகைப்படுத்தல் முடிவு மற்றும் பயிர் தீவிரத்தை தீர்மானிப்பவர்கள். வணிக மேலாண்மை இதழில், 5(1), பக்.73 -89.

6. தயாபரன், ஏ., மற்றும் முஹந்திரம், எம். எம். என்., 2022. பதுளை மாவட்டத்தில் சிறு உடமையாளர்களிடையே தேயிலை செடி வகைகளின் தேர்வுகளில் உள்ள பாகுபாடு காரணிகள்: பல பாகுபாடு பகுப்பாய்வு. இலங்கை வணிகப் பொருளாதார இதழில், 11(1), பக்.74-93.

7. முஹந்திராம, எம். எம். என்., மற்றும் தயாபரன், ஏ., 2022. இலங்கையின் பதுளை மாவட்டத்தில் தேயிலை சாகுபடியின் தேர்வுடன் தொடர்புடைய காரணிகள், வணிகக் கற்கைகள் இதழில், 6(2).

8. தயாபரன், ஏ., நெருஜா, என்., மற்றும் பவுலினா, எம்.ஜி.பி., 2022. மொத்த காரணி உற்பத்தித்திறன் மற்றும் முல்லைத்தீவில் நெல் விவசாயத்தை தீர்மானிக்கும் ஆதாரங்கள்: ஒரு கட்டணம்-பிரிமாண்ட் இன்டெக்ஸ் அணுகுமுறை. இலங்கை சமூக அறிவியல் மற்றும் மனிதநேய இதழில், 2, பக்.117-126.

9. தயாபரன், ஏ., பண்டார, டி. எம். ஜி. டி., மற்றும் குணதிலகா, ஜி.ஒய்.என்., 2022. பொலன்னறுவை மாவட்டத்தில் முதல் குழந்தை பிறக்கும் போது பெண்களின் வயதை நிர்ணயிப்பவர்கள். இலங்கை சமூக அறிவியல் மற்றும் மனிதநேய இதழில், 2, பக்.31-40.

10. ஞானசீலன், ஜே., 2022. செய்தித்தாள் தலையங்கங்களில் ஆங்கில செயற்பாடுகள் மற்றும் சித்தாந்தங்கள். மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் ஆய்வு இதழில். 7(1).

11. சர்மதா, பி., 2022. கோவிட் - 19 நிகழ்வுகளில் மொழியின் பயன்பாடு: ஒரு

கார்பஸ் - லெக்சிகன்களின் அடிப்படையிலான ஆய்வு.

12. செல்வராஜன், பி மற்றும் தயானி, எஸ்., 2022 இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெண் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் சவால்கள், வணிகக் கற்கைகள் இதழ், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, 6(2), பக்.64-76.

13. நௌஃபா, எஸ். எஸ்., அலெக்சாண்டர். ஆர், மற்றும் சண்முகநாதன், கே., 2022. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கைத்தறி ஆடைகளை நோக்கி நுகர்வோர் வாங்கும் நோக்கத்தில் சமூக ஊடக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் தாக்கம். Wayamba Journal of Management, 13(2).

14. நௌஃபா, எஸ்., ருக்ஷான், ஏ., மற்றும் கஜந்தி, எஸ்., 2022. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கைத்தறி ஆடைகளை நுகர்வோர் வாங்கும் நோக்கத்தில் சமூக ஊடக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் தாக்கம். Wayamba Journal of Management (WJM), 13 (2).

15. கஜேந்திரன், கே., அச்சுதன், எஸ்., உமணகேனன், ஆர்., மற்றும் சிவனேந்திரா, எஸ். 2022. பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கான நுகர்வோர் பண்புக்கூறுகள்: காரணங்கள் மற்றும் விளைவுகள். சமூகம் மற்றும் வணிக ஆய்வு.

மாநாடுகள்

1. பனுஜா, இ., கீர்த்திகா டி., மற்றும் கோப்பெருந்தேவி, கே., 2022. நிறுவன சமூகப் பொறுப்பில் பெண் இயக்குநர்களின் தாக்கம்: இலங்கையில் பட்டியலிடப்பட்ட வங்கிகள் பற்றிய ஆய்வு. வவுனியாப் பல்கலைக்கழக சருவதேச ஆய்வு மாநாட்டின் (VUIRC) நடவடிக்கைகளில்.

2. பிரதீபன், என்., மற்றும் கலைநாதன், கே., 2022. தனிப்பட்ட நிதி நல்வாழ்வில் நிதி கல்வியறிவின் தாக்கம்: தனிப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து சான்றுகள். வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வணிகக் கற்கைகள் தொடர்பான ஆய்வு மாநாட்டின் நடவடிக்கைகளில்.

3. ரன்சரா, எம். எஸ். என்., மற்றும் தயாபரன், ஏ., 2022. சிறு ரப்பர் விவசாயிகளிடையே ஊடுபயிர் சாகுபடியை ஏற்றுக்கொள்வது: களுத்துறை மாவட்டத்திலிருந்து சான்றுகள். இலங்கை விவசாய பொருளாதார சங்கத்தின் 15வது வருடாந்த ஆய்வு மன்றத்தின் செயற்பாடுகளில், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (UWU).

4. மதுபாஷினி, கே. எச். எம்., மற்றும் தயாபரன்., ஏ, 2022. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பண்ணை மற்றும் விவசாய வேலைகளுக்கிடையே உள்ள தொழிலாளர் ஒதுக்கீட்டை தீர்மானிப்பவர்கள். இலங்கை விவசாய பொருளாதார சங்கத்தின் 15வது வருடாந்த ஆய்வு மன்றத்தின் செயற்பாடுகளில், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (UWU).

5. தீகொட, டி. எம்.சி. எம்.கே., மற்றும் தயாபரன், ஏ., 2022. தேயிலைத் தோட்டத் துறையில் தொழிலாளர் வெளியேற்றம்: நுவரெலியா மாவட்டத்தில் இருந்து சான்றுகள். இலங்கை விவசாய பொருளாதார சங்கத்தின் 15வது வருடாந்த ஆய்வு மன்றத்தின் செயற்பாடுகளில், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (UWU).

6. ஞானசீலன், ஜே., மற்றும் ஜெயசீலன், எஸ்., 2022. மனிதநேயம் மற்றும் சமூக அறிவியலில் ஆங்கிலக் கட்டுரை எழுதுதல் மற்றும் மதிப்பீட்டிற்கான கருப்பொருள் பன்முகத்தன்மை குறிப்பு மாதிரி. வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் 13வது ஆண்டு கற்பித்தல் மற்றும் கற்றல் ஆன்லைன் மாநாட்டின் செயல்முறைகளில். பக்.89.

7. 7. ஜெயசீலன். எஸ்., மற்றும் செனரத்னே, சி. டி., 2022. மாணவர் எழுத்து மற்றும் மொழிக் கல்வியின் தொடரியல் கட்டமைப்பு பகுப்பாய்வு - ஒரு பைலட் ஆய்வு.

8. டக்ளஸ், எஸ்., 2022. இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகத்தின் திட்ட முகாமைத்துவ பட்டதாரிகளிடமிருந்து அரசாங்கம், அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான மொழித் திறன்கள் பற்றிய ஒரு தேவைப் பகுப்பாய்வு. இலங்கை வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வணிகக் கற்கைகள் பீடம் (RCBS) தொடர்பான 4வது ஆய்வு மாநாட்டின் நடவடிக்கைகளில்.

9. பெர்னாண்டோ, P. J. L. R., மற்றும் Selvarajan, P., 2022. இலங்கையின் நீர்கொழும்பு பகுதியில் ஜவுளி வாங்கும் நடத்தையை பாதிக்கும் காரணிகள். இலங்கை திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவு தொடர்பான 1வது சருவதேச மாநாட்டின் நடவடிக்கைகளில்.
10. சதீஸ்குமார், டி., மற்றும் செல்வராஜன், பி., 2022. மாணவர் நிகழ்த்துபவர்: இளங்கலைப் பட்டதாரிகளின் செயற்றிறன் அளவீட்டுக்கான ஒரு தட அமைப்பு. இலங்கை திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவு தொடர்பான 1வது சர்வதேச மாநாட்டின் நடவடிக்கைகளில்.
11. மதுஷன், பி., மற்றும் புஷ்பநாதன், ஏ., 2022. மனித வள முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பெருநிறுவன தொழில்முனைவு: இலங்கை SME களில் ஒரு அனுபவ ஆய்வு. இலங்கை தொழில்முனைவோர் மன்றத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டில், தொழில்முனைவோர் துறை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பக்.81-87.
12. தேவநேஸ், என்., போகேந்திரன், கே., மற்றும் புஷ்பநாதன், ஏ., 2022. தனிப்பட்ட காரணிகள் மற்றும் தொழில் முனைவோர் திறன்களுக்கு இடையிலான நெக்ஸஸ்: இளங்கலைப் பட்டதாரிகளின் ஆய்வு. சருவதேச திறந்த பல்கலைக்கழக ஆய்வு அமர்வுகளில் (iOURS 2022), இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பக்.101.
13. சச்சினிலா, டபிள்யூ. ஏ. ஐ., மற்றும் ஜூட் லியோன், எஸ். ஏ., 2022. நீர்கொழும்பு நகரப் பகுதி மக்களைப் பற்றிய சிறப்புக் குறிப்புடன், இலங்கையில் அழகுசாதனப் பொருள்களைத் தோற்றுவிக்கும் நாடு மற்றும் நுகர்வோர் வாங்கும் நோக்கம். முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவோர் தொடர்பான 1வது சர்வதேச மாநாட்டின் (ICOME 2022) நடவடிக்கைகளில், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
14. ஹரிகரன், எஸ்., மற்றும் வினோத்ரா, ஜே., 2022. மனிதவள மேலாண்மை நடைமுறைகளில் கோவிட்-19 இன் தாக்கம்: இலங்கையில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்கள் பற்றிய ஒரு தரமான ஆய்வு. 6வது CIPM சர்வதேச ஆய்வு கருத்தரங்கின் செயல்முறைகளில்.
15. அஹமட், ஏ., அகீலா, எம்.ஆர்.எஃப் மற்றும் நந்தகோபன், ஒய்., 2022. இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் மேலாண்மை இளங்கலைப் பட்டதாரிகளிடையே தொழில் முனைவோர் எண்ணம். 6வது CIPM சர்வதேச ஆய்வு கருத்தரங்கின் செயல்முறைகளில்.
16. பிரதீப்காந்த், எல்., மதிவதனி, எஸ்., 2022. இலங்கையின் கட்டுமானத் திட்டங்களில் இடர் அடையாளம் காணும் கருவிகள் மற்றும் நுட்பங்கள், வணிகக் கற்கைகள் தொடர்பான ஆய்வு மாநாட்டின் செயல்முறைகளில் (RCBS-2022), வணிகக் கற்கைகள் பீடம், வவுனியாப் பல்கலைக்கழகம்.

புத்தகங்கள், திருத்தப்பட்ட புத்தகங்களில் அத்தியாயம், புத்தக விமர்சனம், வெளியீடுகள்

1. ஞானசீலன், ஜே., 2022. புத்தகத்தின் விமர்சனம், இலங்கையை மையமாகக் கொண்ட ஆங்கில மொழிப் பிரைமர்: இலங்கையின் மீது எச்சரிக்கை மணிகளை எழுப்புதல்: ஆசிரியர்: பேராசிரியர். எஸ். ரத்னஜீவன் எச். ஹூல். கொழும்பு டெலிகிராப்பில் வெளிவந்தது. வெளியீடு: பல்தேயஸ் இறையியல் கல்லூரி, கோணேசபுரி, திருகோணமலை. அச்சுப்பொறிகள்: ஜேஆர் இண்டஸ்ட்ரீஸ், உடுவில், வெளியான ஆண்டு: 2022. 340 பக். ரூ. 1200, ISBN 9786246077020
2. கோப்பெருந்தேவி, கே., 2022. கணக்கியல் (தமிழ் மீடியம்), குமரன் புக் ஹவுஸ், கொழும்பு மற்றும் சென்னை. ISBN: 978-624-6164-25-6.
3. ஞானசீலன், ஜே., 2022. பொற்காலங்களில் வன்னி விவசாயம் (போர் காலத்தில் வன்னி விவசாயிகள்) நூல் 2022 ஜனவரி 11 ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகத்தின் சூசைரத்தினம் மண்டபத்தில் FBS இல் வெளியிடப்பட்டது.
4. யோகராஜா நந்தகோபன் தனது முதல் பதிப்பை ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் ப்ராஜெக்ட் மேனேஜ்மென்ட் என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இது கலாசார மையம், ருஹுணு பல்கலைக்கழகத்தால்

வெளியிடப்பட்டது மற்றும் பணியாளர் மேலாண்மை பட்டய நிறுவனம் (CIPM) திட்ட மேலாண்மை கற்பவர்களுக்கு புத்தகம் பரிந்துரைக்கப்பட்டது. நூல் வெளியீட்டு விழா 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீடத்தில் உள்ள சூசைரத்தினம் தொகுதியில் நடைபெற்றது.

5. திருமதி சுபஜனா ஜெயசீலன் தனது இரண்டாவது கவிதை நூலை Sun Never Sets என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இது ருஹுுணு பல்கலைக்கழகத்தின் கலாச்சார மையத்தால் வெளியிடப்பட்டது. நூல் வெளியீட்டு விழா 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீடத்தில் உள்ள சூசைரத்தினம் தொகுதியில் நடைபெற்றது.
6. சூசைப்பிள்ளை டக்ளஸ் தனது முதல் கவிதை நூலான சிறுவர்களுக்கான கவிதை என்ற தலைப்பில் எழுதியுள்ளார். கலாசார நிலையம், ருஹுுணு பல்கலைக்கழகம் இதனை வெளியிட்டது. நூல் வெளியீட்டு விழா 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீடத்தின் சூசைரத்தினம் தொகுதியில் நடைபெற்றது.

### 4.2.3 தொழில்நுட்பக் கற்கைகள் பீடம்

இதழ்களும் மாநாடுகளும்

1. பிருந்தவி, வி., மற்றும் விஜித்குமார், கு 2022. கோவிட்-19 தொற்றுநோய்களின் போது, தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தில், இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் டிஜிட்டல் கற்றலை நடைமுறைப்படுத்துவதற்கு தகவல் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு.
2. கிருஷ்ணானந்தன், எஸ்., சஞ்சீத், பு., மற்றும் ருக்ஷானி, பு., 2022. நீரிழிவு நோயாளியின் துல்லியம்: கணினி மற்றும் தகவல்தொடர்புகளில் வினைத்திறன்மிக்க ட்ரெண்ட்ஸ் செயல்முறைகளில், இயந்திர கற்றலைப் பயன்படுத்தி சர்க்கரை அளவுகளில் இருந்து கணிப்பு.
3. சந்தானகிருஷ்ணன், கே., மற்றும் செந்தூரன், வி., 2022. இலங்கைப் பல்கலைக்கழக சேர்க்கைகளைப் பொறுத்தமட்டில் இசட் புள்ளி கணக்கீட்டிற்கான இணையான விநியோகிக்கப்பட்ட கிளஸ்டர் கம்ப்யூட்டிங் மாடல், கம்ப்யூட்டிங்கில் மேம்பட்ட ஆய்வுக்கான சருவதேச மாநாட்டின் நடவடிக்கைகளில்.
4. பிறேமிஷா, பி., மயூரன், க., பிரசாந்த், சே., மற்றும் பானுஜன், கு., 2022. வினைத்திறன்மிக்க கம்ப்யூட்டிங் மற்றும் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் தொடர்பான சருவதேச ஆய்வு மாநாட்டின் செயல்முறைகளில் பக்கவாத எதிர்வுகூறலுக்கான குழும இயந்திர கற்றல் அணுகுமுறை.
5. மயூரன், க., பிறேமிஷா, பி., பிரசாந்த், சே., மற்றும் பானுஜன், கு., 2022. ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டின் செயல்முறைகளில், XGBoost ஐப் பயன்படுத்தி மனிதர்களின் தூக்கப் பழக்கவழக்கங்களைப் பரிசீலிப்பதனூடாக மன அழுத்தத்தைக் கண்டறியும் செயன்முறை.
6. பிருந்தவி, வி., மயூரன், ப., ஷர்னிதா, டி., 2022. தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு மாநாட்டின் செயற்பாட்டில், தரவரிசை அம்சத் தேர்வு முறைகள் மற்றும் இயந்திர கற்றல் வழிமுறைகளைப் பயன்படுத்தி தர்பூசணியின் தரக்கணிப்பு.
7. திவாகரன், சே., சுபரூபன், எஸ்., கோபி பிரசாத், எஸ்., சனோஜ், எஸ்., டினோஜென், டி., அம்ரித்தா, பி., லோஜெனா, ந. மற்றும் கார்த்தீஸ்வரன், த., 2022, நீருக்கடியிலுள்ள உயிரினங்கள், பொருள்களைக் கண்காணிப்பதற்குப் பொருள்களின் இணையத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நீர்மூழ்கி ரோவர், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு மாநாட்டின் செயல்முறைகள் 2022 (RCA தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 2022), பக். 10-16.
8. சோமசுந்தரம், சோ., நிரஞ்சன், வே., மற்றும் புஜிந்தன்,ச, 2022. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு மாநாட்டின் செயற்பாட்டில், ஃப்ரீமேன் செயின் கோட் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி லாஸி படச்சுருக்கம்.
9. பிறேமிஷா, பி., பிரசாந்த், சே., மற்றும் மயூரன், க., 2022. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின்

முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு மாநாட்டின் செயற்பாட்டில், இதய நோய் முன்னறிவிப்புக்கான ஹைப்பர் பாராமீட்டர் டியூன்ட் என்செம்பிள் அப்ரோச்.

10. வீரசூரிய, பி.ஜி.பி. எஸ்., குமார கே.கே.பி. எல்., குமசரு, டபிள்யூ. எல். எஸ்., காரியவசம், கே.பி.ஜி. எஸ்.ஜி. மற்றும் நிரோஷி, பி., 2022 தரவு அகழ்வுக் காரணிகளை அடையாளம் காண்பதற்கான அணுகுமுறை க.பொ.த. (சா/த) பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப முடிவுகளைப் பாதிக்கிறது, இவ்வாராய்ச்சியின் செயல்முறைகள் தகவல் முன்னேற்றங்கள் பற்றிய மாநாடு மற்றும் தகவல் தொடர்பு.

# 5 மூலதனவேலைகளும் திட்டமிடலும்

## 5.1 அறிமுகம்

மூலதன வேலைகளுக்கும் திட்டமிடலுக்குமான பிரிவு, கற்பித்தல், கற்றல், ஆய்வு நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலை உறுதிப்படுத்துவதற்காகக் கட்டடங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, வேலையின் தரத்தைப் பேணுவதோடு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத்திட்டங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவுக்குள்ளும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்குள்ளும் திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்கிறது.

மூலதன வேலைகளுக்கும் திட்டமிடலுக்குமான பிரிவின் முதன்மைச் செயற்பாடு, பல்கலைக்கழகத்தின் மூலதனக் கட்டடத் திட்டங்களைப் பயனாளிகளின் தேவைகளுக்கேற்ப, திட்டமிடல், கொள்முதல் செய்தல், கண்காணித்தல் என்பனவாகும். இச்செயற்பாட்டுக்குள் கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கட்டுமானப் பணிகளைக் கண்காணித்தல், திட்டங்களின் ஆவணங்களையும் ஒப்பந்தத் தொடர்புகளையும் பேணுதல், இடைநிலை மற்றும் இறுதிக் கொடுப்பனவுச் சான்றிதழ்களைச் சான்றளித்தலும் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்தலும், தகராறுகளைக் கையாளுதல், திட்டங்களின் நிறைவில் அவற்றைக் கையேற்றல் ஆகியவை உள்ளடங்கும்.

### நடைபெறும் கட்டுமானத் திட்டம்

நூலகத்துக்கான மூன்று மாடிக் கட்டடங்கள், சேவைகள், தொடர்புடைய கட்டமைப்புகளை வடிவமைத்தல், நிருமாணித்தல், ஆணையிடல் - என்ற இந்தவொன்றே தற்போது நடைபெற்றுவரும் ஒரேயொரு கட்டுமானத் திட்டமாகும். சென்றல் எஞ்ஜினியரிங் சேவிசஸ் (ப்ரைவேற்) லிமிடெட் என்ற நிறுவனம் ரூபா 312 மில்லியன் செலவில் இக்கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் 2019 இல் தொடங்கப்பட்டு 2022 இலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய கட்டுமானத் திட்டங்கள்

1. பிரயோக விஞ்ஞான பீடத்தின் பௌதிக விஞ்ஞானத்துறைக் கட்டடத்தின் முதலாந்தளத்தை நிருமாணித்து முடித்தல் - ரூபா 84.0 மில்லியன்
2. நிருவாகக் கட்டட நிருமாணம் - ரூபா 584.0 மில்லியன்
3. கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர்களுக்கான மூன்றடுக்குப் பணியாளர் குடியிருப்புத் தொகுதி (10 அலகுகள்) மற்றும் கல்விசாராப் பணியாளர்களுக்கான ஈரடுக்குத் தனியாட்களுக்கான குடியிருப்புத் தொகுதி – ரூபா 350.0 மில்லியன்
4. வியாபாரக்கற்கைகள் பீடத்திற்கான கட்டடத்தையும் அதனுடன் தொடர்பான ஏனைய கட்டமைப்புகளையும் நிருமாணித்தல் - கட்டம் 2 – ரூபா 926.0 மில்லியன்

முன்மொழியப்பட்ட உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்

1. கேட்போர்கூடக் கட்டட நிருமாணம் - ரூபா 600.0 மில்லியன்
2. ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, பணியாளர் குடியிருப்புத்தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய குடியிருப்புப் பகுதிக்குக் கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதி – ரூபா 60.0 மில்லியன்
3. மாணவர்களுக்கான இரண்டு மாடிக் கட்டடம் – ரூபா 244.0 மில்லியன்
4. 400 மாணவர்களுக்கான நான்கு மாடி 100 அறைகள் கொண்ட விடுதிக் கட்டடம் – ரூபா 400.0 மில்லியன்
5. தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்துக்கான கட்டடம் – கட்டம் 2 – ரூபா 978.0 மில்லியன்
6. விருந்தினர் விடுதிக்கான இரண்டு மாடிக் கட்டடம் - ரூபா 45.0 மில்லியன்
7. உடற்கல்வி அலகுக்கான மூன்று மாடிக் கட்டடம் – ரூபா 92.0 மில்லியன்
8. பிரயோக விஞ்ஞானப்பீட நிருவாகக் கட்டடம் - ரூபா 571.0 மில்லியன்

## 5.2 பாரிய புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப்பணிகள்

மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியிலும் சில பாரிய புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன. அவை பின்வருமாறு:

| வேலைகளின் பெயர் | ஒப்பந்ததாரர் | ஒப்பந்த விலை (ரூபா.) | நிலை |
|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப நிலையத்திலுள்ள குளிரூட்டிகளுக்கான மின்னிணைப்பு | ஃபோக்கஸ் மாக்கெற்றிங் அன்ட் எஞ்ஜினியரிங் கொம்பனி (ப்ரைவேற்) லிமிடெட் | 2,328,050.00 | 11 மார்ச் 2022 இல் நிறைவடைந்தது |
| அலுமினிய அடைப்புகளால் தகவல் தொழில்நுட்ப நிலை-யத்தைப் பாகங்களாகப் பிரித்-தல் | ஃபோக்கஸ் மாக்கெற்றிங் அன்ட் எஞ்ஜினியரிங் கொம்பனி (ப்ரைவேற்) லிமிடெட் | 3,374,164.00 (வரிகளை உள்ளடக்காது) | 12 பிப்ரவரி 2022 இல் நிறைவடைந்தது |
| தொழில்நுட்பக் கற்கைகள் பீடக் கட்டடத்துக்கு முன்பாக நடைபாதை நிருமாணம் | சுரேன் எஞ்ஜினியரிங் | 3,042,600.00 (வரிகளை உள்ளடக்காது) | 31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்தது |
| இரசாயனவியல், உயிரியல் ஆய்வுகூடங்களுக்குச் சூழல்-நேயப் பரிகரிப்பு அலகை நிருமாணித்தல் | ஹரன் பில்டர்ஸ் | 3,460,412.20 (வரிகளை உள்ளடக்காது) | 31 ஆகஸ்ட் 2022 இல் நிறைவடைந்தது |
| உயிரியல் விஞ்ஞானக் கட்ட-டத்தில் மடிக்கக்கூடிய அலுமி-னிய அடைப்பு வேலை | தங்கம்ஸ் எஞ்ஜினியரிங் | 1,892,500.00 | 10 பிப்ரவரி 2022 இல் நிறைவடைந்தது |
| வியாபாரக் கற்கைகள் பீடச் செயற்றிட்ட முகாமைத்துவக் கட்டடத்தில் அலுமினிய அடைப்பு மற்றும் சாளரத் திரைச்சீலை வேலை | தஸ்விகா எஞ்ஜினியரிங் கொன்ஸ்ற்ரக்ஷன் | 4,099,160.00 (வரிகளை உள்ளடக்காது) | 12 பிப்ரவரி 2022 இல் நிறைவடைந்தது |

# 6 மாணவர் நலனோம்பல்

## 6.1 அறிமுகம்

மாணவர் நலன்புரிப்பிரிவு மாணவர்களுக்குப் பின்வரும் சேவைகளை வழங்குகிறது.

- தங்குமிட வசதிகளை வழங்குதல்
- மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் மற்றும் ஏனைய புலமைப்பரிசில்களின் ஒருங்கிணைப்பு
- மாணவர் உதவுதொகை பெற மாணவர்களைத் தெரிவு செய்தலும் வழங்குதலும்
- மாணவர்களுக்கும் ஊழியர்களுக்குமான சிற்றுண்டிச்சாலை வசதிகளை ஏற்படுத்துதல்
- மாணவர் அமைப்புகளின் உருவாக்கத்துக்கு உதவுதல்
- மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு அனுமதி பெறுவதை எளிதாக்கல்
- மடிக்கணினிக்கடனைப் பெறுவதற்கான மாணவர் உறுதிப்படுத்தல் கடிதங்களையும் பரிந்துரைகளையும் வழங்குதல்

### 6.1.1 பீடங்களின் மாணவர் அமைப்புகள்

ஒவ்வொரு பீடங்களுக்குமான தேர்தல் திகதி

- பிரயோக விஞ்ஞான மாணவர் ஒன்றியம் – 07.02.2022
- வியாபாரக் கற்கைகள் மாணவர் ஒன்றியம் – 12.01.2021
- தொழினுட்பக் கற்கைகள் மாணவர் ஒன்றியம் – 01.03.2022
- வவுனியாப் பல்கலைக்கழக பொது மாணவர் ஒன்றியம் – 17.03.2022

## 6.2 நிதி உதவி

### 6.2.1 மஹாபொல புலமைப்பரிசில்

*2022 ஆம் ஆண்டில் புதிதாக இணைந்த மற்றும் ஏற்கனவேயுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மஹாபொல புலமைப்பரிசில்களின் மாதாந்தக் கொடுப்பனவு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (மஹாபொல புலமைப்பரிசில்களின் மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 5000.00. திறைசேரிப் பங்களிப்பு ரூபா 2450.00, மஹாபொல அறக்கட்டளையின் பங்களிப்பு ரூபா 2550.00.)*

| 2022 | மாணவர்களின் எண்ணிக்கை | வியாபாரக் கற்கைகள் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | தொழில் நுட்பக் கற்கைகள் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 296 | 411,600.00 | 154,350.00 | 159,250.00 | 725,200.00 |
| பிப்ரவரி | 296 | 411,600.00 | 154,350.00 | 159,250.00 | 725,200.00 |
| மார்ச் | 293 | 409,150.00 | 154,350.00 | 154,350.00 | 717,850.00 |
| ஏப்ரல் | 293 | 409,150.00 | 154,350.00 | 154,350.00 | 717,850.00 |
| மே | 293 | 409,150.00 | 154,350.00 | 154,350.00 | 717,850.00 |
| ஜூன் | விடுமுறை | | | | |
| ஜூலை | 158 | 387,100.00 | - | - | 387,100.00 |
| ஆகஸ்ட் | 158 | 387,100.00 | - | - | 387,100.00 |
| செப்டம்பர் | 157 | 369,950.00 | 14,700.00 | - | 384,650.00 |
| அக்டோபர் | 198 | 365,050.00 | 120,050.00 | - | 485,100.00 |
| நவம்பர் | 204 | 369,950.00 | 129,850.00 | - | 499,800.00 |
| டிசம்பர் | 121 | - | 129,850.00 | 166,600.00 | 296,450.00 |
| மொத்தம் | | 3,929,800.00 | 1,166,200.00 | 948,150.00 | 6,044,150.00 |

### 6.2.2 உதவித்தொகை

*2022 ஆம் ஆண்டில் புதிதாக இணைந்த மற்றும் ஏற்கனவேயுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை மாதாந்தக் கொடுப்பனவு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (உதவித்தொகை மாதாந்தக் கொடுப்பனவு ரூபா. 4000.00)*

| உதவித்தொகையாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|
| 2022 | மாணவர்களின் எண்ணிக்கை | வியாபாரக் கற்கைகள் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | தொழில் நுட்பக் கற்கைகள் பீடம் | மொத்தம் |
| ஜனவரி | 741 | 1,228,000.00 | 1,128,000.00 | 608,000.00 | 2,964,000.00 |
| பிப்ரவரி | 726 | 1,180,000.00 | 1,120,000.00 | 604,000.00 | 2,904,000.00 |
| மார்ச் | 743 | 1,232,000.00 | 1,132,000.00 | 608,000.00 | 2,972,000.00 |
| ஏப்ரல் | 726 | 1,200,000.00 | 1,088,000.00 | 616,000.00 | 2,904,000.00 |
| மே | 722 | 1,200,000.00 | 1,092,000.00 | 596,000.00 | 2,888,000.00 |
| ஜூன் | விடுமுறை | | | | |
| ஜூலை | 289 | 1,156,000.00 | - | - | 1,156,000.00 |
| ஆகஸ்ட் | 288 | 1,152,000.00 | - | - | 1,152,000.00 |
| செப்டம்பர் | 328 | 1,172,000.00 | 140,000.00 | - | 1,312,000.00 |
| அக்டோபர் | 407 | 1,020,000.00 | 608,000.00 | - | 1,628,000.00 |
| நவம்பர் | 492 | 1,140,000.00 | 828,000.00 | - | 1,968,000.00 |
| டிசம்பர் | 343 | - | 736,000.00 | 636,000.00 | 1,372,000.00 |
| மொத்தம் | | 11,680,000.00 | 7,872,000.00 | 3,668,000.00 | 23,220,000.00 |

### 6.2.3 மாணவர்களுக்கான விடுதி வசதிகள்

விடுதிகளின் வரையறுக்கபட்ட இடவசதி காரணமாக, முதலாமாண்டு மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்கு விடுதி வசதியைப் பல்கலைக்கழகம் வழங்கியது.

| தங்கும் விடுதி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆண் விடுதி | 330 |
| பெண்கள் விடுதி – A | 64 |
| பெண்கள் விடுதி – B | 393 |
| பெண்கள் விடுதி – C | 84 |
| மொத்தம் | 871 |

வாடகைக் கட்டடங்களில் மாணவர்களுக்கான குடியிருப்பு வசதிகள் - 2022

பல்கலைக்கழக விடுதிகளில் இடவசதி குறைவாக இருந்ததால், அதிக மாணவர்கள் தங்குவதற்குக் கட்டடங்கள் வாடகைக்குப் பெறப்பட்டன.

| வீடு | மாணவர்களின் எண்ணிக்கை | வாடகை மற்றும் பயன்பாடுகள் (ரூபா.) |
|---|---|---|
| வாடகை விடுதி | 35 | 2,574,858.99 |
| மொத்தம் | 35 | 2,574,858.99 |

# 7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை

அறிமுகம்

புதிய பல்கலைக்கழகப்பேரவை 25.09.2021 அன்று நடைபெற்ற அதன் முதலாவது கூட்டத்தில் புதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவை நியமித்தது. நல்லாட்சிக்கான பொது நிறுவன வழிகாட்டியின் 7.4.1 பந்தியில் செய்யப்பட்ட விதிகளின்படி, பல்கலைக்கழகத்தின் மூன்று நிருவாகஞ் சாராப் பேரவை உறுப்பினர்களை இந்தக் குழு கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், நான்கு (04) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், பேராசிரியர் காமினி சேனாநாயக்க, திரு. கே. ஞானசிறி பிரிட்டோ மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வாளர் அத்தியட்சகர் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றன. இலங்கை. நல்லாட்சிக்கான பொது நிறுவன வழிகாட்டுதல்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தின்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தனது கடமைகளைச் செய்வதுடன் நிதி மற்றும் கல்விச்செயற்பாடுகளில் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளை வலுப்படுத்தப் பரிந்துரைகளைச் செய்கிறது. மேலும், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் கல்விசாராச் செயற்பாடுகளையும் நிருவாக நடைமுறைகளையும் மேம்படுத்துகிறது.

உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு நேரடியாகத் துணைவேந்தரிடம் அவர்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைச் செயற்படுத்த அறிக்கை சமர்ப்பிக்கின்றது.

உள்ளகக் கணக்காய்வுப்பிரிவின் செயற்பாடுகள்

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு பல பரிந்துரைகளையும் வழிகாட்டுதல்களையும் முன்மொழிவுகளையும் வழங்கியது. அவை கணக்காய்வு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு மேம்பாடு ஆகியவற்றை நோக்கி வழி வகுத்தன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ், ஒரு துணை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒரு கணக்காய்வு உதவியாளரைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு ஐந்து எண்ணிக்கையிலான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கூடாக 13 பரிந்துரைகளைப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதன் மூலம் வழங்கியது. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு மதிப்பாய்வையும் மதிப்பீட்டையுஞ்செய்து பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

1. கொள்முதல் ஒப்புதல் மட்டத்தை உள்ளடக்கிய அதிகார அளிப்புகளைத் தயார் செய்தல்
2. நிலையான சொத்துப் பதிவேட்டைப் பராமரித்தலும் கணினிமயமாக்கலும்
3. கல்வியாளர்களுக்குப் பெறுமதி மிக்கதான வெளிநாட்டு ஆய்வு நிதியுதவியினை அல்லது பல்கலைக்கழகத்தில் ஆய்வு நிலையம் ஒன்றைத் தொடங்குதல்
4. கல்விப்பணியாளர்களின் கல்விப் பணிகளான அரையாண்டுக்கான விரிவுரைகள் நடாத்துதல், வினாத்தாள் தயாரித்தல், வினாத்தாள் சீரமைத்தல் போன்றவற்றை மென்பொருளில் பதிவேற்றம் செய்வதன்மூலம் அவற்றைக் கண்காணிப்பதற்கான "கணக்கிடுதல் மாதிரி மென்பொருளை" உருவாக்குதல்
5. பல்கலைக்கழகத் தேவைகளுக்கேற்ப மாற்றத்துடனான பரீட்சைப் பெறுபேறுகளுக்கான திறந்த மூல மென்பொருளை கல்விப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் ஆதரவுடன் தொடங்குதல்
6. விடுதியில் தங்குவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மாணவர் அடையாள அட்டைகளை வழங்குதல
7. தங்கும் விடுதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களிடமிருந்தும் ஆண்டு விடுதிக்கட்டணத்தை முற்பணமாக வசூலித்தல்
8. ஒன்பது மாதங்களுக்குக் கல்வி விடுமுறை பெறுவோரும் பிணையொப்பந்தங்களில் கையெழுத்திடுதல்
9. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை 03/2022 இன்படி பல்கலைக்கழகப் பிணைமீட்பு மதிப்பாய்வுக் குழுவை நிறுவுதல்

10. கல்வி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 28.06.2017 திகதியிடப்பட்ட சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை 01/2017 இன் பிரிவு 09 இன் படியும் அரச கணக்குகள் திணைக்களத்தால் 12.07.2013 திகதியிடப்பட்ட SA/AS/AA/ சுற்றறிக்கை மூலமும் சொத்துக்களின் சரியான அடையாளத்துடன் சொத்தின் குறியீட்டு முறையைப் பின்பற்றல்
11. அனைத்துப் பீடாதிபதிகளுக்கும் பணிப்பாளர்களுக்கும் துறைகள், பிரிவுகள், அலகுகள் ஆகியவற்றின் தலைவர்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் கொடுப்பனவுக் கோரிக்கைகளைத் தயார் செய்வதற்கான உள்ளகச் சுற்றறிக்கையை வெளியிடுதல்
12. நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பில் உள்ளகக் கட்டுப்பாட்டையும் முறைமைகளையும் மேம்படுத்துதல்
13. மனித வள மேம்பாடு, பணியாளர்களின் வருகை, சரக்கிருப்பும் கையிருப்பும் சரிபார்ப்பு, ஒப்பந்த நிருவாகம், வருவாய், செலவு, முதலீடுகள், கொள்முதல், ஊதிய முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம், ஒப்பந்தச் சேவைகள், ஆட்சேர்ப்புகள், பதவியுயர்வுகள், ஓய்வு பெறும்போதான நன்மைகளை வழங்கல், வாகனப் பராமரிப்பு, பிணைகளையும் ஒப்பந்தங்களையும் மீறுதல், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், காசு முகாமைத்துவம் ஆகியவற்றில் முறைமைகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் மேம்படுத்துதல்

உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு மாதிரிக் கணக்காய்வு நுட்பத்தைப் பயன்படுத்தி அதன் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை முடிந்தளவு நிறைவேற்றியுள்ளது. அத்தோடு, பிணை, ஒப்பந்த மீறல் மீட்புச் செயன்முறைகளையும் கணக்காய்வு வினவல்களுக்கு முன்வைக்கப்படும் பதில்களைத் தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கிறது.

உள்ளகக் கணக்காய்வானது கட்டாயமான வழக்கமான கணக்காய்வுக்கு முந்திய நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

அட்டவணை 7.1 கணக்காய்வுக்கு முந்திய செயற்பாடுகள்

| எண் | கணக்காய்வுக்கு முந்திய செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதி (நிரந்தரம்) | 2 |
| 02 | பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதி (தற்காலிக) | 44 |
| 03 | ஓய்வூதியக் கொடுப்பனவு | 4 |
| 04 | ஓய்வூதியம் | 2 |
| 05 | கட்டுமான ஒப்பந்தத்தின் இறுதிக் கொடுப்பனவுகள் | 0 |
| 06 | பிணைகளும் ஒப்பந்தங்களும் | 2 |

எதிர்காலத் திட்டங்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு முறைமைகளையும் கட்டுபாடுகளையும் மீளாய்வு செய்வதற்கும் அதன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் நிருவாக நடைமுறைகளை மேம்படுத்துவதற்காகவும் தனது நோக்கங்களை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. மேலும், உள்ளகக் கணக்காய்வுப்பிரிவின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை இடையூறின்றி முழுமையாகச் செய்வதற்கு மனித வள ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரப்பட்டது.

# *8 நிலையான வளர்ச்சி இலக்குகள்*

*2015 இல் அங்கீகரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில், எங்கள் நிறுவனம் எமது நிலையான வளர்ச்சித் திட்டங்களிலும் செயற்பாடுகளிலும் 17 இலக்குகளை ஏற்றுக்கொண்டது.*

*பல்கலைக்கழகம் நிலையான வளர்ச்சி இலக்கு 4 ஐப்பூர்த்திசெய்வதற்காகப் பல்கலைக்கழக ஆய்வுக்குழுவையும் அத்துடன் பல்கலைக்கழகமட்டத்திலும் பீடமட்டத்திலும் தர உத்தரவாத நிலையங்களையும் நிறுவியது. தர உத்தரவாத நிலைய இயக்குநர், அந்நிலையத்தின் நிருவாகக் குழு, மூதவை, பேரவை ஆகியவற்றுக்கு முன்னேற்றம், செயற்றிறன் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார். நிலையான வளர்ச்சி இலக்குகள் ஏற்கனவே மூலோபாயத்திட்டம், செயற்றிட்டம் ஆகியவற்றில் இணைக்கப்பட்டுள்ளன.*

*பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் கல்வியை நிருவகிப்பதற்கு நிதிரீதியாக ஆதரவளிக்க, துணைவேந்தர் நிதியும் பிற நிதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. குறைந்த கட்டணத்தில் பல்கலைக்கழகச் சமூகத்துக்கு உணவு வழங்கப்படுகிறது. மாணவர் நலன்புரிப்பிரிவும் சுகாதார நிலையமும் நல்லாரோக்கியத்தையும் நல்வாழ்வையும் கவனித்துக்கொள்கின்றன. தர உத்தரவாத நிலையம் அனைத்துப் பட்டப்படிப்புத் திட்டங்களிலும் கல்வியின் தரத்தைக் கண்காணிக்கிறது. பீடநிருவாகங்களும் பாலினச் சமவுரிமைக்கும் சமத்துவத்துக்குமான நிலையமும் பாகுபாட்டைத் தடுக்க, பாலினச் சமத்துவப் பிரச்சினைகளைக் கையாளுகின்றன. சுத்தமான நீரை வழங்குவதற்காகப் பல்கலைக்கழகம் மூன்று முக்கிய நீர் சுத்திகரிப்பு அலகுகளை நிறுவியுள்ளது, மேலும், சீரான துப்புரவுச்சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டால், சுத்தமான எரிசக்தியை வழங்குவதற்குப் பல்கலைக்கழகம் கூடுதல் நிதியை ஒதுக்கும். கல்விசார், நிருவாக, கல்விசாராப் பணியாளர்கள் கண்ணியமாக வேலையைச் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பல்கலைக்கழகம் பங்களிப்புச்செய்கிறது. புதிய பல்கலைக்கழகத்தின் மூலோபாயத்திட்டம், செயற்பாட்டுத்திட்டம் என்பன நிறுவனத்தின் புத்தாக்கம், உட்கட்டமைப்புவசதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.*

*ஊழியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே அவர்களது உரிமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதிலுள்ள சமத்துவமின்மையைக் குறைக்க நிருவாகம் உறுதிபூண்டுள்ளது. பல்கலைக்கழகப்பகுதியில் ஒரு நகரத்தையும் அதனைச்சுற்றி பல்கலைக்கழகக் கல்விச்சமூகம் தங்குமிடவசதிகளையும் அமைப்பதை ஊக்குவிக்கப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.*

*உயிரியல் விஞ்ஞானத்துறை சூழலுடன் நட்பான, பொறுப்பான நுகர்வுக்கும் உற்பத்திக்குமான நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது. மேலும், இது பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள நீர்ப்பாசனக்குளத்தில் உயிரினங்கள் வாழ்வதை நோக்கமாகக் கொண்ட காலநிலை சார்ந்த நடவடிக்கைகளை ஆராய்வதுடன் பல்கலைக்கழகச் சமூகத்தின் உதவியுடன் நுண்ணிய திட்டங்களை ஆரம்பித்து நிலத்தில் உயிர்களைப் பாதுகாக்கத் திட்டமிட்டுள்ளது. நிருவாகம் நிறுவனத்தில் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டக்கூடிய மூலோபாயத்திட்டத்தை முன்மொழிந்துள்ளதுடன் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையப் பல கூட்டுப்பங்காண்மைகளையும் உருவாக்கியுள்ளது.*

*கல்வியின் தரம்*

*எங்கள் நிறுவனம் புதிதாக நிறுவப்பட்டாலும் உள்ளடங்கிய, சமவுரிமையான தரமான கல்வியை உறுதிசெய்வதற்கும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் நிலையான வளர்ச்சி இலக்கு 4 ஐப் பின்பற்ற முயலுகிறது. எங்கள் நிறுவனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட உள்வாரி மாணவர்களுக்கு பட்டக்கற்கைநெறிகளைப் பின்பற்றவும் வெளிவாரி மாணவர்களுக்கு விரிவாக்கற் கற்கைநெறிகளைப் பின்பற்றவும் வாய்ப்பு அளிக்கிறது. மாணவர்கள் மூவகைச்சமூகங்களையும் சேர்ந்தவர்களாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்தவர்களாக உள்ளார்கள். இங்கு பாலின, மாற்றுத்திறன் சமவுரிமையும் கருத்திற்கொள்ளப்படுகின்றது.*

*நிலையான வளர்ச்சி இலக்கு எண் 4 ஏற்கனவே ஆண்டறிக்கை 2022 இல் பின்வருமாறு சேர்க்கப்பட்டுள்ளது.*

உயர்கல்விக்கான அணுகல்

பட்டப்படிப்புகளின் விபரங்கள், மாணவர் எண்ணிக்கை (தேர்ச்சியடைந்தோரும் தற்போது பின்பற்றுவோரும்), மாணவர்களின் ஆண்டுச்சேர்க்கைப்பிரிவு என்பன 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

உயர்கல்வியின் தரம் மற்றும் பொருத்தம்

தர உத்தரவாத நிலையம் உயர்கல்வியின் தரத்தையும் பொருத்தத்தையும் கையாள்கிறது. விபரங்கள் பிரிவு 3.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

முகாமைத்துவ முறைமைகளில் போதுமான தன்மை

மனித வளங்களுக்கு 1.6, SWOT பகுப்பாய்வுக்கு 2.1 என்றவாறு முகாமைத்துவ முறைமைகளில் போதுமான தன்மை பல பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வுப் புத்தாக்கமும் அறிவுப் பரிமாற்றமும்

ஆய்வுப் புத்தாக்கமும் அறிவுப்பரிமாற்றமும் பிரிவுகள் 3, 4, 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

உயிர்ப்பல்வகைமையும் சுற்றாடலும்

வவுனியாப் பல்கலைக்கழகம் இயற்கையாகவே வடமாகாணத்தின் வனப்பகுதிக்குள் அமைந்துள்ளது. இருப்பினும், கட்டடங்கள், விடுதிகள், விளையாட்டு மைதானம் போன்ற பல்கலைக்கழக உட்கட்டமைப்பை நிறுவுவதற்குக் குறிப்பிட்டளவு வனப்பகுதி அழிக்கப்பட்டாலுங்கூட, பல்கலைக்கழகம் 1.5 கிலோமீற்றர் சுற்றளவு கொண்ட 25 ஏக்கர் வனத்தைப் பாதுகாக்கிறது. மேலும், சில பெரிய மரங்களை வெட்டாது அப்படியே விட்டுள்ளது. தற்போது, இவ்வனத்தில் மான், காட்டுப்பன்றி, உள்ளூர் முயல், உள்ளூர்க் குரங்கு, சிறிய ஊனுண்ணும் பாலூட்டிகள், அழிந்து வரும் உள்ளூர் ஊர்வன, ஈரூடகவாழிகள், ஏராளமான முள்ளந்தண்டிலிகள் போன்றவை உள்ளன. மேலும், இவ்வன நிலம் வற்றாத நீர்ப்பாசனக் குளத்தையொட்டி அமைந்துள்ளதால், புலம் பெயரும் பறவைகள் உட்பட ஏராளமான பறவையினங்களை அஃது ஈர்க்கிறது.

தற்போதைய பல்கலைக்கழக வளாகத்தில் வேம்பு (அசாடிரக்டா இன்டிகா), பாலை (மணில்கரா ஹெக்ஸாண்ட்ரா), வீரை (டிரைபெற்றெஸ் செபியாரியா), விளா (லிமோனியா அசிடிசிமா), ஆல் (ஃபிகஸ் பெங்காலென்சிஸ்) போன்ற காடுகளில் இயற்கையாக வளரும் மரங்களுடன் நாட்டப்பட்ட மரங்களான மா, ஜம்பு போன்றனவும் காணப்படுகின்றன. இவை ஏற்கனவே பழங்களைத் தருகின்றன, அதைப் பல்கலைக்கழகச் சமூகம் சுதந்திரமாக அனுபவிக்கிறது. மிக முக்கியமான விடயம் யாதெனில், இங்கு வருகைதந்த ஒரு சுதேச மருத்துவர் பல்கலைக்கழக வளாகத்தில் ஏராளமாகக் காணப்படும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த அரிதான தாவரங்களை அடையாளம் கண்டார்.

தற்போதுள்ள சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

'சுற்றுச்சூழல் சமூகம் (ENSOC)' என்ற மாணவர் சங்கம் பல்கலைக்கழக வளாகத்தில் பொலித்தீன் பயன்பாட்டை ஒழிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

வவுனியாப் பல்கலைக்கழகம் இந்த வன நிலத்தில் உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாத்து அதனை முழுச் சமூகத்துக்கும் நாட்டுக்கும் வெளிப்படுத்துவதில் பெருமை கொள்கிறது. மேலும், இவ்வனப்பகுதி சுற்றுச்சூழல் விஞ்ஞானக் கற்கைநெறியைப் பயிலும் மாணவர்களுக்கான ஒரு வாழும் ஆய்வகமாகவும் திகழ்கிறது.

உயிரியல் விஞ்ஞானத்துறை ஏற்கனவே சுற்றுச்சூழல் சுற்றுலாக்கழகத்தை உருவாக்குவதன் மூலம் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாகப் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பாடசாலை மாணவர்கள் - குறிப்பாக ஆரம்பக்கல்வி மாணவர்கள் - பல்கலைக்கழகத்துக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடையே உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் உயிரியல் விஞ்ஞானத்துறை மாணவர்களால் முன்னெடுத்துச்செல்லப்படுகிறது.

பிரயோக விஞ்ஞான பீடத்தில் இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆய்வகத்தில் சூழல் நேயப் பரிகரிப்பு அலகு உருவாக்கப்பட்டது. கொரோனாத் தொற்றுநோய் இவ்வலகின் வேலைகள் முடிவுறுவதைத் தாமதப்படுத்தியிருந்தாலும் 2022 இல் இத்திட்டம் கணிசமான முன்னேற்றத்தை எட்டியது.

*சுற்றுச்சூழலுக்கு எதிரான தாக்கத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை*

மேற்படி திட்டத்தை மேலும் மேம்படுத்தப் பல்கலைக்கழகம் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளது. பல்கலைக்கழகத்திலுள்ள வனப்பகுதியானது பல்கலைக்கழக வளாகத்துக்கு வெளியே பரவியுள்ள வனத்தின் ஒரு பகுதியாகும். தற்போது, வெளியே பரவியுள்ள இவ்வனத்தையும் பெற்று, அதனைப் பல்கலைக்கழக வனப்பகுதியுடன் இணைத்து, பல்கலைக்கழகத்தின் சரணாலயமாக ஆக்கும் பணியைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. இது பலனளிக்கும் பட்சத்தில் இலங்கையில் சரணாலயத்தைக் கொண்ட முதலாவது பல்கலைக்கழகமாக வவுனியாப் பல்கலைக்கழகம் திகழும்.

இப்பல்கலைக்கழகம் ஏற்கனவே இயற்கையாகப் பசுமையாக இருப்பதனால் அதன் இயற்கையழகைப் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'சுற்றுச்சூழல் சமூகம் (ENSOC)' எனப்படும் மாணவர் சங்கம் பல்கலைக்கழக வளாகத்துக்குள் முறையற்ற பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க வழிகாட்டுகிறது.

*பேரிடர் தாக்க மதிப்பீட்டுப் பகுப்பாய்வு*

மேற்படி வனப்பகுதியை ஒரு சரணாலயமாக ஆக்குவதற்குப் பல்கலைக்கழகம் ஆர்வமாக உள்ளது, ஏனெனில் இதுவே இப்பிரதேசத்தில் உயிர்ப்பல்வகைமையைக் கொண்ட எஞ்சியிருக்கும் ஒரெயொரு வனப்பகுதியாகும். இவ்வனப்பகுதியையொட்டி அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் ஒரு கிலோமீற்றர் நீள வேலியின் அருகே வயல் நிலங்கள் காணப்படுவதனால் அதனூடாகத் தீ பரவும் அபாயம் உள்ளது. எனவே, இயற்கையாகவும் மனிதர்களாலும் ஏற்படும் தீ அபாயத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் வனப்பகுதியைப் பாதுகாக்க மேற்படி ஒரு கிலோமீற்றர் நீள வேலி வழியே தீ பரவல் தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. கழிவுநீர்ச் சுத்திகரிப்புக்காக உருவாக்கப்பட்ட ஈரநிலம், அந்நீரைச் சுத்திகரித்து அதனைத் தோட்டங்களுக்கும் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்த உதவியது.

# 9 நிதி அறிக்கைகள்

## 9.1 கண்ணோட்டம்

வவுனியாப் பல்கலைக்கழகம் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கையின் 17வது அரச பல்கலைக்கழகமாக ஸ்தாபிக்கப்பட்டது. எனினும், பல்கலைக்கழகத்தின் நிதிச் செயற்பாடு 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கையளிக்கப்பட்ட தொடக்க நிலுவைத்தொகையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியாப் பல்கலைக்கழகம் 2022 பெப்ரவரி 11 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட 110 மில்லியன் ரூபா மீண்டெழும் செலவீனத்திற்கான மானியத்தினுள் இந்த விழாவிற்கான கூடுதல் செலவினங்களை நாங்கள் முகாமைத்துவம் செய்துள்ளோம்.

மீண்டெழும் செலவீனத்தின் கீழ், மின்சாரம், இணையம், பாதுகாப்பு, சுத்தம் செய்தல் போன்ற ஒப்பந்தச்சேவைகளுக்காகப் பல்கலைக்கழகம் சுமார் 70 மில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளது. செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் தொடர்ச்சியான ஒதுக்கீட்டின் குறைப்பு ஆகியவை அரசாங்கச் செலவினத்தினை முகாமை செய்தல் சுற்றறிக்கை எண் 04/2022 இற்கேற்ப செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பல்கலைக்கழகத்தைத் தூண்டுகிறது. செலவினக் கூறுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்தப் பல்கலைக்கழகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் ஒவ்வொரு செலவினங்களுக்கான செலவு இயக்கிகளைக் கட்டுப்படுத்தி தீவிர சூழ்நிலையில், அவசர மற்றும் முக்கியமான நடவடிக்கைகளின் அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில், கிடைக்கும் நிதிக்கு ஏற்ப பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

உள்வாரியான வருமானம்

இப்பல்கலைக்கழகம் இவ்வருடத்தில் சுமார் 10.8 மில்லியன் இலங்கை ரூபாவை உள்வாரியான வருமானமாகப் பெற்றுள்ளது. இந்த வருமானம், மீண்டெழும் மானியத்திற்கும் மீண்டெழும் செலவினங்களிற்குமான இடைவெளியை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

மூலதன மானியங்கள்

பல்கலைக்கழகம் 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபா 75 மில்லியனை திறைசேரியிலிருந்து மூலதன மானியமாகப் பெற்றுள்ளது. இந்தத் தொகையில் 48.4 மில்லியன் ரூபாவை நூலகக் கட்டடத் திட்டத்திற்காக ஒதுக்கிச் செலவிட்டுள்ளோம். இந்தத் திட்டத்திற்கு முதலில் 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப வரவு செலவுத் திட்டம் இலங்கை ரூபாய் 90 மில்லியன் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. ஆயினும், மானியங்கள் குறைக்கப்பட்டதால், நடந்துகொண்டிருக்கும் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பகுதியளவில் பாதித்துள்ளது. மேலும், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சாம்பியன்ஷிப் 2022 இன் நடவடிக்கைக்கு நிதியளிப்பதற்காகப் பல்கலைக்கழகம் 2.5 மில்லியன் ரூபாவைப் பெற்றது.

AHEAD இலிருந்து கூடுதல் மாணவர் சேர்க்கைக்காகப் பல்கலைக்கழகம் இலங்கை ரூபாய் 105 மில்லியனை ஒதுக்கீடாகப் பெற்றுள்ளது. இந்த ஒதுக்கீடு கட்டுமான வேலைக்காக இலங்கை ரூபாய் 50 மில்லியன் மற்றும் உபகரணங்களுக்கான இலங்கை ரூபாய் 55 மில்லியன் எனப் பிரிக்கப்பட்டது. நாணயமாற்று விகிதம் அடுத்த அடுக்குக்குத் தாவுவதற்கு முன்பு நாங்கள் திறமையாக உபகரணங்களை வாங்கினோம் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பதற்கு முன்பு கணிசமான பணத்தைச் சேமித்தோம். அந்தந்த ஒதுக்கீட்டிற்கு எதிராக, உபகரணங்களுக்காக 52.8 மில்லியன் இலங்கை ரூபாயையும், கட்டுமானவேலைக்காக இலங்கை ரூபா 2 மில்லியனையும் நாங்கள் பெற்றுள்ளோம். இலங்கை ரூபாய் 3.7 மில்லியன் மதிப்பிலான கட்டுமானப் பணிகள் தவிர, AHEAD இலிருந்து போதிய நிதியுதவி இல்லாததன் விளைவாக வழங்கப்பட்ட கட்டுமானப்பணிகள் பின்னர் செயற்படுத்தப்படவில்லை. இந்த பில் தொகையான 3.7 மில்லியன் ரூபாய்கள் M/S தஸ்விகா இன்ஜினியரிங் கட்டுமானத்திற்கு இன்னும் செலுத்தவேண்டியுள்ளது.

*நிதி நிருவாகத் துறையின் கட்டமைப்பு*

*நிதி நிருவாகத்துறை இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. விநியோகம் மற்றும் கொடுப்பனவுப் பிரிவுகள் இரு உதவி நிதியாளர்கள் தலைமையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. உதவி நிதியாளர் விநியோகம், களஞ்சிய விநியோகம், விநியோகச் சேவைகள் மற்றும் திறைசேரி அல்லாத பரிவர்த்தனைகளைக் கையாளுகின்றார். மேலும் உதவி நிதியாளர் கொடுப்பனவு சம்பளம் மற்றும் இதர அனைத்துக் கொடுப்பனவுகளையும் கையாளுகின்றார். கணக்குப் பிரிவை நிதியாளர் கையாளுகின்றார்.*

*உதவி நிதியாளர் கொடுப்பனவு அடுத்த ஆண்டுக்குள் அவரது ஓய்வு வயதை எட்டப் போகிறார். அவர் ஓய்வு பெற்ற பிறகு நிதி-நிருவாகக் கட்டமைப்பில் மறுசீரமைப்பு தேவைப்படுகின்றது.*

*மென்பொருள் பயன்பாடுகள்*

*நிதி நிருவாகத்துறை தற்போது சம்பளம் மற்றும் கணக்குகளுக்கு PACK மென்பொருளைப் பயன்படுத்துகிறது. தற்போது களஞ்சியச் செயற்பாட்டில் உள்ள மென்பொருளை மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.*

*பல்கலைக்கழக மாணவர்கள் இப்போது களஞ்சியச் செயற்பாட்டிற்கான மென்பொருளை உருவாக்க முயலுகின்றனர்.*

*நிலையான சொத்துகள் பதிவுமேம்படுத்தப்பட்ட விரிதாளில் (excel) பராமரிக்கப்படுகிறது.*

*ஒரு துணைச்செயற்பாடாக, பல்கலைக்கழகத்தின் நிதி நிருவாகத்துறையானது வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முக்கிய செயற்பாடுகளுக்கு அதன் தொலைநோக்கு, பணி மற்றும் இலக்கை அடைவதற்கான சேவையை வழங்குகின்றது.*

## 9.2 நிதிக்கூற்றுகள்

*2022 டிசம்பர் 31ம் திகதியில் நிதி நிலைமைக்கூற்று*

| விபரங்கள் | குறிப்புகள் | 31 டிசம்பர் 2022 ல் | | 31 டிசம்பர் 2021 ல் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சொத்துக்கள் | | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 04 | 17,936,336.15 | | 11,195,388.59 | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள் | 05 | 69,563,086.89 | | 72,246,548.86 | |
| இருப்பு | 06 | 9,235,200.79 | | 6,528,313.30 | |
| குறுகிய கால முதலீடுகள் | 07 | 17,411,734.82 | | - | |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | | 114,146,358.65 | | 89,970,250.75 |
| | | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | | |
| நீண்ட கால முதலீடுகள் | 08 | 15,446,323.64 | | 10,304,550.86 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 09 | 1,711,628,659.44 | | 1,721,515,218.65 | |
| மூலதன நடைமுறை வேலை | 10 | 216,418,835.37 | | 157,333,187.50 | |
| மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | 1,943,493,818.45 | | 1,889,152,957.01 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 2,057,640,177.10 | | 1,979,123,207.76 |
| | | | | | |
| பொறுப்புகள் | | | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 11 | 22,777,997.73 | | 20,464,794.43 | |
| அட்டுறுச் செலவுகள் | 12 | 8,667,599.39 | | - | |
| சுயநிதி கற்கைகள் மற்றும் திட்டங்கள் | 13 | 6,581,915.60 | | 3,233,340.26 | |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | | 38,027,512.72 | | 23,698,134.69 |
| | | | | | |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 14 | 2,321,493.10 | | 1,857,993.10 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 114,589,112.25 | | 99,152,133.14 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 15 | 25,630,299.77 | | 7,872,203.40 | |
| மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | 142,540,905.12 | | 108,882,329.64 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 180,568,417.84 | | 132,580,464.33 |
| | | | | | |
| மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை | | | 1,877,071,759.26 | | 1,846,542,743.43 |
| | | | | | |
| சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | | | |
| திரட்டப்பட்ட நிதியம் (மூலதன மானியம்) | 16 | 694,653,297.69 | | 694,653,297.69 | |
| திரட்டப்பட்ட மிகை / பற்றாக்குறை | 16A | 27,112,150.78 | | - | |
| மொத்த சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | 721,765,448.47 | | 694,653,297.69 |
| | | | | | |
| ஒதுக்கம் | | | | | |
| பொது ஒதுக்கம் | 17 | 1,137,220,300.52 | | 1,138,568,796.51 | |
| பிணைமுறி பொறுப்பு ஒதுக்கம் | 18 | 18,086,010.27 | | 13,320,649.23 | |
| நிகர மீள் மதிப்பீடு - ஒதுக்கம் | 18A | - | | - | |
| மூலதன ஒதுக்கம் | | - | | - | |
| மொத்த ஒதுக்கம் | | | 1,155,306,310.79 | | 1,151,889,445.74 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | 1,877,071,759.26 | | 1,846,542,743.43 |

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம், பொருந்தக்கூடிய இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (SLPSAS) மற்றும் பல்கலைக்கழக அமைப்பில் நிலவும் ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை நான் சான்றளிக்கின்றேன்.*

*Mr.L.Ram Ramanan*
**Bursar**

L.Ram Ramanan
Bursar
University of Vavuniya
Sri Lanka.

N.Rajavisahan
Registrar
University of Vavuniya.
Sri Lanka.

*இந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு பேரவை உறுப்பினர்கள் பொறுப்பு. இந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.*

*Prof.T.Mangaleswaran*
Accounting Officer
**Vice Chancellor**

**Prof.T.Mangaleswaran**
Vice - Chancellor
University of Vavuniya
Vavuniya, Sri Lanka.

**Council Member**
Signed on behalf
of the Council

*2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயல்திறன் அறிக்கை.*

| விபரங்கள் | குறிப்பு | டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்து | டிசம்பர் 31, 2021 இல் முடிவடைந்தது |
|---|---|---|---|
| வருமானம் | | Rs. | Rs. |
| பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் – நடைமுறை | | | |
| மீண்டெழும் செலவினங்களுக்கான அரசு மானியம் | 19 | 544,000,000.00 | - |
| மாணவர் உதவித்தொகைககளுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மானியங்கள் | 22 | 31,916,000.00 | - |
| பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – நடைமுறை | | 575,916,000.00 | - |
| பரிவர்த்தனை மூலமான கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் - நடைமுறை | | | |
| ஏனைய வருமானம் | 21 | 10,784,457.31 | - |
| வருமானம் / செலவுகள். (மட்டுப்படுத்தப்பட்ட நிதி) | 20 | - | - |
| பல்கலைக்கழக மேம்பாட்டு நிதி | | - | - |
| பரிவர்த்தனை மூலமான கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – நடைமுறை | | 10,784,457.31 | - |
| மொத்த வருமானம் - நடைமுறை | | 586,700,457.31 | - |
| பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் – மூலதனம் | | | |
| மூலதனச் செலவினங்களுக்கான அரசு மானியம் | 19A | 146,025,004.20 | |
| பரிசு மற்றும் நன்கொடைகள் | 19B | 34,369,962.96 | - |
| பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – மூலதனம் | | 180,394,967.16 | - |
| மொத்த வருமானம் | | 767,095,424.47 | - |
| செயற்பாட்டு செலவுகள் - நடைமுறை | | | |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 23 | 434,332,179.32 | - |
| போக்குவரத்து | 23 | 437,005.41 | - |
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும் | 23 | 13,944,141.05 | - |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 23 | 7,879,707.30 | - |
| ஒப்பந்த சேவைகள் | 23 | 69,413,107.76 | - |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 23 | 23,283,642.78 | - |
| மாணவர்களுக்கான நிதியுதவி | 24 | 31,916,000.00 | - |
| பதிவழிப்புக்கள் | 25 | 11,926.86 | - |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 23 | 15,436,979.11 | - |
| மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள் | | 596,654,689.59 | - |
| தொழிற்பாட்டு நடவடிக்கையல்லாத செலவுகள் | | | |
| தேய்மானம் | 23 | 143,328,584.10 | - |
| மொத்தத் தொழிற்பாட்டு நடவடிக்கையல்லாத செலவுகள் | | 143,328,584.10 | - |
| மொத்தச் செலவுகள் | | 739,983,273.69 | - |
| ஆண்டுக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை). | | 27,112,150.78 | - |
| | | | |
| தேறிய மிகை / (பற்றாக்குறை) தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து – தற்போதைய | | (9,954,232.28) | - |
| மிகை / (பற்றாக்குறை) தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து – மூலதனம் | | 37,066,383.06 | - |

*கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் அங்கமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.*

*31டிசம்பர், 2022 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை*

| விளக்கங்கள் | குறிப் புகள் | 2022 |
|---|---|---|
| <u>செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்</u> | | Rs. |
| சாதாரண நடவடிக்கைகளில் இருந்தான மிகை /(பற்றாக்குறை). | | 27,112,150.78 |
| <u>காசில்லாத நடவடிக்கை</u> | | |
| தேய்மானம் | 9 | 143,328,584.10 |
| பரிசு மற்றும் நன்கொடை | 19 B | (33,236,092.32) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 23 | 15,436,979.11 |
| முந்தைய வருடச் சீராக்கம் | 17 | (1,348,495.99) |
| பதிவழிப்பு | 25 | 11,926.86 |
| ஆதன மற்றும் உபகரணங்களை அகற்றுதல் லாபம்/(இழப்பு) | 25 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கு மாற்றம் | 20 | - |
| இருப்பு(அதிகரிப்பு)/ குறைப்பு | 06 | (2,706,887.49) |
| வருமதி (அதிகரிப்பு)/ குறைவு | 05 | 2,683,461.97 |
| பல்கலைக்கழக மேம்பாட்டு நிதிக்கு மாற்றம் | | |
| செலுத்த வேண்டிய தொகையில் அதிகரிப்பு/(குறைவு). | 11,12 | 10,980,802.69 |
| திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகையில் அதிகரிப்பு/(குறைவு). | 14 | 463,500.00 |
| இயக்க நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | 162,725,929.71 |
| | | |
| <u>முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்</u> | | |
| ஆதன மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | 09 | (100,217,859.43) |
| நடமுறை மூலதன வேலையில்(அதிகரிப்பு)/ குறைவு | 10 | (59,085,647.87) |
| முதலீடுகள் | 07, 08 | (22,553,507.60) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | (181,857,014.90) |
| | | |
| <u>நிதி நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்</u> | | |
| மூலதனச் செலவினங்களுக்கான அரசு மானியம் | 16 | - |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | 15 | 17,758,096.37 |
| சுயநிதி படிப்புகள் மற்றும் திட்டங்கள் | 13 | 3,348,575.34 |
| பிணைப் பொறுப்பு நிதி | 18 | 4,765,361.04 |
| நிதி நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | 25,872,032.75 |
| | | |
| காசு மற்றும் காசிற்கு சமமான அதிகரிப்பு/(குறைவு). | | 6,740,947.56 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும் | 4 | 11,195,388.59 |
| ஆண்டின் ` முடிவில் காசு மற்றும் காசிற்கு சமமானவை | 4 | 17,936,336.15 |

டிசம்பர் *31, 2022* இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை

தொகை இலங்கை ரூபாயில்

| விபரங்கள் | மூலதன மானியம் | திரட்டப்பட்ட மிகை / பற்றாக்குறை | பொது ஒதுக்கம் | மீள்மதிப்பீட் டு ஒதுக்கம் | பிணைப் பொறுப்பு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| *31* டிசம்பர் *2021* நிலவரப்படி இருப்பு | 694,653,297.69 | - | 1,253,923,033.48 | (115,354,236.97) | 13,320,649.23 | 1,846,542,743.43 |
| மிகை / (பற்றாக்குறை) (குறிப்பு *26*) | | 27,112,150.78 | | | | 27,112,150.78 |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பரிமாற்றம் | | | | | | - |
| முந்தைய ஆண்டுச் சீராக்கம் | | | (1,348,495.99) | | | (1,348,495.99) |
| தேய்மானம் சரிசெய்தலுக்கான முந்தைய ஆண்டு ஏற்பாடு | | | | | | - |
| பிணைப் பொறுப்பு/இதர ஒதுக்கத்தில் அதிகரிப்பு | | | | | 4,765,361.04 | 4,765,361.04 |
| ஆண்டிற்கான மீள்மதிப்பீட்டுச் சீராக்கம் | | | | | | - |
| மூலதன மானியம் பெறப்பட்டது | | | | | | - |
| *31* டிசம்பர் *2022* நிலவரப்படி இருப்பு | 694,653,297.69 | 27,112,150.78 | 1,252,574,537.49 | (115,354,236.97) | 18,086,010.27 | 1,877,071,759.26 |

*டிசம்பர் 31இ 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாதீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகைகளின் ஒப்பீட்டு அறிக்கை*

| விளக்கங்கள் | பாதீடு | மேற்கொள்ளப்பட்ட செலவு |
|---|---|---|
| வருமானம் | | |
| மீண்டெழும் செலவினங்களுக்கான அரசு மானியம் | 570,000,000.00 | 544,000,000.00 |
| உள்வாரியான வருமானம் | 7,750,000.00 | 10,784,457.31 |
| மொத்த வருமானம் | 577,750,000.00 | 554,784,457.31 |
| நடைமுறைச் செலவீனம் | | |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 460,000,000.00 | 434,332,179.32 |
| போக்குவரத்துச் செலவுகள் | 350,000.00 | 437,005.41 |
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும் | 20,890,000.00 | 13,944,141.05 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 7,115,000.00 | 7,879,707.30 |
| ஒப்பந்த சேவைகள் | 66,055,000.00 | 69,413,107.76 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 23,340,000.00 | 23,283,642.78 |
| தேய்மானத்திற்கு முன் மொத்த நடைமுறைச் செலவுகள் | 577,750,000.00 | 549,289,783.62 |

## டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

1. பொதுவான தகவல்

### சட்ட மற்றும் நிறுவனப் படிவம்

இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகம், என்பது 1978 ஆம் 16ம் இலக்க ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 2231/5 வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1 ஆகஸ்ட் 2021 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுவப்பட்டது. இது இலங்கையின் வவுனியாவில், பம்பைமடுவில் அமைந்துள்ளது. பல்கலைக்கழகம் தற்போது 03 பீடங்களைக் கொண்டுள்ளது. வவுனியா பல்கலைக்கழகத்தின் நிதிச் செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக 1997 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை கணக்கிட்டு அறிக்கையிடப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு /SAA-BF/F4/JFN/2021 என்ற குறிப்பு எண்ணுடன் அக்டோபர் 4, 2021 திகதியிட்ட பல்கலைக்கழக மானியக் குழுக் கடிதத்தின் வழிகாட்டுதலின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஆகஸ்ட் 1, 2021 முதல் 31 டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்திற்கான கணக்கிட்டு அறிக்கையிடப்பட்டது. எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா பல்கலைக்கழகத்தின் தொடக்க நிலுவைகளை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதிக்கு வழங்கியது.

### நோக்கம்

இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகம் வியாபாரக் கற்கைகள், பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பக் கற்கைகள் ஆகிய பீடங்களினூடாக உயர் கல்வியை வழங்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவப்பட்டது.

### தயாரிப்புகளின் அடிப்படை

இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்படுவதுடன், தொடர்ச்சியாக வரலாற்றுக்கிரய அடிப்படையானது பிரயோகிக்கப்படுகிறது. டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கையின் யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தினால் ஒப்படைக்கப்பட்ட மீள்மதிப்புக் கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டின் அடிப்படையில் வவுனியாப் பல்கலைக்கழகக் கணக்கறிக்கை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

### நிதி அறிக்கையிடும் காலம்

இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடும் காலம் 1 ஜனவரி 2022 முதல் 31 டிசம்பர் 2022 வரையிலான பன்னிரண்டு மாதங்களைக் குறிக்கிறது.

### வெளியீட்டிற்கான அங்கீகாரத் திகதி

இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது 25.02.2023 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையின் 17 வது கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

2. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

### மாணவர் கட்டணத்திற்கான கணக்கியல்

மாணவர் பதிவுக் கட்டணம், கல்விக் கட்டணம் மற்றும் மருத்துவக் கட்டணம் ஆகியவை பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

### உதவித்தொகைக்கான மானியம்

மாணவர்களின் உதவித்தொகைக்கான மானியம்(Bursary), மீண்டெழும் மானியத்தின் கீழ் வருமானமாகக் காட்டப்படுகிறது, மேலும் 14/10/1987 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு /F/BUR/87 என்ற கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவால் இயக்கப்பட்டபடி, உதவித்தொகை செலுத்துவது நலச் சேவைகளின் செலவினமாகக் காட்டப்படுகிறது. மற்றும் நிதி செயல்திறன் அறிக்கையில் மாணவர்களுக்கு நிதி உதவி என ஒரு தனி உருப்படியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை சபை ஆகியவை மஹாபொலவை முழுமையாகக் கையாளுகின்றன.

### பணிக்கொடைக்கான ஏற்பாடு

1983 ஆம் ஆண்டின் 12ம் இலக்க பனிக்கொடைச் சட்டத்தின் அடிப்படையில் பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளியில் முதலீடு செய்வதற்கு திறைசேறி நிதி ஒதுக்கீட்டை வழங்காததால், பணிக்கொடைக்கான ஏற்பாடு முதலீட்டால் குறிப்பிடப்படவில்லை. ஜூன் 4, 2019 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 05/2019 இன் படி, 2019 ஆம் ஆண்டு ஜூன் 04 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கல்விசார் கொடுப்பனவுகள் மற்றும் மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்(MCA) ஆகியவை 1983ம் ஆண்டு பணிக்கொடை ஏற்பாடுகளின் கீழ் பனிக்கொடைகளுக்கான ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### பொருட்கள்

முதல் வந்தது முதல் வெளியே (FIFO) முறையின் அடிப்படையில் சரியான சீராக்கத்திற்குப் பிறகு பொருட்கள் குறைந்த விலையிலும் தேறக்கூடிய நிகர பெறுமதியிலும் குறிப்பிடப்படுகின்றன. நுகர்வுப் பொருட்களை கையகப்படுத்துவதற்கும், அவற்றை இருக்கும் இடம் மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஆகும் செலவை உள்ளடக்கியது. பல்கலைக்கழகத்தின் நுகர்வுப் பொருட்களில் எழுதுபொருட்கள், நுகர்பொருட்கள், இரசாயனங்கள், பராமரிப்பு மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

### மூலதன இயற்கையின் செலவு

இப்பல்கலைக்கழகத்தின் நிரந்தர தன்மையுடைய சொத்துக்களை விரிவுபடுத்துதல் அல்லது மேம்படுத்துவதற்காகச் செய்யப்படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

### வருமான அங்கீகாரம்

வருமானமானது வருடத்தில் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்ட மற்றும் பெறக்கூடிய பொருளாதார நன்மைகள் அல்லது சேவைகளின் மொத்த வரவுகளை உள்ளடக்கியது மற்றும் நிகர சொத்துக்கள்/உரிமையாண்மைகளின் அதிகரிப்பைக் குறிக்கிறது. பல்கலைக்கழகம் SLPSAS 10 (பரிமாற்ற பரிவர்த்தனைகளுக்கான வருவாய்) மற்றும் SLPSAS 11 (பரிமாற்றம் அல்லாத மாற்றங்களுக்கான வருவாய்) ஆகியவற்றின் நிறுவப்பட்ட அளவுகோல்களைப் பின்பற்றி வருமானம் கணிப்பிடப்படுகின்றது. சுயநிதி படிப்புகளின் வருமானம் மற்றும் செலவுகள் பண அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன. பிற நடவடிக்கைகளின் நிகர வருமானம் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது, மேலும் நிலுவைகள் அந்தந்த நடவடிக்கைகளின் தொடக்க இருப்பில் சேர்க்கப்பட்டு, நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் சுயநிதி படிப்புகளாக காட்டப்பட்டுள்ளன.

### செலவு அங்கீகாரம்

நிகழ்வு/திட்டம்/பொருள் வாரியாக செலவினங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழிகாட்டலின் அடிப்படையில் வெவ்வேறு செலவினத் தலைப்புகளின் கீழ் பகுப்பாய்வு வகைப்படுத்தப்பட்டது. பட்டப்படிப்புக் கல்வியைப் பொறுத்தமட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, நிதிச் செயல்திறன் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

### காசுப்பாய்ச்சல் அறிக்கை

மறைமுக முறையின் கீழ் SLPSAS- 02 காசுப்பாய்ச்சல் முறைமையைப் பின்பற்றி காசுப்பாய்ச்சல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### தேய்மானம்

சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர்கோட்டின் அடிப்படையில் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து. நிலங்கள் தேய்மானம் செய்யப்படுவதில்லை. 05/10/95 இன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை எண் 649 மற்றும் ஆணையச் சுற்றறிக்கை எண். 09/2022 ஆகியவற்றின் படி தேய்மானம் பின்வரும் விகிதங்களில் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| கட்டிடம் | 05% |
| அலுவலகத் தளபாடங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள் | 20% |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 20% |
| வாகனம் | 20% |
| அங்கிகள் | 20% |
| தொலைபேசி | 20% |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 10% |
| விளையாட்டுப் பொருட்கள்/ உபகரணங்கள் | 25% (09.05.2022 - 20% வரை) |

### பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

அறிக்கையிடல் திகதியில் உள்ள அனைத்து இனங்காணப்பட்ட பொறுப்புகளும் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன, மேலும் துல்லியமாகக் கணிப்பிட முடியாத பெறுமதி தவிர்ந்த் அனைத்துப் பொறுப்புகளுக்கும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 3. நிதி அறிக்கைகள் தொடர்பான பிற குறிப்புகள்

### தேய்மானம் மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய பற்றாக்குறை - 2022 ஆம் ஆண்டிற்கான நடப்பு ரூ.9,954,232.28 ஆகும், இதில் காசில்லா உருப்படியான பணிக்கொடை தொகை ரூ.15,436,979.11 ஆகும். எனவே, தொழிற்பாட்டு மிகை - நடைமுறை ரூ.5,482,746.83

செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய மிகை - 2022 ஆம் ஆண்டிற்கான மூலதனம் ரூ.37,066,383.06 ஆகும், இதில் காசில்லா உருப்படியான தேய்மானம் ரூ.143,328,584.10 ஆகும். எனவே, செயற்பாட்டு மிகை - மூலதனம் ரூ.180,394,967.16

### இழப்புக்கள் மற்றும் பதிவழிப்பு

2022 ஆம் ஆண்டில் பேரவையின் அனுமதியுடன் பின்வரும் இழப்புக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுக் கணக்குகளில் பிரதிபலிக்கப்பட்டன. ரூ.11,926.86 இழப்புகள் பதிவழிப்புச் செய்யப்பட்டன.

### அதிகரித்த செலவிலும் கூடிய வருமானம்

செலவுக்கு மேல் வருமானம் ரூ. 27,112,150.78 பின்வரும் காசில்லா உருப்படிகளை உள்ளடக்கியதால்ஏற்பட்டது.

1) நடைமுறையல்லாத சொத்துகளுக்கான தேய்மானம் ரூ. 143,328,584.10
2) பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூ. 15,436,979.11

*சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை*

*31.12.2021ல் உள்ளவாறான தொடக்க நிலுவை மற்றும் தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் தவிர்ந்த அனைத்து சொத்து வகைகளும் MIS Carter De Costa Corporate Services (Pvt) Ltd ஆல் செய்யப்பட்ட சொத்துக்களின் உறுதிப்படுத்தல் மற்றும் மறுமதிப்பீட்டின் அடிப்படையில் சரிசெய்யப்பட்டன. , 31.12.2014 அன்று நிலையான சொத்துகள் பதிவேட்டைத் தயாரிப்பதுடன், அவற்றின் சரிபார்ப்பு மற்றும் சொத்துகளின் மறுமதிப்பீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. மேலும், 2015, 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் யாழ் பல்கலைக் கழகக் கணக்குகளில் சேர்க்கப்பட்டு, வவுனியா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டில் சேர்த்தவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.*

*அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்*

*நிதியாண்டுக்குப் பின் நடக்கும் எந்தவொருப் பொருண்மையான நிகழ்வுகளும் இல்லை என்பதனால் நிதிநிலை அறிக்கைகளில் மேலதிக வெளிப்பாடு தேவையில்லை.*

*2022 நிதியாண்டிற்கான பரிசுகள் மற்றும் நன்கொடைகள்*

*பல்வேறுபட்ட நன்கொடையாளர்களினால் நன்கொடை வழங்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.*

| நன்கொடையாளர்கள் | தொகை ரூ. |
|---|---:|
| அவுஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளை | 3,319,397.50 |
| டாக்டர் மு. மலரவன் | 18,000.00 |
| திரு.த.சோதிலிங்கம் | 50,000.00 |
| பி.உதய ஷஷிப்ரிய எதிரிசிங்க | 46,500.00 |
| உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுச் செயற்பாட்டுத் திட்டத்தை துரிதப்படுத்துதல் செயற்றிட்டம் (AHEAD) | 30,667,360.46 |
| திருமதி. மெலிசா கிராஃபாம் | 184,530.00 |
| இன்ஜி. என்.ஸ்ரீஸ்கந்தராஜா | 38,780.00 |
| என்.தர்மராஜா | 3,370.00 |
| ஏ. கோபிகா | 400.00 |
| ஏ. நிரஞ்சனி | 450.00 |
| எஸ்.ஜே.இம்மானுவேல் | 800.00 |
| கே.ஸ்ரீகணேசன் | 700.00 |
| ஏ.அன்டன் அருள்ராஜா | 3,000.00 |
| கே.ஸ்ரீகணேசன் | 400.00 |
| ஏ.புஷ்பநாதன் | 900.00 |
| டி.சதாசிவம் | 7,650.00 |
| ஐ. சாந்தன் | 2,000.00 |
| திருமதி.டி.சதாசிவம் | 1,200.00 |

| நன்கொடையாளர்கள் | தொகை ரூ. |
|---|---:|
| எஸ்.ஆர்.எச்.ஹூல் | 495.00 |
| ஆர்.உதயணன் | 2,350.00 |
| மங்கள பொன்சேகா | 1,000.00 |
| திருமதி.ஏ.விஜயகுமார் | 500.00 |
| அருணா செல்லத்துரை | 600.00 |
| எம். தீவைன்சி | 500.00 |
| ஜி.ஜெகநாதன் | 1,500.00 |
| ந.நகுலேஸ்வரன் | 1,500.00 |
| எஸ்.சண்முகதாசன் | 500.00 |
| ஜே.அஹிலினி | 680.00 |
| கணேஷ்குமார் | 600.00 |
| எம்.பத்மநாதன் | 900.00 |
| ப.மாணிக்கவாசகம் | 1,200.00 |
| எம்.திலகராஜா | 2,300.00 |
| பேராசிரியர் எஸ்.சிவேசன் | 1,550.00 |
| இன்ஜி. (டாக்டர்) எஸ்.எஸ்.சிவகுமார் | 3,850.00 |
| இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL) | 4,500.00 |
| மொத்த மதிப்பு | 34,369,962.96 |

| நிதி நிலைமைக்கூற்றுக்கான குறிப்புகள் | 2022 | 2021 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| குறிப்பு 04 காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | |
| வங்கி இருப்பு: மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 16,966,516.96 | 11,190,078.59 |
| வங்கி இருப்பு: திறைசேறி நிதி | 707,154.19 | - |
| முற்பண மீதி மற்றும் கையிருப்பிலுள்ள முத்திரை | 262,665.00 | 5,310.00 |
| | 17,936,336.15 | 11,195,388.59 |
| குறிப்பு 05 வர்த்தகம் மற்றும் பிற வருமதிகள் | | |
| ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவு | 16,043,571.97 | 16,270,575.48 |
| விநியோகங்கள் மற்றும் சேவைகளுக்கான முற்கொடுப்பனவு | 31,988,310.69 | 40,280,979.15 |
| கட்டிடங்களுக்கான முற்கொடுப்பனவு | 13,766,994.23 | 13,766,994.23 |
| ஏனையவை | 7,764,210.00 | 1,928,000.00 |
| | 69,563,086.89 | 72,246,548.86 |
| குறிப்பு 06 இருப்புக்கள் | | |
| இருப்புக்கள் – பிரதான களஞ்சியம் | 8,291,418.48 | 5,859,138.03 |
| தினைக்களத்திலுள்ள இருப்புக்கள் | 943,782.31 | 669,175.27 |
| | 9,235,200.79 | 6,528,313.30 |
| குறிப்பு 07 குறுகிய கால முதலீடுகள் | | |
| தேசிய சேமிப்பு வங்கி - பிடிகாசு நிலையான வைப்பு | 17,411,734.82 | - |
| | 17,411,734.82 | - |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/(குறைவு). | (17,411,734.82) | - |
| குறிப்பு 08 நீண்ட கால முதலீடுகள் | | |
| பாதுகாப்பு வைப்பு முதலீடு | 274,343.10 | 274,343.10 |
| நானாவித முதலீடு | 15,021,980.54 | 9,880,207.76 |
| துணைவேந்தர் நலன்புரி நிதி | 150,000.00 | 150,000.00 |
| | 15,446,323.64 | 10,304,550.86 |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/(குறைவு). | (5,141,772.78) | (10,304,550.86) |

## நிதிநிலை அறிக்கைக்கான சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்கான குறிப்புக்கள் - 2022

### குறிப்பு 09 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் சொத்து, மற்றும் உபகரணங்களின் கிரயம்

| சொத்துக்கள் | 01.01.2022 இன் தொடக்க மீதி | சேர்ப்பனவு | பரிசு மற்றும் நன்கொடைகள் | செயற்பாட்டில் உள்ள வேலையிலிருந்து சேர்த்தல் | மீள்நிர்மணத்திலிருந்தான சேர்ப்பனவு | 31.12.2022 இன் இறுதி மீதி |
|---|---|---|---|---|---|---|
| காணிகள் | 85,500,000.00 | - | - | - | - | 85,500,000.00 |
| கட்டிடங்கள் | 1,722,478,142.88 | 7,023,420.26 | - | - | 13,062,012.50 | 1,742,563,575.64 |
| விளையாட்டு உபகரணங்கள் | 3,230,366.25 | - | - | - | - | 3,230,366.25 |
| அலுவலக தளபாடங்கள் | 63,455,904.74 | 9,099,514.48 | 3,992,531.00 | - | - | 76,547,950.22 |
| அலுவலக உபகரணங்கள் | 79,252,884.04 | 15,333,056.50 | 6,252,144.10 | - | - | 100,838,084.64 |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 222,521,159.83 | 55,215,759.58 | 22,692,785.36 | - | - | 300,429,704.77 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 21,235,450.00 | - | - | - | - | 21,235,450.00 |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 27,932,919.47 | 57,236.11 | 286,705.00 | - | - | 28,276,860.58 |
| மோட்டார் வாகனங்கள் | 26,235,509.98 | - | | - | - | 26,235,509.98 |
| அங்கிகள், பதக்கங்கள் | 154,750.00 | - | | - | - | 154,750.00 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | - | 350,000.00 | - | - | - | 350,000.00 |
| தொலைபேசி (தொடர்பு) | 397,730.00 | 76,860.00 | - | - | - | 474,590.00 |
| மொத்தம் | 2,252,394,817.19 | 87,155,846.93 | 33,224,165.46 | - | 13,062,012.50 | 2,385,836,842.08 |

### சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் திரட்டப்பட்ட தேய்மானம்

| சொத்துக்கள் | 01.01.2022 இன் தொடக்க மீதி | சேர்ப்பனவு | சிராக்கம் | 31.12.2022 இன் இறுதி மீதி |
|---|---|---|---|---|
| காணிகள் | - | - | - | - |
| கட்டிடங்கள் | 274,080,639.05 | 81,330,373.31 | - | 355,411,012.36 |
| விளையாட்டு உபகரணங்கள் | 2,516,764.78 | 231,423.53 | - | 2,748,188.31 |
| அலுவலக தளபாடங்கள் | 25,811,487.98 | 6,838,072.30 | - | 32,649,560.28 |
| அலுவலக உபகரணங்கள் | 52,667,590.72 | 13,076,929.26 | - | 65,744,519.98 |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 120,059,895.91 | 38,021,176.99 | - | 158,081,072.90 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 9,461,646.94 | 2,123,545.00 | - | 11,585,191.94 |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 21,946,803.34 | 1,100,144.99 | - | 23,046,948.33 |
| மோட்டார் வாகனங்கள் | 23,962,649.07 | 536,363.69 | - | 24,499,012.76 |
| அங்கிகள், பதக்கங்கள் | 20,181.09 | 30,950.00 | - | 51,131.09 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | - | - | - | - |
| தொலைபேசி (தொடர்பு) | 351,939.66 | 39,605.03 | - | 391,544.69 |
| மொத்தம் | 530,879,598.54 | 143,328,584.10 | - | 674,208,182.64 |

### சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தக மதிப்பு

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி 01.01.2022 இன் படி | இறுதி மீதி 31.12.2022 இன் படி |
|---|---|---|
| காணிகள் | 85,500,000.00 | 85,500,000.00 |
| கட்டிடங்கள் | 1,448,397,503.83 | 1,387,152,563.28 |
| விளையாட்டு உபகரணங்கள் | 713,601.47 | 482,177.94 |
| அலுவலக தளபாடங்கள் | 37,644,416.76 | 43,898,389.94 |
| கருவிகள் மற்றும் இயந்திரங்கள் | 11,773,803.06 | 9,650,258.06 |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 5,986,116.13 | 5,229,912.25 |
| மோட்டார் வாகனங்கள் | 2,272,860.91 | 1,736,497.22 |
| அங்கிகள் | 134,568.91 | 103,618.91 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | - | 350,000.00 |
| தொலைபேசி | 45,790.34 | 83,045.31 |
| மொத்தம் | 1,721,515,218.65 | 1,711,628,659.44 |

| | | |
|---|---|---|
| குறிப்பு *10* நடந்து கொண்டிருக்கும் வேலை | | |
| ஆரம்ப மீதி | *141,644,776.90* | *141,644,776.90* |
| மீள்நிர்மாண - வேலை நடந்து கொண்டிருக்கிறது | *15,688,410.60* | *15,688,410.60* |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான சேர்ப்பனவு | *59,085,647.87* | - |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான மாற்றம் (கட்டிடம்) | - | - |
| | *216,418,835.37* | *157,333,187.50* |
| குறிப்பு *11* செலுத்த வேண்டியவை | | |
| நானாவித கடன் வழங்குபவர்கள் | *22,032,048.80* | *19,486,305.30* |
| ஏனையவை | *745,948.93* | *978,489.13* |
| | *22,777,997.73* | *20,464,794.43* |
| குறிப்பு *12* அட்டுறுச் செலவுகள் | | |
| அட்டுறுச் செலவுகள் | *8,367,599.39* | - |
| அட்டுறுக்களுக்கான ஏற்பாடுகள் | *300,000.00* | - |
| | *8,667,599.39* | - |
| குறிப்பு *13* சுயநிதி கற்கைகள் மற்றும் திட்டங்கள் (செலுத்த வேண்டியவை) | | |
| *ICICVC* – வருமானம் | *1,551,847.82* | *1,701,601.45* |
| *VCARS* – வருமானம் | *16,768.50* | *16,768.50* |
| *M.E.D (Dev.Fund -Batch IV)* வருமானம் | *170,616.06* | *236,616.09* |
| *VCIRS* – வருமானம் | *414,200.79* | *414,200.79* |
| வன்னி தொழில் சந்தை *2018* வருமானம் | *25,000.00* | *25,000.00* |
| ஆய்வு மாநாடு- *F/* வணிகக் கற்கைகள் *(RCBS)* | *24,160.17* | *59,670.17* |
| ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி கற்பித்தலில் சான்றிதழ் கற்கைநெறி | *367,083.00* | *367,083.00* |
| சர்வதேச ஆய்வு மாநாடு-வவுனியாப் பல்கலைக்கழகம் *2021* | *61,495.00* | *346,500.00* |
| பகிடிவதை மற்றும் *SGBV*யை எதிர்த்துப் போராடுவதற்கான தலையீடுகள் | *28,900.26* | *28,900.26* |
| உதவித்தொகை திட்டம் -பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | *(50,000.00)* | - |
| தகுதியான மாணவர்களுக்கு உதவித்தொகை | *252,015.00* | - |
| வவுனியாப் பல்கலைக்கழகம் நல்லிணக்க மையத்திற்கான வருமானம் | *464,820.00* | - |
| தொழில் வழிகாட்டல் பட்டறை | *233,680.00* | - |
| நிலப்பரப்பு மற்றும் பசுமைச் சூழலின் வளர்ச்சி | *135,000.00* | - |
| மூலிகை மற்றும் இயற்கை பூங்கா திட்டத்தை நிறுவுதல் | *391,950.00* | - |
| ஆய்வு மாநாடு- பிரயோக விஞ்ஞானம் *(RARS 2022)* | *7,769.00* | *37,000.00* |
| குறைபாடுகளுக்கான ஆதரவு மையம்- வருமானம் | *576,000.00* | - |
| *M.E.D* (மேம்பாட்டு நிதி -தொகுப்பு *VI)* வருமானம் | *1,851,200.00* | - |
| ஆய்வு மாநாடு- *F/TS (RCA*தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப *- 2022)* வருமானம் | *93,600.00* | - |
| வெள்ளி விழா கொண்டாட்டம் *FAS* | *(34,190.00)* | - |
| | *6,581,915.60* | *3,233,340.26* |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு | *3,348,575.34* | *3,233,340.26* |

குறிப்பு 14 செலுத்த வேண்டியவை

| மீளச்செலுத்த வேண்டிய வைப்புத்தொகை | | |
|---|---|---|
| பாதுகாப்பு வைப்பு (பணியாளர்கள்) | 280,993.10 | 279,993.10 |
| ஆய்வுகூடம். வைப்பு | 1,900,500.00 | 1,458,000.00 |
| மீளச்செலுத்த வேண்டிய சிற்றுண்டிச்சாலை வைப்பு | 140,000.00 | 120,000.00 |
| | 2,321,493.10 | 1,857,993.10 |

குறிப்பு 15 மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் விசேட நிதி

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி நிதி | 1,652,062.30 | 1,584,347.33 |
| மீள்சுழற்சிச் சேமிப்பு முதலீட்டு வட்டி | 1,336,662.64 | 1,112,366.06 |
| பரிசுகள் மற்றும் நன்கொடைகள் | 4,640,911.64 | 4,640,911.64 |
| துணைவேந்தர் நல நிதி | 588,928.37 | 534,578.37 |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி (பிடிகாசு) 15.1 | 17,411,734.82 | - |
| | 25,630,299.77 | 7,872,203.40 |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு | 17,758,096.37 | 7,872,203.40 |

15.1 - மட்டுப்படுத்தப்பட்ட நிதி (பிடிகாசு)

2021 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கட்டிட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் காசோலையாக செலுத்த வேண்டிய பிடிகாசுப் பணம் வழங்கப்பட்டது. இது 31 டிசம்பர் 2021 இல் உள்ள பரீட்சை மீதியில் சேர்க்கப்படவில்லை.

குறிப்பு 16 திரட்டிய நிதி (மூலதன மானியம்)

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்ட மூலதன மானியம் | 571,212,955.03 | 571,212,955.03 |
| செலவழிக்கப்படாத மூலதன மானியம் | - | - |
| மூலதன செலவினத்திற்கான பங்களிப்பு | 66,711,175.30 | 66,711,175.30 |
| மூலதனப் பெறுகை | 56,729,167.36 | 56,729,167.36 |
| | 694,653,297.69 | 694,653,297.69 |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு | - | 694,653,297.69 |

16A திரட்டப்பட்ட மிகை /(பற்றாக்குறை)

| | | |
|---|---|---|
| | - | - |
| ஆரம்ப மீதி | 27,112,150.78 | - |
| நடப்பு ஆண்டு மீதி | | - |
| தேய்மானம் சரிசெய்தலுக்கான முந்தைய ஆண்டு ஏற்பாடு | - | - |
| | 27,112,150.78 | - |

குறிப்பு 17 பொது ஒதுக்கம்

| | | |
|---|---|---|
| ஆரம்ப மீதி | 1,253,923,033.48 | 1,253,923,033.48 |
| அதிக வருமானம்/செலவுகள் (மிகை) | - | |
| முந்தைய ஆண்டுச் சீராக்கம் | (1,348,495.99) | |
| நெகிழ்த்தலுக்கு முன் மீதியை நிறைவு செய்தல் | 1,252,574,537.49 | 1,253,923,033.48 |

| | | | |
|---|---|---|---|
| மூலதனக் குறைப்பு | - 17.2 | (115,354,236.97) | (115,354,236.97) |
| இறுதி மீதி | | 1,137,220,300.52 | 1,138,568,796.51 |

17.2 - மூலதனக் குறைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மறுமதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட மூலதனக் கழிவுகளை வெளிப்படுத்த மறுமதிப்பீட்டு ஒதுக்கம் எதுவும் இல்லை.

| | | |
|---|---|---|
| குறிப்பு 18 கடன்முறிப் பத்திர ஒதுக்கம் | | |
| பெறப்பட்டது | 14,097,660.81 | 9,869,208.02 |
| பெற வேண்டியது | - | - |
| பெறப்பட்ட வட்டி | 3,988,349.46 | 3,451,441.21 |
| | 18,086,010.27 | 13,320,649.23 |
| ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு | 4,765,361.04 | 13,320,649.23 |

| | | |
|---|---|---|
| குறிப்பு 18A மறுமதிப்பீட்டு – ஒதுக்கம் | | |
| மறுமதிப்பீட்டு ஆரம்ப மிகை | - | - |
| மறுமதிப்பீட்டு தேறிய பற்றாக்குறை | | |
| | - | - |

| நிதி செயல்திறன் அறிக்கைக்கான குறிப்புகள் | 2022 Rs. | 2021 Rs. |
|---|---|---|
| குறிப்பு 19 – மீண்டெழும் செலவிற்கான மானியம் | | |
| திறைசேறியிலிருந்து மானியம் | 544,000,000.00 | - |
| | 544,000,000.00 | - |
| குறிப்பு 19 A - மூலதன மானியம் | | |
| மாநிலத்தை வலுப்படுத்தும் மானியம் | - | - |
| தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புக்கான நிதி | - | - |
| கலை நூலகத்தின் நிலையை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் IT செலவிடப்பட்டது | 13,713,913.00 | - |
| மேலதிகமாணவர் சேர்க்கை | 54,811,091.20 | |
| மூலதன மானியம் | 77,500,000.00 | - |
| | 146,025,004.20 | - |
| குறிப்பு 19 B – நன்கொடை | | |
| நலம் விரும்பிகளிடமிருந்து புத்தகங்கள் நன்கொடை | 286,705.00 | - |
| நலம் விரும்பிகளிடமிருந்து உபகரணங்கள் நன்கொடை | 50,000.00 | - |
| ஆஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளையின் நன்கொடை | 1,315,000.00 | - |
| நலம் விரும்பிகளிடமிருந்து ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் நன்கொடை | 46,500.00 | - |
| AHEAD இலிருந்து நன்கொடை – சொத்துக்கள் | 30,667,360.46 | - |
| மூலதனச் செலவு ஆஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளையில் இருந்து சேகரிக்கப்பட்டது | 2,004,397.50 | - |
| | 34,369,962.96 | - |
| குறிப்பு 20 - ஏனைய செயற்பாடுகளின் தேறிய வருமானம்/(செலவுகள்). | | |
| | - | - |
| | - | - |
| குறிப்பு 21- பிற வருமானம் | | |
| முதலீட்டில் இருந்து வட்டி | - | - |
| கடன்கள் மற்றும் முன்பணத்திலிருந்து வட்டி | 635,375.57 | - |
| சொத்துக்களிலிருந்து வாடகை | 1,009,840.00 | - |
| விடுதி வாடகை | 2,799,800.00 | - |
| பதிவு கட்டணம் – பட்டதாரிகளுக்கானது | 455,250.00 | - |
| மருத்துவ கட்டணம் | 654,650.00 | - |
| தேர்வு கட்டணம் – பட்டதாரிகளுக்கானது | 821,750.00 | - |
| நூலகத் தண்டப்பணம் | 4,510.00 | - |
| நானாவித பற்றுச்சீட்டுக்கள் | 4,320,536.74 | - |
| வழக்கொழிந்த பொருட்களின் விற்பனை | 82,745.00 | - |
| | 10,784,457.31 | - |
| குறிப்பு 22 மாணவர்களுக்கு நிதி உதவிக்கான மானியம் | | |
| உதவித்தொகை (Bursary) | 31,916,000.00 | - |
| மஹாபொல திறைசேரி கூறு | - | - |
| மஹாபொல அறக்கட்டளை கூறு | - | - |
| | 31,916,000.00 | - |
| குறிப்பு 23 செயற்பாட்டுச் செலவுகள் (விவரங்கள் 23A இல் காட்டப்பட்டுள்ளன) | | - |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 434,332,179.32 | - |
| போக்குவத்து | 437,005.41 | - |
| வழங்கல்கள் | 13,944,141.05 | - |
| பராமரிப்புக்கள் | 7,879,707.30 | - |
| ஒப்பந்த சேவைகள் | 69,413,107.76 | - |
| தேய்மானம் | 143,328,584.10 | - |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 15,436,979.11 | - |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 23,283,642.78 | - |
| | 708,055,346.83 | - |

*குறிப்பு 24 மாணவர்களுக்கு நிதி உதவிக் கொடுப்பனவு*

| | | |
|---|---|---|
| *உதவித்தொகை (Bursary)* | *31,916,000.00* | - |
| *மஹாபொல திறைசேரி கூறு* | - | - |
| *மஹாபொல அறக்கட்டளை கூறு* | - | - |
| | *31,916,000.00* | - |

*குறிப்பு 25 நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள்*

| | | |
|---|---|---|
| பதிவழிப்புக்கள் | *11,926.86* | - |
| | *11,926.86* | - |

*குறிப்பு 26 மிகை/(பற்றாக்குறை)*

| | | |
|---|---|---|
| *மிகை /(பற்றாக்குறை)* | *27,112,150.78* | - |
| *மட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கு மாற்றுதல்* | - | - |
| | *27,112,150.78* | - |

பொருளின் அடிப்படையில் உண்மையான செலவு - 2022

| பொருள் குறியீடு | | பொருளின் தலைப்பு | உண்மையான செலவு - 2022 | உண்மையான செலவு - 2021 |
|---|---|---|---|---|
| 1 | | தனிப்பட்ட ஊதியங்கள் | 434,332,179 | 361,216,018 |
| | 1101 | (I) சம்பளம் மற்றும் ஊதியம் | 169,425,401 | 139,530,199 |
| | | (II) ஓய்வூதியம் 08% | 18,135,456 | 16,429,609 |
| | | (III) UPF பங்களிப்பு | 24,159,948 | 21,711,428 |
| | | (IVஊ.ரு.நிதி பங்களிப்பு 03% | 8,458,330 | 7,628,209 |
| | | (V) பணிக்கொடை கொடுப்பனவுகள் | 3,475,548 | 1,334,244 |
| | 1102 | மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் | 1,602,935 | 1,722,907 |
| | 1103 | (I) 20% சிறப்பு சம்பளம் | 24,182,639 | 21,763,042 |
| | 1103 | (II) மாதாந்திர கொடுப்பனவு | 12,942,561 | - |
| | 1106 | வருகைதரும் விரிவுரை கட்டணம் (பிரயாணம் உட்பட) | 1,475,768 | 639,172 |
| | 1108 | மாதாந்திர இழப்பீடு கொடுப்பனவு (MCA) | 24,519,560 | 23,268,784 |
| | 1109 | (I) ஏனைய கொடுப்பனவுகள் (தலைவர்கள், பீடாதிபதி ஏனையவை.) | 868,298 | 635,695 |
| | | (II) உபகாரப்படி | 1,657,811 | 1,264,287 |
| | 1112 | (I) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு (CLA) | 20,205,492 | 18,893,929 |
| | | (II) தற்காலிகக் கொடுப்பனவு | 357,689 | 273,532 |
| | 1115 | கல்வி உதவித்தொகை | 94,418,952 | 81,890,467 |
| | 1117 | 35% ஆய்வு கொடுப்பனவு | 22,123,360 | 19,890,885 |
| | 1127 | சொத்துக் கடன் வட்டி | - | 156,309 |
| | 1128 | போக்குவரத்து கொடுப்பனவு | 5,556,875 | 3,280,143 |
| | 1131 | தொடர்பு கொடுப்பனவு | 765,557 | 903,177 |
| 2 | | பயணச் செலவுகள் | 437,005 | 198,020 |
| | 1201 | போக்குவரத்துச் செலவுகள் (உள்நாட்டு) | 256,343 | 32,960 |
| | 1202 | போக்குவரத்துச் செலவுகள் (வெளிநாட்டு) | 180,662 | 165,061 |
| 3 | | பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் (வழங்கல்கள்) | 13,944,141 | 12,570,110 |
| | 1301 | எழுதுபொருள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 3,589,630 | 2,991,586 |
| | 1302 | எரிபொருள் மற்றும் லூப்ரிகண்டுகள் | 5,597,575 | 1,787,417 |
| | 1303 | சீருடை (தையல் கட்டணங்கள் உட்பட) | 266,795 | 140,986 |
| | 1304 | (I) இயந்திர மற்றும் மின்சார பொருட்கள் | 1,481,764 | 3,295,773 |
| | | (II) இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 265,555 | 66,660 |
| | 1305 | மருத்துவ பொருட்கள் | 1,074,266 | 376,820 |
| | 1309 | ஏனைய பொருட்கள் | 1,668,557 | 3,910,867 |
| 4 | | சிறிய திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 7,879,707 | 3,863,427 |
| | 1401 | சிறிய பழுது மற்றும் பராமரிப்பு | | |
| | | (I) வாகனங்கள் | 1,635,418 | 1,263,829 |
| | | (II) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2,467,589 | 1,625,913 |
| | 1402 | சிறிய பழுது மற்றும் பராமரிப்பு | | |
| | | (I) கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்பு | 3,712,750 | 903,684 |
| | | (II) தளபாடங்கள் | 41,320 | 70,000 |
| | | (III) மற்றவை | 22,630 | - |

| பொருள் குறியீடு | | பொருளின் தலைப்பு | உண்மையான செலவு - 2022 | உண்மையான செலவு - 2022 |
|---|---|---|---|---|
| 5 | | ஒப்பந்த சேவைகள் | 69,413,108 | 50,596,483 |
| | 1501 | போக்குவரத்து | - | - |
| | 1502 | தொடர்பு | | |
| | | (i) தொலைத்தொடர்பு | 10,811,386 | 9,127,883 |
| | | (ii) தபால் கட்டணம் | 405,706 | 225,450 |
| | 1503 | பயன்பாடுகள் | | |
| | | (i) மின்சாரம் | 17,470,397 | 9,210,540 |
| | | (ii) நீர் | 40,518 | 39,542 |
| | 1504 | வாடகை மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 1,651,588 | 756,100 |
| | 1505 | வீதங்கள் மற்றும் உள்ளூர் வரிகள் | 519,829 | 496,744 |
| | 1506 | அச்சிடுதல் மற்றும் விளம்பரம் | | |
| | | (i) அச்சிடுதல் | 2,173,040 | 628,199 |
| | | (ii) விளம்பரம் | 755,167 | 1,216,674 |
| | 1507 | ஏனைய ஒப்பந்த சேவைகள் | | |
| | | (i) பாதுகாப்பு சேவைகள் | 22,120,067 | 18,546,158 |
| | | (ii) சுத்தம் செய்யும் சேவைகள் | 12,907,960 | 10,092,393 |
| | | (iii) ஏனைய சேவைகள் | 557,450 | 256,800 |
| 6 | | ஏனைய தொடர் செலவுகள் | 23,283,643 | 10,070,675 |
| | 1601 | சந்தா, பங்களிப்பு மற்றும் உறுப்பினர். கட்டணம் – உள்ளூர் | 100,000 | 250,000 |
| | 1602 | சந்தா பங்களிப்பு மற்றும் உறுப்பினர். கட்டணம் – வெளிநாட்டு | 144,818 | 85,031 |
| | 1607 | கல்வி ஆய்வு மற்றும் வெளியீடுகள் | - | |
| | 1608 | சுய அபிருத்தி -பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்கு | 392,000 | 75,100 |
| | | - கருத்தரங்குகள் | - | |
| | 1609 | மற்ற அமைப்பிற்கு மானியங்கள். (இதர தொடர். மானியங்கள்) | 316,965 | |
| | 1610 | விருதுகள் மற்றும் இழப்பீடுகள் | 10,000 | |
| | 1611 | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் | - | |
| | 1612 | விடுமுறை ஆணைச்சீட்டுக்கள் மற்றும் பருவகாலச் சீட்டுக்கள் | 293,990 | 20,600 |
| | 1613 | சிறப்பு சேவைகள் | - | |
| | | (I) கணக்காய்வு கட்டணம் | 300,000 | |
| | | (II) பேரவை உறுப்பினர் கட்டணம் போன்றவை, | 2,215,968 | 791,500 |
| | 1614 | (I) பட்டமளிப்பு | - | |
| | 1615 | பொழுதுபோக்கு செலவுகள் | 1,813,125 | 298,126 |
| | 1616 | (I) ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 6,087,697 | 3,785,383 |
| | | (II) வங்கி கட்டணங்கள் | - | |
| | 1617 | தேர்வு செலவுகள் | 8,401,835 | 4,721,185 |
| | 1618 | முதுகலை ஆய்வு மற்றும் உதவித்தொகை | - | |
| | 1619 | மாணவர்களுக்கான பாடப் பொருள் மற்றும் கற்றல் தர மேம்பாடு | - | |
| | 1620 | தொழில் பயிற்சி, நடைமுறை மற்றும் தொழில் வழிகாட்டுதல் | - | |
| | 1621 | ஊழியர்கள். ஆசிரியர்கள், நிர்வாகி மற்றும் பிற பணியாளர்களுக்கான பயிற்சி | 1,857,915 | 15,000 |
| | 1622 | மாணவர் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் சமூக உறவுகள் | - | |
| | 1623 | பல்கலைக்கழக விளையாட்டு நடவடிக்கைகள் | 1,130,900 | 28,750 |
| | 1624 | மாணவர் நலன், பணியாளர்கள் நலன், மாணவர் பேரவைகள் மற்றும் சமூக நல்லிணக்கம் | - | |
| | | பணியாளர் நலன் மற்றும் மருத்துவக் காப்பீடு | - | |
| | 1625 | கூட்டுறவுத் திட்டமிடல், ஆளுகை மற்றும் எல்லை | - | |
| | | சொத்துக் கடனுக்கான வட்டி மானியம் | 218,430 | |
| பல்கலைக்கழக துணை கொடுப்பனவு மற்றும் வருவாய் மூலம் செலவு | | | 548,989,784 | 438,514,732 |
| | | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 114,657,604 | 77,298,714 |

## 10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

*கடித எண். NPCG/VN/D/UOV/01/22*

*கடிதத் தேதி. 04 அக்டோபர் 2023*

*துணைவேந்தர்,*

*வவுனியாப் பல்கலைக்கழகம்*

*இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) இன் அடிப்படையில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் உட்பட வவுனியாப் பல்கலைக்கழகத்தின் விவகாரங்கள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.*

---

*மேற்குறிப்பிட்ட அறிக்கை 04 அக்டோபர் 2023 அன்று 03 மொழிகளில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இணையதளத்தில் அதற்கான மென் பிரதிகள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.*

*டபிள்யூ.எம்.பி.ஏ.பொன்சேகா*

*துணை கணக்காய்வாளர் நாயகம்*

*கணக்காய்வாளர் நாயகத்திற்காக*

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வவுனியா பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதுகலைக் கற்கைகளிற்காக வெளிநாடு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் இரண்டு உத்தியோகத்தர்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தியடைந்த பின்னர் மீண்டும் கடமைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. எனினும், 2022 திசெம்பர் 31 வரை ரூபா 22,679,125 கூட்டுமொத்த தொகையான பிணைமுறிகளை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் சரியான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | இந்த ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவில் இருந்து இந்த நிலுவையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிணைமுறி உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| நிதிப்பிரமாணம் 571 | ரூபா 1,254,831 தொகையான மீளளிக்கக்கூடிய ஆய்வுகூட வைப்புக்கள், பதவியணியினர் பிணை வைப்பு, நிறுத்திவைத்தல் பணம் மற்றும் சிற்றூண்டிச் சாலை கேள்வி வைப்பு என்பன 02 முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தீர்க்கப்படாமல் இருந்தன. | மீளளிக்கக்கூடிய வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பிரிவு** | மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியணியினரிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 289,076,447 தொகை வருகை மற்றும் புறப்படுதல்களை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டுள்ளது. | கல்விசார் பதவியணியினர் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவதில்லை என்பது அரச பல்கலைக்கழக முறைமையில் உள்ள பொதுவான நடைமுறையாகும். | தாபன விதிக் கோவையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை** | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவது 2022 திசெம்பர் 31 வரை இடைநிறுத்தப்பட வேண்டிய போதிலும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 1,000,000 தொகை இடர் கடனாக வழங்கப்பட்டுள்ளது. | இடர்கடன் நிதியானது ஒரு சுழற்சி நிதியாக உள்ளதைக் கருத்தில்கொண்டு, கடன் அறவீட்டில் இருந்து அனைத்து இடர் கடன்களும் செலுத்தப்பட்டன. | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆம்** | பல்கலைக்கழகத்தால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 27 பரீட்சைகள் தொடர்பான பெறுபேறுகளை | மூதவை மற்றும் பேரவை முடிவுகளை வெளியிடும் மாதாந்த முன்னேற்றத்தை கண்காணித்து | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| **இலக்க சுற்றறிக்கை** | வெளியிடுவது 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலம் தாமதமடைந்திருந்ததுடன், 15 பரீட்சைகளின் பெறுபேறுகள் 2023 மார்ச் 29 வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலஎல்லைக்குள் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 27,112,151 மிகையொன்றாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு குத்தகை உடன்படிக்கைகளையும் ஏற்படுத்தாமல் அல்லது கட்டணம் எதுவும் அறவிடப்படாமல் இரண்டு அரச வங்கிகளின் இரண்டு தானியங்கி இயந்திரங்கள் பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளன. | ஆரம்பக் கட்டத்தில் வாடகையை தள்ளுபடி செய்வதற்கு வங்கிகள் கோரிக்கை விடுத்தன. எனவே, வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், காணி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் வங்கியில் இருந்து காணிக்கான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்திற்கான வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பல்கலைக்கழகம் அமைந்துள்ள 65 ஏக்கர் பரப்பளவிலான காணியின் சட்டரீதியான உரித்துரிமையை கோருவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | வவுனியா பல்கலைக்கழகம் காணியின் சட்டரீதியான உரித்துரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர் நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இச் செயன்முறை பேரவையால் கண்காணிக்கப்பட்டு, அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அவ்வப்போது கூட்டங்களை நடாத்துகிறது. | காணியின் உரித்துரிமையை பல்கலைக்கழகத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## *10.1 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆளும் அதிகார சபையின் அவதானிப்பு.*

*திகதி: 28 ஆகஸ்ட் 2023*

*தலைமைக் கணக்காய்வு அதிகாரி,*
*தேசிய கணக்காய்வு அலுவலகம்,*
*எண். 306/72,*
*பொல்துவா சாலை,*
*பத்தரமுல்ல,*
*இலங்கை.*

*குறிப்பு: 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12வது பிரிவின்படி, 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.*

*31 மே 2023 திகதியிட்ட NPCG/VN/D/வவுனியாப் பல்கலைக்கழகம்/1/22 இல் குறிப்பிடப்பட்டுள்ள தெளிவுபடுத்தல், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் குறித்த விரிவான மேலாண்மை கணக்காய்வு அறிக்கையை அனுப்புகிறது. இந்த அறிக்கை கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு மற்றும் கவுன்சிலில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *கணக்காய்வு கருத்து.*
- *கருத்துக்கான அடிப்படை*

*2.2.2 பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை*

*a) நிதி விதிமுறைகள் 571*

- *பட்டப்படிப்பை முடித்த மாணவர்களிடமிருந்து திரும்பப்பெறக்கூடிய ஆய்வக வைப்புத்தொகையை வருமானமாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மற்றும் பட்டப்படிப்பை முடித்த பின்னர் பட்டப்படிப்பைத் தொடரும் தற்போதைய மாணவர்களின் வைப்புத்தொகைக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*
- *யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர்களின் மீளப்பெறக்கூடிய பணியாளர் பாதுகாப்பு வைப்புத்தொகை மற்றும் அவர்களின் கோரிக்கையின் பேரில் பணம் செலுத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*
- *கோரப்படாத திரும்பப்பெறக்கூடிய கேன்டீன் வைப்புத்தொகையை வருமானமாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*b) தேசிய வரவு செலவுத்திட்ட எண் 03/2022 26 ஏப்ரல் 2022 சுற்றறிக்கை.*

- *துயரக் கடன் நிதியானது ஒரு சுழல் நிதியாகக் கருதி, கடனை வசூலிப்பதில் இருந்து அனைத்து துன்பக் கடன்களும் செலுத்தப்பட்டன. இந்தக் கடன்களுக்காக இந்த ஆண்டு கருவூலத்தில் இருந்து எந்த நிதியும் பயன்படுத்தப்படவில்லை. எனவே, பல்கலைக்கழகம் கடன் வசூலைப்*

பயன்படுத்துவதைப் புரிந்துகொண்டது, இப்போது ஊழியர் தர அதிகாரிகளுக்கு நெருக்கடிக் கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளோம்.

c) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வியின் ஸ்தாபனக் குறியீட்டின் XX அத்தியாயத்தின் பிரிவு 03.

- கல்வி ஊழியர்கள் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடாமல் இருப்பது மாநில பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பொதுவான நடைமுறை. மாற்றாக, கல்வி ஊழியர்களுக்கான பணி நெறிமுறையை நாங்கள் ஏற்கனவே நிறுவியுள்ளோம், மேலும் பொறுப்புக்கூறல் மாதிரியை உருவாக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

d) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 14 ஜூலை 1995 திகதியிட்ட சுற்றறிக்கை எண். 636

- கோவிட் 19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையை கடைபிடிக்கவில்லை. செனட் மற்றும் கவுன்சில் முடிவுகளை வெளியிடும் மாதாந்திர முன்னேற்றத்தை கண்காணித்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தேர்வு முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.5 ஏனைய விடயங்கள்

- நில மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் நிலத்திற்கான வாடகையை வங்கியில் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
- இரண்டு ஊழியர்களிடமிருந்தும் கீழ்க்கண்டவாறு பத்திர மதிப்பை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- செல்வி. தரணி (கல்வி சாரா ஊழியர்) ஏற்கனவே UPF இருப்பு LKR-ல் இருந்து மீட்க ஒப்புதல் அளித்துள்ளார். 495,690.00
- செல்வி. துஸ்யந்தி (கல்வி சார் ஊழியர்) UPF இருப்பு, பணிக்கொடை மற்றும் சம்பளப் பகுதிகளிலிருந்து மீண்டு வருகிறார். பணியாளர் பத்திரத்தை செலுத்த ஒப்புக்கொண்டதால், நிலுவைத் தொகையை இலங்கை ரூபாய் செலுத்துமாறு பல்கலைக்கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. மே 02, 2023 அன்று சமமான பன்னிரண்டு தவணைகளுடன் ஒரு வருடத்திற்குள் 22,183,434.90.
- நிலத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது.
- சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேராசிரியர் த. மங்களேஸ்வரன்
துணைவேந்தர்,
வவுனியாப் பல்கலைக்கழகம்.